# நபிகள் நாயகம் வழியில்



எஸ். எம். கமால்

367

# நபிகள் நாயகம் வழியில்

ஆசிரியர்

**Dr. S.M. கமால்**

வெளியீடு

சர்மிளா பதிப்பகம்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு,
இராமநாதபுரம் - 623 501.
தொலைபேசி: 220 443

# Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **NABIGAL NAYAGAM VAZHIYIL** |
| Author | : | Dr. S.M. KAMAL |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition<br>December, 2005 |
| Copy right | : | Author |
| Paper used for Text | : | Map Litho |
| Binding | : | Straw Board Binding |
| Types used | : | 11 point |
| Pages | : | 176 |
| Price | : | **Rs. 50.00** |
| Subject | : | History of Saint Syed Ibrahim Shaheed, the grand son of prophet Mohamed who preached Islam in the Pandya Country 1188 to 1198 AD (Religion) |
| Publishers | : | Sharmila Publishers<br>21 - Esa Pallivasal Street,<br>Ramanathapuram - 623 501.<br>Phone : 220 443 |

# இறைவாழ்த்து

உருவுக்கு முருவா யோங்கு முயிருக்கு முயிரா யுள்ளார்
கருவுக்குங் கருவாய் நீண்ட கருத்துக்குங் கருத்தாய் மீறு
மருவுக்கு மருவாய் கற்றோர் வகைபிரித் துரைக்கு வுள்ள
பொருவுக்கும் பொருவா துற்ற புனிதனை வணங்கு
வாமே.

மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர்
(தீன்நெறி விளக்கத்திலிருந்து காப்புச் செய்யுள்)

கீழக்கரை ஜும்ஆமஸ்ஜிதின் கத்தீப்; இராமநாதபுரம் ஜில்லா ஷரீஅத் கவுன்சில் செயலாளர்; மௌலானா

**அல்ஹாஜ், எம்.ஏ. அஸ்மத்ஹுஸைன் அலிம்**

## அணிந்துரை

"மாட்சிமை மிகும் நபிகுலத்தில் தோன்றிய செல்வர்
மாதவமுயர் ஸய்யிதஹ்மத் ஒலிதவப் புதல்வர்
மாமதிபோ லுதித்த மகா மகத்துவத் தலைவர்
மாமணியாம் ஸய்யிதிப் ராஹீம் குத்புல்லாஹ்"

என கீழக்கரை டவுண்காஜி முஹம்மது இப்ராஹீம் நூரிய்யி பாடியிருப்பது போல், மகத்துவம் நிறைந்த மாதவச் செல்வர், ஏர்வாடி நாயகர் சுல்த்தான் ஸய்யித் இப்ராஹீம் ஷஹீத் ஒலியின் எழில்மிக்க வரலாறு - இது.

இராமநாதபுரம் தமிழ்ச்சங்க நிறுவனரும், தொன்மை வரலாற்று ஆய்வாளர்களின் முன்னோடிகளில் ஒருவராகவும் மதிக்கப்படுகின்ற டாக்டர் S.M. கமால் அவர்கள் இதனை எழுதியிருப்பது மிகவும் பொருத்தமாகும். முஸ்லிம் தமிழ் வரலாற்றுத் துறை எழுத்தாளர்களுக்கிடையில் தூர நோக்கு பாரபட்சமற்ற முறையில் இலக்கியப்போக்கின் படிப்படியான வரலாற்றுத்தகவல்களை அதன் யதார்த்த அடிப்படை ஆதாரங்களுடன் சமர்ப்பிப்பதில் தன்னிகரில்லாப் பெருமைக்குரியவர் டாக்டர் S.M. கமால் அவர்களே. இஸ்லாமியத் தமிழ் இலக்கியப்பணியை ஒரு தவம் போல் நிறைவேற்றுகிற தாகமும் வேகமும் இருப்பதால்தான், தளர்வுற்றிருக்கும் உடல் நிலையிலும் தனது இஸ்லாமியத் தமிழிலக்கியத்திருப்பணியின் மற்றுமொரு மகத்தான படைப்பாக

**நபிகள் நாயகம் வழியில்...** எனும் இந்த நன்னூலையும் அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதில் மிகவும் பெருமிதமுறுகிறோம்.

சொல்லத்தக்க விஷயங்களை அளவறிந்து நீரோட்டமான நடையில் நிறைந்த தகவல்களை அடுக்கிக்கொண்டே செல்லும்பாங்கு சரித்திரவாசிப்பில் ஆர்வம் கொண்டவர்களின் நெஞ்சை கொள்ளைகொள்ளும் என்பது நிச்சயம். செய்திகளின் அந்தந்தப் பக்கங்களில் அடிக்கோடிட்டு வரலாற்று ஆதாரநூல்கள், கல்வெட்டுக்குறிப்புகள், ஆங்காங்கே இடம் பெற்றிருப்பது நூலின் தரத்தை மேம்படுத்துகிறது.

இஸ்லாமிய ஏகத்துவக் கொள்கைக்கு ஒத்திருப்பதான "ஒன்றே குலம் ஒருவனே தேவனும்" என்ற தமிழ் மரபுவழியின் பூர்வாங்க இறைமைக்கோட்பாடு இணைக்கப்படுத்திப் பேசப்படும் இடங்கள் தமிழ்முஸ்லிம்களுக்குப் பெருமிதமூட்டுவதாகும்.

பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டமான சேதுநாட்டுடையோரின் பழம்பெருமைமிக்க சரித்திரப் பின்னணியிலமைந்த ஊர்களின் பெயர்களையும் அவர்களின் கலாச்சாரப் பண்பாட்டையும் விவரிக்கும் பகுதிகளை வாசிக்கும் இப்பகுதிமக்கள், தொன்மைவரலாற்றுடன் தங்களைப் பிணைக்கின்ற தொடர்புகளை எண்ணி அகமகிழாதிருக்க முடியாது !

இந்த நூலில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ள அழகான வர்ணனைகளும் ரசித்துப் படித்துப் பாராட்டத்தக்கதாகும்.

உதாரணமாக ஒன்றிரண்டு மட்டும் இதோ, "கார்காலத்தில் கொழுத்த மீன்களைப் பிடித்துத் தின்பதற்காகப் புறப்படும் நாரைக் கூட்டம்போல அந்தத்தோணிகள் வரிசையாக அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

"விண்ணை மறைத்து வளர்ந்து வரிசையாக நிற்கும் தென்னை மரங்கள் அந்தக்குழுவினருக்கு வரவேற்பு நல்குவதைப்போல் மாலைக்காற்றில் அசைந்துகாணப்பட்டன" போன்றவற்றைக்குறிப்பிடலாம்.

இந்நூலின் பயன்மிகுந்த மற்றொரு விஷயம், ஹிஜ்ரீ ஆண்டின் தேதிக்கு ஆங்கிலத்தேதிகள் அறியவும் ஆங்கிலத்தேதிகளுக்குச் சரியான ஹிஜ்ரி தேதிகளை கண்டறியும் முறைமைகளுக்கான தகவல் களஞ்சியமே இதில் இணைக்கப்பட்டிருப்பதுதான்.

வரலாற்றின் ஆதார வரிசையில் மரபுக்கவிதைகளின் பங்களிப்பு பிரதான அடிப்படையாக மதிக்கப்படுவதுண்டு. இந்த வகையில் கீழக்கரை டவுன் காஜி அவர்களால் பாடப்பெற்ற கவிதைகள் இதனை நிறைவேற்றியிருக்கிறது.

சுல்த்தான் ஸய்யித் இப்ராஹீம் அவர்களின் வரலாற்றில் ஒன்றித்து வாசித்தபடி, அதனுடன் பயணித்துக் கொண்டிருக்கையில் "பாண்டியனால் வெட்டப்பட்ட சுல்த்தான் அவர்கள் வீர மரணம் எய்தினார்கள், மனிதகுலத்தில் மகத்தான இறைத்தூதராகவும் ஏகத்துவநெறி உலகெங்கும் பரவுவதற்கு அயராது பாடுபட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பேரனாரும், பாலைவனச் சோலையான அரபு நாட்டு மதினா மாநகரில் மலர்ந்த பாரிஜாத மலரான செய்யது இப்ராஹீம்

அவர்களது பொன்னுடலைப் புனித சேது நாட்டு மண் தாங்கிப் பொன்றாத புகழ்கொண்டது" என்றவரிகளைப் பயின்றபோது உள்ளம் விம்மிதமுற்று விழிகளில் நீர்த் திரையிட்டது! இவ்வாறு... உணர்வுளை மகிழ்விலாழ்த்தியும் நெகிழ்வினையூட்டியும் நிறைவான வரலாற்றுடன் பிணைத்து இழுத்துச் செல்லும் நற்றமிழ் நடையழகும், நனிசிறக்கும் சரித்திரச் சான்றுகளும் பொங்கிப் பிரவசிக்கும் "நபிகள் நாயகம் வழியில்" எனும் இந்நூல் படிக்கவும் பயிலவும் மட்டுமல்ல, பாதுகாக்கவும் வேண்டிய தென்பதை உணரலாம். திருக்குர்ஆன் விவரிக்கின்ற திருநபி (ஸல்) வாழ்வு சார்ந்த சிற்சில தவறான தகவல்கள் ஆசிரியரின் கவனத்தில் எவ்வாறு விடுபட்டதென்று தெரியவில்லை. உதாரணமாக முதல் ஆலயமான கஅபாவை இப்ராஹீம் நபி நிர்மாணித்தார் என்பதற்குப் பதிலாக மூசா நபி என விவரிக்கப்பட்டிருப்பது, நபித்துவத் திருப்பணிகுறித்து 23 ஆண்டுகளுக்கு மேலாக என்றிருக்க வேண்டிய இடத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக என்றிருப்பது, பதுருயுத்தத்தின் கைதிகள் விஷயத்தில் இடம் பெற்றுள்ள பெயர்த்தகவல், மற்றும் "ஹிந்தா" எனும் பெண்மணி மூலம் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு உஹதுப் போரில் ஏற்பட்ட அவலநிலையை பதுருப் போருடன் சம்பந்தப்படுத்தி விபரிக்கப் பட்டுள்ள விஷயங்களாகும். இவற்றை உணர்ந்து சரிகாணும் வாய்ப்பிருந்தால் ஒச்சமற்ற நூலாக இது மிகவும் மெச்சப்படத்தக்கதாகும்.

ஆசிரியரின் அரும்பணிதொடர அகமார வாழ்த்துவோம்.

இப்படிக்கு,

**எம்.ஏ. அஸ்மத் ஊசேன் ஆலிம்**

# பதிப்புரை

சேது நாட்டின் மறைக்கப்பட்ட வரலாற்றினைக் கடந்த இருபது ஆண்டுகளாக ஆய்வு செய்து வரும் நூலாசிரியர் இப்பொழுது கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சேது நாட்டிற்கு வருகை தந்த சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்கள், பவுத்திர மாணிக்கப் பட்டினத்தில் ஆட்சி செய்த பாண்டிய இளவலை வீழ்த்திவிட்டு இஸ்லாமிய ஷரிஅத் ஆட்சியை நிறுவிய விவரங்களையும் அன்னாரது தியாகத்தையும் வரலாற்று ஆதாரங்களுடன் இந்நூலில் தொகுத்துக் கொடுத்துள்ளார்.

ஆசிரியரது முந்தைய நூல்களைப் போன்று இந்த நூலும் வாசகர்களது ஆதரவைச் சிறப்பாகப் பெறும் என எண்ணுகிறோம்.

இந்த நூலின் மெய்ப்புகளைத் திருத்தி செப்பம் செய்து உதவிய தமிழ்ப்பேராசிரியர் திரு. மை. அப்துல் ஸலாம் அவர் களுக்கும், இந்த நூலின் அச்சுப்பணிகளை கண்காணித்து செவ்வனே முடித்த சென்னை ''முருகாலயம்'' திரு. எம். முத்துச்சாமி அவர்களுக்கும், இந்த நூலில் இணைப்பதற்கான ஒளிப்படங் களை வழங்கிய இராமநாதபுரம் முதுநிலை செய்தியாளர் திரு. எம்.எஸ். அல்லாபக்ஸ் அவர்களுக்கும் எங்களது ஆழிய நன்றி.

- சர்மிளா பதிப்பகத்தார்
இராமநாதபுரம்.

# பொருளடக்கம்


| இயல் | நூல்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தொடக்கம் | 9 |
| 2. | நபிகள் நாயகம் பேரனார் | 11 |
| 3. | நாயகம் பற்றிய சிந்தனையில் | 23 |
| 4. | தீன்மார்க்கத்தைப் பரப்பும் பணியில் | 36 |
| 5. | பயணம் தொடர்கிறது | 41 |
| 6. | பாண்டிய நாட்டின் அரசியல் சூழ்நிலை | 46 |
| 7. | புதிய சமயத்தைப் பரப்பும் பணி | 51 |
| 8. | மதுரைப் போர் | 60 |
| 9. | கிழக்குப் பகுதியில் இஸ்லாம் | 64 |
| .10. | இறுதிப்போர் | 72 |
| 11. | முஸ்லீம் சமய முன்னோடிகளில் முதல்வர் | 90 |
| 12. | வரலாற்று வழித்தடத்தில் | 97 |
| 13. | ஹிஜ்ரி ஆண்டைக் கிறிஸ்தவ சகாப்தத்துடன் கணக்கிடுதல் | 105 |
| 14. | நிறைவு வரிகள் | 127 |
| 15. | சுல்தான் செய்யது இபுராகிம் ஷகீது அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள நூல்கள் | 130 |
| 16. | கல்வெட்டு ஆதாரங்கள் | 149 |
| 17. | ஏர்வாடி தர்ஹா | 155 |


## இணைப்பு


| | | |
|---|---|---|
| 1. | சிறப்பான செய்திகள் | 173 |
| 2. | சில குறிப்புகள் | 175 |

## இந்தத் தொகுப்பினை எழுதுவதற்குத் துணையாக அமைந்த ஆவணங்கள்


1. A.S.I. Volume No. VII (1886)
2. The History of the Pandiya Country (1962) Dr. S.A.Q. Hussaini
3. The Concise History of Ceylon Dr. Parana Vithana and Nickelson
4. South India and her Muhamaden invadors 1928 - Dr. S. Krishnasamy Ayyangar
5. Foreign notices of South India (1948) - K.A. Neelakanda Shastri
6. Arab Geographers Knowledge about South India (1944) Dr. Mohammed Hussain Nainar
7. Economic conditions of Tamil Nadu (AD 1000 to 1300) Dr.A. Appadurai
8. Words on the Significance (1952) - R.P. Sethupillai.

9. பாண்டியர் வரலாறு (1981) குடந்தை என். சேதுராமன்

10. தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்குக் கோவை (1970) பதிப்பு - டாக்டர். ஆர். நாகசாமி

11. சுல்த்தான் ஷஹீது சரிதை (1953) மு.வ. முகமது இப்ராஹிம் லெப்பை.

12. தீநெறி விளக்கம் மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர்

# இயல் - I

## தொடக்கம்

வளமையும் செழுமையும் மிக்க பழந் தமிழகத்திற்குப் பல்வேறு நாடுகளிலிருந்து வணிகர்களும் பயணிகளும் சமயப் பிரச்சாரர்களும் பல காலங்களில் வந்து சென்றதை வரலாறு தெரிவிக்கின்றது. இவர்களில் வரலாற்றுக்கு அறிமுகமான தாலமி, பிளினி, பெரிப்பிளுஸ் ஆகிய கிரேக்க நாட்டு மாலுமிகள் சங்க காலத்திற்குப் பின்னர் தமிழகத்திற்கு வந்தனர். தமிழகத்தின் அரசியல் முறை . சமுதாய வாழ்க்கை, வணிகப் பொருட்கள் ஆகியன பற்றிய குறிப்புக்களை அவர்களது பயணக் குறிப்புக்களில் காண முடிகின்றது. இவர்களை அடுத்து கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் சீன நாட்டிலிருந்து பௌத்த மதத் துறவிகளான பாஹியான், யுவான் சுவாங் ஆகியோர்களது குறிப்புக்களும் தமிழக நாகரிகத்தையும் பண்பாட்டையும் தெரிவிக்கும் வரலாற்றுச் சான்றுகளாக அமைந்து விளங்குகின்றன. இவர்களது வருகையைத் தொடர்ந்து கி.பி. 1272-இல் சீனாவிலிருந்து வந்த உலகப் பயணி மார்க்கோ போலோவும் கி.பி. 1344-இல் சேது நாட்டுக்கு வந்த உலகப் பயணி இபுனு பதுதாவின் பயணக் குறிப்புகளும் சேது நாட்டு வரலாற்றிற்கு பெரிதும் உதவி புரிபவனாக உள்ளன. இன்னொரு அணியினரான இத்தாலி நாட்டுப் பாதிரியார் அந்தோணியோ கிரிமினாலிஸ் (1545) போர்ச்சுகல் நாட்டுப் பாதிரியாரான பிரான்சிஸ் சேவியர் (கி.பி. 1550

- 52) மற்றும் 17 - ஆம் நூற்றாண்டில் வருகை தந்த ஜான் - டி - பிரிட்டோ பாதிரியார் (கி.பி. 1685 - 93) மார்ட்டினஸ் பாதிரியார் (கி.பி. 1710 - 12) பயணக் குறிப்புகளும் நமது நாட்டின் வரலாற்று ஆவணங்களாக விளங்கி வருகின்றன.

இன்னொரு அணியினரான இஸ்லாமிய பிரச்சாரர்களும் வணிகர்களும் மத்திய ஆசிய நாடுகளிலிருந்து கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு முதல் சேதுநாட்டிற்கு வருகை தந்துள்ளனர். கால நீட்சியில் இவர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள், பயண வரைவுகள் ஆகியவை நமக்குக் கிடைப்பனவாக இல்லை. வர லாற்றிற்குத் தெரிந்த வரையில் இந்த இஸ்லாமியச் சமயப் பிரச்சாரகர்களில் முன்னோடியான சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் சேதுநாட்டிற்கு வருகை தந்த முதலாவது இஸ்லாமியப் பிரச்சாரகர் ஆவார். அன்னாரைப் பற்றிய இஸ்லாமிய வரலாற்று, நூல்களும், தமிழ் இலக்கியங்களும் வழக்கில் இருந்து வருகின்றன. ஆனால் இவைகளில் வரலாற்று ஆய்வாளர்களும் மற்றும் இஸ்லாமியர்களும் இதுவரை எவ்வித அக்கரையும் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளவில்லை. இந்தக் குறைபாட்டினை நிறைவு செய்வதன் வழியாக இந்தத் தொகுப்புரையை வரையத் தொடங்கியுள்ளேன்.

இது சம்பந்தமான இஸ்லாமிய நூல்களில் காணப்படும் காலவரையரை, அப்பொழுது பாண்டிய நாட்டில் ஆட்சி புரிந்த பாண்டியர்களது பெயர்கள், மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகளுக் கிடையில் பெருத்த வேறுபாடும் பொருத்தமற்ற செய்திகளும் காணப்படுகின்றன. என்றாலும் வரலாற்று ஆய்வாளன் என்ற முறையில் நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களையும், பாண்டியர் வரலாற்றையும் கல்வெட்டுக்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்தத் தொகுப்புரையினைத் தொடங்குகின்றேன்.

❖

# இயல் - 2

## நபிகள் நாயகம் பேரனார்

இந்தப் பூவுலகம் பரந்து விரிந்த பெரும் நீர்ப்பரப்பினால் சூழப்பட்டுள்ளது என்பதையும். இந்த நிலப்பரப்பு அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா என ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருப்பதையும் யாவரும் அறிவோம். இதில் அமெரிக்கக் கண்டமும், ஆஸ்திரேலியாக் கண்டமும் தனித்தனியான பெரும் தீவுகளாக அமைந்துள்ளன. எஞ்சிய மூன்று கண்டங்கள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா என்பனவற்றை இணைக்கும் தீபகற்பமாக அரபுத் தாயகம் அமைந்துள்ளது. கிழக்கே பாரசீக வளைகுடாவும் மேற்கே செங்கடலும், தெற்கே அரபிக் கடலும் இந்த தீபகற்பத்தைச் சூழ்ந்துள்ளன.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த நிலப்பரப்பு வடக்கே உள்ள பாலஸ்தீன நாட்டுடன் இன்றைய ஈராக், சிரியா, ஜோர்டான், ஈரான், இஸ்ரேல், பாலஸ்தீனம் என்ற சிறிய நாடுகளைக் கொண்ட பெரும் நிலப்பரப்பாக இருந்தது. மூன்று கண்டங்களுக்கும் இணைப்புப் பகுதியாகவும், மையப் பகுதியாகவும் இயற்கையிலேயே அரபுத் தாயகம் அமைந்து இருப்பதால் மனிதனது முதலாவது தோற்றத்தலமாகவும் இது கருதப்படுகிறது. கிறிஸ்தவ இஸ்லாமிய நூல்களின்படி முதல் மனிதன் ஆதமும் அவரது துணைவி ஹவ்வாவும் அங்கு வாழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றன.

பாலஸ்தீனப் பகுதி என்று அழைக்கப்பட்ட பெரும் நிலப்பரப்பில் யூதர்கள் என்ற இனத்தவர் வாழ்ந்து வந்தனர். தம்மைப் படைத்த எல்லாம் வல்ல இறைவனை மறந்து இன்பக் கேளிக்கைகளிலும், குடி, கொலை போன்ற பாவச் செயல்களிலும் அவர்கள் ஈடுபட்டு வந்தனர். இத்தகைய இழிந்த மக்களை அச்சமூட்டி நல்வழிப் படுத்துவதற்காக பல முறை தூதர்களை இறைவன் அங்கு அனுப்பி வைத்தார். அவர்களுள் குறிப்பிடத்தக்க நூஹு (அலைஹிவஸ்ஸல்லம்), மூஸா (அலைஹிவஸ்ஸல்லம்), தாவூது (அலைஹிவஸ்ஸல்லம்), இப்ராகிம் (அலைஹிவஸ்ஸல்லம்) சுலைமான் (அலைஹிவஸ்ஸல்லம்) போன்ற இறைத் தூதர்களும் இறைவன் கட்டளையை இதயத்தில் தாங்கியவர்களாக ஏக இறைவனை வழிபட்டு உய்வதற்கான வழிகளை அந்த மக்களுக்கு உபதேசித்து வந்தார்கள். அதன்பிறகு 3500 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்ராகிம் என்ற இடைக்குடி ஏந்தலை, அந்த மக்கள் உய்வு பெறுவதற்காக தமது பிரதிநிதியாக இறைவன் அனுப்பி வைத்தான். ஏகதெய்வ வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இந்த இளவல் முந்தைய அரபுத் தாயகத்தில் தமது மனைவி சாராவுடனும் சிறு குழந்தை இஸ்மாயிலுடனும் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். சிலை வணக்கத்தை ஒழித்து மூடப் பழக்கங்களிலிருந்து விடுபட்டு, நல்ல இறையடியார்களாக வாழும்படி மக்களிடம் போதித்து வந்தார்.

## *நபி நூஹ் (அலைஹிவஸ்ஸல்லம்) அவர்களின் வரலாறு*

இஸ்லாமிய வரலாறுகளில் இருந்தும் இறை மறையிலிருந்தும் நமக்குக் கிடைக்கும் இறைத் தூதரின் வரலாறு நபி நூஹ் (அலைஹிவஸ்ஸல்லம்) பற்றியதாகும். இவரது பிறந்தகம் பற்றிய தெளிவான தகவல்கள் இல்லையென்றாலும், பல நூற்றாண்டு களுக்கு முன்னர் ஏக தெய்வக் கொள்கையை தம் இதயத்தில் ஏந்தியவர்களாக அரபுத்தாயகத்தில் வாழ்ந்து வந்தார் எனத் தெரிய வருகிறது.

குடி, களவு, காமம் போன்ற பாவச் செயல்களில் அடிமைப் பட்டுக் கிடந்த அந்த அரபு மக்களிடையே ஆன்மீகத்தையும், அறிவார்ந்த நல்ல பண்புகளையும் பின்பற்றி நடக்குமாறு போதித்தார். இவரது 40-வது வயதில் இறைவன் இவரைத்தம் திருத்தூதர்களில் ஒருவராக அங்கீகரித்தான் என்பதை இறைமறைத்திரு வசனத்தின் மூலம் அறிகிறோம்.

பொல்லாதவர்களின் இழிவுச்சொற்களையும் முரடர்களின் வன்முறைத்தாக்குதல்களையும் பொறுமையாய் ஏற்றவராகப் பல நூறு ஆண்டுகள், இறைவனது ஏகத்துவ நெறியை அந்தமக்களிடம் உபதேசித்து வந்தார். இவரது குடும்பத்தினர் கூட இவரது உபதேசங்களை ஏற்கவில்லை. இந்நிலையில் இவர், மிகவும் தளர்ந்து அயர்ந்து தன் நிலைமையை இறைவனிடம் எடுத்துக் கூறியதுடன், அந்தப் பாவிகளது சமுதாயத்தை ஒட்டுமொத்தமாக அழித்தால்தான் உலகில் புனிதம், புண்ணியம், தர்மம், பக்தி ஆகிய சொற்களுக்குப் பொருள் ஏற்படும் எனத் தெரிவித்தார். இறைவனும் இவரது 900 - ஆண்டுகாலத் தொண்டினையும் இவரின் வேண்டுதலையும் ஏற்று ''இன்னும் ஒரு மாதத்தில் இந்தச் சமூக அமைப்பு அழிந்து விடும் ஆதலால் நீ விரும்பும், உம்மைச் சார்ந்துள்ள விலங்குகள், பறவைகள், மற்ற உயிரினங்கள் ஆகியவைகளைக் காப்பதற்காக மிகப்பெரிய தோணி ஒன்றினை இப்பொழுதிருந்தே தயாரிக்கத் தொடங்கும்!'' என ஆணையிட்டான்.

இறைவனது ஆணைப்படி இறைத் தூதரான நபி நூஹ் (அலைஹிவஸல்லம்) அவர்கள் ஒரு தோணியை அமைக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த ஊர் மக்கள் அனைவரும் இவரது, செய்கையைக் கண்டு ஏளனம் செய்தார்கள். இந்தத் தோணி தரையில் எப்படி மிதக்கும் என்று கேலி செய்தார்கள். குறித்த ஒரு மாதத்தில் இரண்டு மூன்று தளங்களுடன் கூடிய தோணியை நூஹ்நபி அவர்கள் கட்டி முடித்துவிட்டார்கள். அத்துடன் தம்மைச் சார்ந்துள்ள விலங்குகள், பறவைகள், உயிரினங்கள் அனைத்தையும்

அந்தத் தோணிக்குள் கொண்டுவந்து சேர்த்தார். சரியாக முப்பதாவது நாள் கிழக்குவானம் கறுத்துப் பெருமழை பெய்யத் தொடங்கியது. நபி நூஹு அவர்கள், தமது தோணியில் கொண்டு வந்து சேர்த்த எல்லா உயிரினங்களும் பத்திரமாக அந்தத் தோணிக்குள் இருந்தன. மழை வெள்ளம் பெருக்கெடுத்து நீர் மட்டம் உயர்ந்தவுடன் அந்தத் தோணி நீரில் மிதந்தது. நபி நூஹ் அவர்களின் சொல்லைக் கேட்காத மக்கள் அனைவரும் அந்த வெள்ளப் பிரளயத்தில் மூழ்கி இறந்துவிட்டனர்.

ஒரு துல்ஹஜ் மாதத்துடன் முடிந்த ஆறு மாதங்களாகத் தொடர்ந்து பெய்த மழை நின்று, சூரியனின் வெளிச்சம் உலகெங்கும் தெரிந்தது. மழை வெள்ளம் முற்றாக வடிந்து தோணி பூமியில் தரைதட்டி நின்றது நபி நூஹ் அவர்கள் அந்தத் தோணியிலிருந்து இறங்கி வெளியே வந்து பார்த்தபொழுது பழமையின் சின்னங்கள் எதுவும் இல்லை. தம் தோணியிலிருந்த விலங்குகளையும் பறவை களையும் மற்ற உயிரினங்களையும் அந்தப் புதிய பூமியில் வாழும் படி செய்தார்.

இந்தச் வெள்ளப் பிரவாகத்திற்குப்பின் 40 ஆண்டுகள் வரை நூஹ்நபி அவர்கள் வாழ்ந்து வந்ததாகத் தெரியவருகிறது. இறைவனது கட்டளையை ஏற்று ஏகத்துவத்தைப்பரப்பிய முதலாவது திருத்தூதர் நூஹ் நபி (அலைஹிவஸ்ஸல்லம்) ஆவார்கள். இன்னொரு வரலாற்றின்படி இவர் ஆதம் (அலைஹிவஸ்ஸல்லம்) அவர்கள் இந்த பூமிக்கு வந்து 1642 ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர் எனத் தெரிய வருகிறது.

# நபி மூஸா அலைஹிவஸ்ஸல்லம் வரலாறு

## நபிமார்களில் முக்கியமானவர்.

பனூ இஸ் ராயில் கூட்டத்தை வழிநடத்த அவர்களிடையே தோன்றியவர். இவருக்கு வல்ல இறைவன் தௌராத் எனும் வேதம் இறக்கினான். தௌராத் வேதம் அருளப்பட்டவர். இவருடைய தந்தையின் பெயர் இம்ரான். தாயாரின் பெயர் யூகானிது என்பதாகும்.

இவர் பிறந்த அன்று எகிப்து மன்னன் ஃபிர் அவ்ன் என்பவன் ஒரு கனவு கண்டான். அதை அரசாங்க ஜோதிடர்களிடம் கூறிக் கனவுப் பலன் கூறுமாறு கேட்டான். அதற்கு அவர்கள் பிர்அவ்ன் ஆட்சிக்கு முடிவுகட்டும் ஆண் குழந்தையொன்று பிறந்திருப்பதாகக் கூறினர். இதைக்கேட்டு வெகுண்ட மன்னன் பிர்அவ்ன் அன்று பிறந்த எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்று விடுமாறு தம்படை வீரர்களுக்கு ஆணையிட்டான். இதையறிந்த மூஸாவின் பெற்றோர் மனம் கலங்கி, பயந்து தம் குழந்தையை 'எப்படியாவது' காப்பாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தக் குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து பெட்டியோடு நைல் நதியில் விட்டு விட்டனர். அந்தப் பெட்டி அரண்மனைத் தோட்டத்தருகே ஒதுங்கியது. பிர்அவ்ன் குடும்பத்தினரே அந்தப் பெட்டியைக் கண் டெடுத்து திறந்து பார்க்கும் பொழுது, உள்ளே அழகான ஒரு ஆண் குழந்தை இருப்பதைக் கண்டார்கள் இந்தக் குழந்தையின் அழகில் மயங்கிய பிர்அவ்னின் மனைவி ஆஸியா என்பவள் தாமே அந்தக் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்க்க விரும்பினாள். மன்னன் பிர்அவ்ன் அந்தக் குழந்தையைக் கொல்லத்திட்டமிட்ட போது குழந்தை பெரிதாக இருப்பதால் இது, மன்னர் கனவு காண்பதற்கு முன்னதாகவே பிறந்திருக்கும் எனவே இக்குழந்தை

யால் மன்னரின் ஆட்சிக்குத் தீங்கு ஏதும் இல்லையெனக் கூறி அந்தக் குழந்தையைச் சாதுரியமாகக் காப்பாற்றிவிட்டார். அந்தக் குழந்தை அரண்மனையிலேயே சீரும் சிறப்புமாய் வளர்ந்தது. இக்குழந்தைக்கு மூஸா என்று பெயரிட்டனர். மூஸா என்பது ஹிப்ரு மொழிச் சொல்லாகும். மூ என்றால் நீர் என்று பொருள். ஸா என் பதற்கு மரம் என்பது பொருளாகும். நீரில் மரப்பெட்டியில் மிதந்து வந்த குழந்தையாதலால் மூஸா எனப் பெயரிட்டு அழைத்தனர்.

அரண்மனையில் வளர்ந்து வாலிப நிலையடைந்தார். ஒரு நாள் அரண்மனைக்கு அருகே ஏற்பட்ட சிறு சச்சரவில் எதிர்பாராமல் ஒருவனை மூஸா கொல்ல நேர்ந்தது. கொலைக்குற்றத் தண்ட ணைக்குப் பயந்து அரண்மனையை விட்டு மூஸா வெளியேறினார். வெளியேறிய அவர் மத்யன் என்ற இடத்திற்குச் சென்று அங்கு சுஐப் (அலை) அவர்களிடம் பத்து ஆண்டுகள் ஆடுமேய்க்கும் பணி யாற்றினார். அவரின் அன்பு மகள் சபுராவைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர் எகிப்து திரும்பும் வழியில் அவர் ஒரு நபி என்பது இறைவனால் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன் பிர் அவ்னை நேர் வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பும் இறைவனால் இவருக்குச் சுமத்தப்பட்டது. இறைக்கட்டளைப்படி பிர்அவ்ன் அரண்மனைக்குச் சென்று, மன்னனைக்கண்டார். தானே இறைவன் எனும் மன்னன் பிர்அவ்னின் ஆணவத்தையொழித்து, வல்ல இறைவன் ஒருவனே என்றும் அவனே வணங்குதற்குரியவன் என்றும் உபதேசித்தார். இதனைச் சிறிதும் ஏற்காத மன்னன், நபி மூஸா அவர்களுக்குப் பல வகையிலும் இன்னல்களை விளைவித்தான். இன்னல்களைப் பொறுக்கமட்டும் பொறுத்து, பொறுக்க முடியாத நிலையில் இறை வனின் ஆணைப்படி பனூ இஸ்ர வேலர்களுடன் வெளியேறினார். செல்லும் வழியில் செங்கடல் குறுக்கிட்டது. மூஸா அவர்கள் இறைவனின் ஆணைப்படி, தம் கைத்தடியை அடிக்க, செங்கடல் இரண்டாகப் பிளந்து நபி மூஸாவும் அவர்தம் கூட்டத்தார்களும் செல்ல வழி விட்டது. இவர்களைத் துரத்தி வந்த பிர்அவ்ன் படையினர் செங்கடல் நீரில் மூழ்கி இறந்துவிட்டனர்.

பிறகு நபி மூஸா சிரியா சென்றார். அங்கே மக்களை நல்வழிப்படுத்தும் பணிகளை மேற்க்கொண்டார். ஆனால் அவர்கள் ஏளனம் பேசினர். இறைவனின் சினத்திற்கு ஆளாகினர். இஸ்ர வேலர்களை மன்னிக்குமாறு இறைவனிடம் வேண்டவே, இறைவன் அவர்களை மன்னித்தான். பிறகு தூர்சினாய் மலை சென்றார். இறைவனுடன் உரையாடும் பேறுபெற்றார். இறைவனால் நபிமூசா அவர்களுக்குத் தெளராத்வேதம் அருளப்பட்டது. 150 வயது வரை நபிமூஸா வாழ்ந்து வந்தார் என அறியப்படுகிறது. சாமிரி என்பவனின் துர்போதனையால் இஸ்ர வேலர்கள் காளைமாட்டை உருவமாகச் செய்து வணங்கினர். நபிமூஸா அவர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்ததுடன், அந்த உருவச் சிலையை கடலில் தூக்கி எறிந்தார். இஸ்ர வேலர்களுக்கென உருவமில்லா தனி ஆலயம் ஒன்றினை அமைத்தார். ஒவ்வொரு சனிக்கிழமையும் இறை வணக்கம் செய்யப் பணித்தார். இறைவனுடன் நேருக்கு நேர் நின்று உரையாடும் வாய்ப்பை இவர் பெற்றதனால் நபிமூஸா அவர்கள், கலீமுல்லாஹ் எனப் போற்றப்பட்டார். இறைவனது கட்டளைப்படி இந்த இறைத்தூதர், அந்தப் பாலை வெளியில் இறைவனது வழிபாட்டிற்காகக் களி மண்ணிலாலான முதலாவது ஆலயம் ஒன்றை இறைவனுக்காக அமைத்தார். அத்துடன் மனித சஞ்சாரமற்ற அந்தப் பெரு வெளியில் உள்ள ஆலயத்திற்கு வந்து மக்கள் வழிபடும்படி இறைவனது கட்டளைப்படி உறக்கக் கூவி அழைத்தார். பக்கா என முன்னர் வழங்கப்பட்ட ஊர்தான் இன்றைய பெருநகரான மக்கா என்ற புனிதத்தலமாகும்.

தொடர்ந்து அரபுத் தாயகத்தின் ஏனைய பகுதிகளைப் போல இங்கு வாழ்ந்த அரபு மக்கள் அறியாமையிலும் மூடப் பழக்க வழக்கங்களிலும் மூழ்கியவர்களாக வாழ்ந்து வந்தனர். இவர் களிடையே எந்த விதமான சமூக அமைப்பும் இருக்கவில்லை. தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற முதுமொழிக்கு ஏற்ப இந்த மக்களில் மிருக பலமும் ஆள்சேர்க்கையும் உடையவர்களே பிற மக்களை ஆட்டிப்படைத்து வந்தனர். இவர்களுக்குத் தலைவராக விளங்குபவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்தனர்.

இவர்களது பொழுதுபோக்கு எல்லாம் மற்ற கூட்டத்தாரோடு வலுச் சண்டைக்குப் போவதும் வீணாக இரத்தம் சிந்துவதிலும் குடியிலும் கூத்திலுமாகக் கழிந்து வந்தது. குலப் பெருமை, கோத்திரத்தின் உயர்வு என்ற வீணான கற்பனைகளிலும், வாக்கு வாதங்களிலும் வாள்போர்களும் நடத்தி வந்தனர்.

இவர்களுக்கு இறை நம்பிக்கை, மனித குலம் உயிர்த்தெழுதல் என்பதெல்லாம் அறியாதனதாகும். மேலே சொல்லப்பட்ட கஃபா என்ற புனிதத் தலத்தில் 365 கற்களை நட்டு வைத்து நாளுக்கு ஒன்றாக ஆண்டு முழுவதும் தங்களது கடவுளாக வழிபட்டு வந்தனர். இந்த ஆலயத்தைச் சுற்றி ஆடை அணியாமல் விழாக் காலங்களில் பிரதட்சனம் செய்வதையும் புனித வழக்கமாகக் கொண்டிருந்தனர். விலங்கு வாழ்க்கையைப் போன்று காலம் கழித்து வந்த இந்த மக்களைத் திருத்துவது யார்? அறியாமையும் மௌட்டீகமும் நிறைந்த அறிவிலிகளான இந்த மக்களுக்கு மனத்தில் அறிவினைப் புகட்டுவது யார்? தங்களைப் படைத்த பரம்பொருளாகிய ஏக இறைவனை அறிந்து அறிவுப்பூர்வமாக வழிபாடு நடத்துவது எப்படி? இந்த வினாக்களுக்கு விடை தேடும் வேளையும் வந்தது.

## நாயகப் பேரொளி

இன்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நகரின் பெரும் குடிகளான வணிகர்கள் (குறைஷியரது) குலத்தில் கி.பி. 570 - இல் முகம்மது என்ற குழந்தையை இறைவன் தோற்றுவித்தான். அன்றைய அரபுத் தாயகம் அறியாமையிலும். மூடப் பழக்க வழக்கங்களிலும் கொடிய பாவச் செயல்களிலும் மூழ்கி இருந்தது. அந்த அறியாமைக் காலத்தை அரபு நாட்டு வரலாற்று ஆசிரியர்கள். ஐயாமுல், ஜாகிலீன் அல்லது இருண்ட காலம் என வர்ணித்துள்ளனர். இந்த மக்கள் தங்களது இயல்பான பாவச் செயல்களிலிருந்து மீட்சி பெற்று இறை நம்பிக்கையாளர்களாக மாற்றும் முயற்சியில் தமது கடைசி காலம் வரை இந்த

இளைஞர் முகம்மது பாடுபட்டார். இறைவனது இறுதித் தூது வராகவும் வழிதவறிய மக்களை நேர் வழியில் நடப்பித்த மிகச் சிறந்த வழிகாட்டியாகவும். சீர்திருத்த வாதியாகவும், இறைவனிடம் இருந்து அப்போதைக்கு அப்போதை பெற்ற வேத வெளிப் பாடுகளை உலகிற்கு உணர்த்திய உத்தமராகவும் இந்த. முகமது நபி (ஸல்லலாகு அலைஹிவஸ்ஸல்லம்) அவர்கள் போற்றப்பட்டார்கள், இன்றும் போற்றப்படுகிறார்கள்.

இவரது ஒரே மகள் பாத்திமாவின் வழியில் 18-வது தலை முறையில் பிறந்தவர் தான் செய்யது அஹமது என்ற சன்மார்க்கத் தொண்டராவார். இவர் இறுதித் தூதர். முகம்மது நபி அவர்களது போதனையையும் செயல் முறைகளையும் சிறப்பாகக் கடைப்பிடித்து ஒழுகி வந்தார். இவரது தந்தை மதினா நகரைச் சுற்றிய பகுதிக்குக் குறுநில மன்னராக இருந்து வந்ததால் அவரது நிர்வாக முறைகளிலும், அவருக்கு உதவி வந்தார். இவரது 25-வது வயதில் மதினா நகர் பெருங்குடியைச் சேர்ந்த சயிதாபாத்திமா என்ற பெண்மணியை மணந்திருந்தார். இவரது தந்தையார் செய்யது அப்துல் கபூர் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இயற்கை எய்தியதால். இளவல் செய்யது அஹமது பொறுப்பும் பொது நலப் பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஹிஜிரி 528ல் மதினா சுல்தானாக செய்யது அஹமது அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதால் மக்களின் தேவைகளையும் விருப்பத்தையும் நிறைவேற்றி வைக்கும் பணியில் தமது வாழ்நாளைக் கழித்து வந்தார்.

## சுல்த்தான் இபுராஹிம் பிறப்பு

இவருக்கு ஹிஜ்ரி 530 ரமலான் மாதம் 3 - ஆம் தேதி ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. மாநிலம் தனக்கோர் மணி விளக்காகப் பிறந்த மாபெரும் நபியின் பேரரான இந்தக் குழந்தைக்குப் பெற்றோர்கள் செய்யது இப்ராகிம் என்று அழகிய பெயரினைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்லல்லாகு அலைஹிவஸ்ஸல்லம்) அவர்களது ஒரே மகளான பாத்திமா நாச்சியாரது இரண்டு ஆண் மக்களில் இரண்டாமவரான ஹுசைன் ரலியல்லாஹி அவர்களது வழியில் 19-வது வழித் தோன்றலாக பிறந்தார்கள். இவர்களது முன்னோர்களது விவரம் கீழே வருமாறு.

1) கலீபா அலி (ரலியல்லாஹ்)

2) கலீபா அலியின் மகன் ஹுஸைன்

3) ஹுஸைன் அவர்களது மகன் ஜைனுல் ஆபிதின்

4) ஜைனுல் ஆபிதீனின் மகன் முஹம்மது பாகி

5) முகம்மது பாகியின் மகன் ஜகுபர் ஸாதிக்

6) மேற்படியாரது மகன் முஹம்மது

7) மேற்படியாரது மகன் ஜலாலுத்தீன்

8) மேற்படியாரது மகன் முஹம்மது கமால்

9) மேற்படியாரது மகன் தாவுது

10) மேற்படியாரது மகன் ஜமாலுல்கான்

11) மேற்படியாரது மகன் அபுல்ஹுசைன்

12) மேற்படியாரது மகன் இஸ்மாயில் கரீம்

13) மேற்படியாரது மகன் முஹம்மது நஸுருன்

14) மேற்படியாரது மகன் அப்துல் ஜமால்

15) மேற்படியாரது மகன் அப்துல்கபூர்

16) மேற்படியாரது மகன் அஹ்மது

17) மேற்படியாரது மகன் இப்ராகிம்

இந்தப் பரம்பரை பற்றிய விபரங்களைக் காயல்பட்டிணம் ஆலிம் செய்கு அப்துல் காதில் காதிரி என்பவர் அறிவித்துள்ளார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்த இந்தக் குழந்தை விரைவிலேயே மாணவப் பருவத்தை எய்தியது. சுல்தான் செய்யது அஹமது தனது மைந்தனுக்குச் சிறந்த மார்க்கக் கல்வியைப் புகட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். செய்யது இப்ராகிம் தனது உஸ்தாதிடம் இறைவேதமாகிய குர் ஆன் செரிபையும், இறுதித் தூதரது போதனைகளான ஹதீஸ்ஸையும் நன்கு கற்றுத் தேர்ந்ததுடன் இஸ்லாமியரது வாழ்க்கை நடைமுறை. நோக்கு, வழிகாட்டுதல். பற்றிய அனைத்து இலக்கியங்களையும் சிறப்பாக ஓதி உணர்ந்தார். ஓய்வு நேரங்களில் தமது சிந்தனையை இத்தகைய இஸ்லாமிய இலக்கியக் கருவூலங்களில் ஆழப்பதித்து இறைவனது உயர்ந்த நோக்கமாகிய வாழ்க்கையின் இலக்குகளைப் பற்றிச் சிந்தனை செய்து வந்தார்.

இவ்விதம் மாணவப் பருவத்தில் கற்று உணர வேண்டியவைகளை அறிந்து தெளிந்ததுடன் அவைகளின் வழிநின்று மக்களுக்குச் சேவை செய்தும், அவர்களது இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் களைந்து ஒழிக்கும் சிறந்த தொண்டராகவும் விளங்கி வந்தார். 'தனது தந்தையின் பெரு விருப்பமாகிய மதினப் பகுதியின் சுல்தானாகி ஆட்சி நடத்துவதை விட இஸ்லாமிய மக்களுக்கு என்றென்றும் உதவும் கரங்களாக அமைந்து சாதாரண தொண்ட ராகவே வாழ விரும்பி வந்தார். அன்றாட வாழ்க்கையிலும் வழிபாடு களிலும் மனத்தைச் செலுத்தி வந்த இளவல் செய்யது இபுராகிமுக்கு அவரது பாட்டனார் அண்ணல் முகம்மது நபி

(ஸல்லல்லாகு) அவர்களது வாழ்க்கையும் தொண்டும் எப்பொழுதும் அவரது சிந்தனையைச் சூழ்ந்து நின்றன.

அறியாமையிலும் அநாகரிகத்திலும் ஆழ்ந்திருந்த மக்கமாநகர் குறைஷிகளை இறைவனது கட்டளைப்படி திருத்திச் சிலை வணக் கத்தையும் குடி. கொலை முதலிய பாவங்களினின்றும் காத்துக் கொள்ளுமாறு அறிவுரையைப் புகன்று வந்த அண்ணல் முகமது நபி (ஸல்லல்லாகு அலைகிவசல்லம்) அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள். இடர்ப்பாடுகள், கொடுமைகள் ஆகியவை அனைத்தும் இளைஞர் செய்யது இபுராஹிம் அவர்களது மனத்திரையில் உறுதி யாக பதிந்து நின்றன. ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக மக்கா. தாயிப் ஆகிய ஊர் மக்களிடமிருந்து எதிர்கொண்ட சவால்கள், பிரச்சனைகள் ஆகியவைகளை அண்ணல் அவர்கள் மிகுந்த பொறுமையுடன் தீர்த்து வைத்த செய்திகளையும் அவர்கள் அறிந் தார்கள். மக்களிடம் தாமும் இத்தகைய தொண்டுகளில் ஈடுபட்டால் தமக்கும் இத்தகைய அக்கிரமங்களும் அடாத செயல்களும் எதிர்ப்பட்டால் அவைகளை எங்ஙனம் சமாளிப்பது?

சமய சமுதாயத் தொண்டுகள் செய்ததில் நாயகம் (ஸல்லல்லாகு) அவர்களுக்கு ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளும் அனுபவங்களும் இளைஞர் செய்யது இபுராஹிம் அவர்களது மனத் திரையில் மாறி மாறி தோன்றிக் கொண்டே இருந்தன. இறைவன் மீது கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையினாலும் இறைத்தூதர் முகமது நபி ஸல்லல்லாகு பெயரில் கொண்ட அத்தியந்த அன்பினாலும் அவர்களது உள்ளம் பண்பட்டு பொது வாழ்க்கைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டார் என்றாலும் நாயகம் அவர்களது வாழ்நாளில் ஏற்பட்ட சில மறக்க முடியாத நிகழ்ச்சிகள் அவரது சிந்தனையில் சுழன்று கொண்டே இருந்தன.

❖

# இயல் - 3

## நாயகம் பற்றிய சிந்தனையில்

சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்களது சிந்தனையில் சில நினைவுகள் பளிச்சிட்டன.

* * *

மக்கமா நகரில் இறை இல்லமாகிய கஃபாவிலிருந்து ஒரு நாள் மாலை முஹமது நபி ஸல்லல்லாகு அவர்கள் திரும்பிக் கொண்டிருந்த போது குரைஷியர் சிலர் இறைதூதர் வருகிறார் என்று சொல்லி அவரை ஏளனம் செய்ததுடன் இறந்துபோன ஒட்டகம் ஒன்றில் அழுகிப் போன குடல் மற்றும் கழிவுகளை அவரது தலையில் கொட்டினார்கள். துர்நாற்றம் மிகுந்த அந்தக் கழிவுப் பொருட்களை மெதுவாகத் தனது கரங்களால் உதறிக் கொண்டிருந்த பொழுது அவரது அருமந்தப் புதல்வி பாத்திமா அவர்கள் தற்செயலாக அந்தப் பகுதிக்கு வந்தார். தந்தையின் நிலையைக் கண்டு மிகுந்த துயரமடைந்தார்கள். அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்று அவரின் தலைப்பாகை, மேலங்கி போன்றவற்றைக் கழற்றிச் சுத்தம் செய்தார். முஹமது நபி அவர்கள் தமது மகளுக்கு நன்றி கூறியதுடன் அவரை இழிவுபடுத்திய அறிவிலிகளைப் பற்றி ஒரு வார்த்தையும் சொல்லவில்லை.

இவ்விதம் நாயகம் அவர்களை ஏச்சிலும், பேச்சிலும் இழிவு படுத்தியதுடன் அவரின் நடமாட்டத்தையும் தடுத்து நிறுத்துவதற்கு முயன்றனர். நாயகம் அவர்கள் அந்த நகர மக்களுக்கு அப்படி என்ன தீங்கு செய்தார்கள்.

எல்லாம் வல்ல இறைவனை நாள்தோறும் வணங்க வேண்டும் என்றும் அந்த இறைவனுக்கு உருவம் எதுவும் இல்லை என்றும் பிரச்சாரம் செய்தார்கள். மேலும் கஃபா ஆலயத்தில் அப்பொழுது 360 கற்சிலைகள் வைக்கப்பட்டு 360 நாட்களுக்கு அதைவழிபாடு செய்ததையும் கண்டித்து வந்தார்கள். அத்துடன் குடியிலும், விபசாரத் திலும் மூழ்கி இருந்தவர்களை அவர்களது பாவங்களில் இருந்து விடுபட்டு இறைவனிடம் நல்வழி காட்டுமாறு பாவ மன்னிப்புக்கோர வேண்டும் எனப் போதித்தார்கள். மனிதர்களுக்குள் வேற்றுமை இல்லை என்றும் திக்கற்ற ஏழைகளான ஆண்களையும், பெண்களை யும் அடிமைச் சந்தைகளில் அடிமைகளாக விற்றுப் பொருள் சேர்ப்பதையும் கண்டித்தார்கள். இவை எல்லாம் அந்த அறிவிலி களுக்கு ஒவ்வாதவைகளாகத் தோன்றின.

தலைமுறை தலைமுறையாக அவர்கள் போற்றி வந்த பழக்கவழக்கங்களையும் சமூக நீதிகளையும் களைந்தெறியச் சொல்வதற்கு முஹம்மது நபிக்கு என்ன தகுதி இருக்கிறது என்று வினவியதுடன் அவர்களுக்கு இறை உணர்வு ஏற்படுத்துவதற்காக இறைவனால் அனுப்பப்பட்டவர் என்பதையும் அவர்கள் ஏற்க மறுத்தனர். நபிகள் நாயகம் அவர்கள் மக்கமா நகரிலும் அதன் சுற்றுப் பகுதியிலும் தங்களது ஏக தெய்வக் கொள்கையைப் பிரச்சாரம் செய்யத் தொடங்கி 10 ஆண்டுகள் ஆகின. என்றாலும் அவரது அணியில் மிகச் சிலரே வந்து சேர்ந்தனர். இதனால் எதிரிகளின் எதிர்ப்பு மிகவும் அதிகமாகிவிட்டது. நாயகம் அவர்களின் எதிரிகள் அதே குறைஷியர் குலத்தவராக இருப்பதால் கஃபா ஆலயத்தின் பொறுப்பாளராக அவரது பெரிய தந்தை இருந்து வந்ததாலும்

நாயகம் அவர்களுக்குத் தீங்கு செய்யத் தயங்கினர். அவர்களைச் சார்ந்து நின்றவர்களுக்கும் பலவிதமான இடர்ப்பாடுகளை ஏற்படுத்தினர். அவர்கள் மக்கா நகரில் தொடர்ந்து வாழ முடியாத சூழ்நிலையை உண்டாக்கினர். உறவினர்களாகிய உதுமான் போன்றவர்கள் நாயகம் அவர்களின் அனுமதி பெற்றுச் செங்கடலைக் கடந்து மேற்கே உள்ள அபிசினியா நாட்டு மன்னரிடம் புகலிடம் புகுந்தனர். சிலகாலம் கழித்து நாயகம் அவர்களது உயிருக்கே உலை வைக்கவும் திட்டமிட்டனர்.

* * * *

இத்தகைய சிந்தனைகள் இளைஞர் சுல்த்தான் செய்யது இப்ராஹீமின் மனத்தில் தொடர்ந்து நிழலாடி வந்தன.

# மதின நகரம்
# மதினத்துன் நபவிய்யா பள்ளிவாசல்

மதின நகரில் இறுதித் தூதர் முஹமது நபி ஸல்லல்லாகு அவர்கள் நிர்மாணித்த வரலாற்றுப் புகழ்வாய்ந்த பள்ளிவாசல் இது. இங்கு அந்த மனிதப் புனிதரது பொன்னுடலைத் தாங்கியுள்ள மண்ணறையும் இந்தப் பள்ளிவாசலின் ஒரு பகுதியாக அமைந் துள்ளது. ஒரு நாள் பின்னிரவில் இரண்டாவது சாமத்திற்குப் பிறகு இளைஞர் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் தஹஜத் என்ற தொழுகையை முடித்துவிட்டு இறைவனது திருநாமங்களைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார்கள். இறைவன் மீது இருந்த அவர்களது சிந்தனை இறைத்தூதர் நபிகள் நாயகம் அவர்களைப் பற்றியதாகப் பரிணமித்தது. 500 ஆண்டுகளுக்கு முன்னர் நபிகள் நாயகம் அவர்கள் மக்கா நகரில் ஆமீனா அப்துல்லா ஆகியோரின் மைந்தனாக பிறந்ததும். பிறப்பதற்கு முன்னமேயே தந்தையையும் பிறந்த பின்னர் தாயையும் இழந்த அந்தச் சிறுவனைப் பற்றிய அன்பும் அனுதாபமும் நிறைந்த சிந்தனைகள் அவரது பெரியதந்தை அபுதாலிப் அவர்களால் வளர்க்கப்பட்ட விதம் பின்னர் மக்கமா நகரின் குறைஷிகளிடம் செல்வாக்கும். அபிமானமும் பெற்ற இளை ஞனாக வளர்ந்தது. அந்த மக்களால் நம்பிக்கைக்கு உரியவர் அல் அமீன் எனப் பெயரிட்டு வழங்கப்பட்டது. பின்னர் அந்நகரத்துச் செல்வச் சீமாட்டியாகிய கதிஜா பிராட்டியின் முகவராகப் பணி யாற்றியது. பின்னர் அவரையே தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றது போன்ற சிந்தனைகள் இளைஞர் சுல்த்தான் செய்யது இப்ராகிம் அவர்களது மனத் திரையில் அலை அலையாகத் தொடர்ந்து வந்தன.

அடுத்து நாயகம் அவர்கள் தனது வழக்கமான தியானத்தின் பொழுது வானவர் தலைவர் ஜிபுரிலைச் சந்தித்து அவர் வாய்மொழி வழியாக மனிதகுலம் உய்வதற்கு இறைவனது இறுதித் தூதராக இறைவனால் அவர் தேர்வு செய்யப்பட்டதைத் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து இறைவனது வேத வசனங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லியுள்ளதால் அவர்கள் அடைந்த ஆற்றொணாத் துயரமும் அவமானமும் நிறைந்த நாட்களைக் கழித்தது ஆகியவை களையெல்லாம் சுல்த்தான் செய்யது இபுராகிமின் மனத் திரையில் பளிச்சிட்டு மறைந்து கொண்டிருந்தன.

மக்கா நகரில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஏக தெய்வக் கொள்கை யினை மக்களிடம் பிரச்சாரம் செய்து தலைமுறை தலைமுறையாக அரபிகள் பற்றி ஒழுகிய பழக்க வழக்கங்களையும் அடிப்படைக் கருத்துக்களையும், மாற்றிக் கொள்ள வேண்டும் எனவும், ஏக இறைவனது திருத்தூதர் என்ற முறையில் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்கள் அனைவரும் கேளாக் காதினராக இருந்தனர். மேலும் அந்தப் பாமர மக்களும் பல தெய்வ வழிபாடுகளையும், பரம்பரை பரம்பரையாகப் பேணிவந்த ஆண், பெண் அடிமைத் தனத்தையும், இரவு பகல் என்று எண்ணாமல் பயணித்துக் கழித்த குடிப் பழக்கத்தினையும், விபச்சாரத்தையும் குலம் கோத்திரப் பெருமைகளை நிறைநிறுத்துவதற்காக அடிக்கடி சிந்திய இரத்தக் களரியினையும் தவிர்க்க வேண்டும் என நபிகள் நாயகம் எடுத்தோதிய அறிவுரைகள் அவர்களுக்கு மிகுந்த வெறுப்பையும் குரோதத்தையும், வளர்த்து வந்தன. நாயகம் அவர்களது பெரிய தந்தை அபுதாலிபு குரைசி இனத்தவரில் மிகவும் செல்வாக்கு வாய்ந்த பெரு மனிதராக இருந்து வந்ததால் அண்ணல் அவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருந்தார்கள். என்றாலும் அவர்கள் உள்ளத்தில் கனன்று வந்த வெறுப்பும், விரோதமும் அண்ணல் அவர்களை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற முடிவுக்குத் தள்ளியது.

இதனால் அண்ணல் அவர்கள் மக்கா நகரைவிட்டு. தாயிப் நகரம் சென்று சிலகாலம் வசித்து வந்தார்கள். தாயிப் நகரம் மக்கா

நகரிலிருந்து வடக்கே 30 கல் தொலைவில் அமைந்துள்ள பசுமை யான நகரம். ஷாம் (சிரியா) நாட்டிற்குப் பொதிகளைச் சுமந்து செல்லும் ஒட்டகச் சாத்துகள் இந்த ஊரில் தங்கி இளைப்பாறும் இடமாகவும் விளங்கியதால் அந்த ஊர் சிறப்புற்று விளங்கியது. ஒரு குறிப்பிட்ட வீதி வழியாக நாள்தோறும் நாயகம் அவர்கள் செல்லும் போது ஒரு வீட்டின் மாடியில் இருந்து அவர் மேல் குப்பை கூளங்கள் கொட்டப்பட்டு வந்தன. மாடியை ஏறிட்டுப் பார்த்த பொழுது அங்கே ஒரு யூதப் பெண் கையில் கூடையுடன் நபியை வெறுப்புடன் நோக்குவது தெரிந்தது. அந்த அம்மணியைப் பார்த்த நாயகம் புன் சிரிப்புச் செய்துவிட்டு தனது தலையிலும் தோள் பட்டையிலும் விழுந்த குப்பைக் கூளங்களை உதறிவிட்டுச் சென்றார்கள். இது ஒருநாள், இருநாள் நிகழ்ச்சி மட்டுமல்ல, வழக்கமாகப் பெருமானார் அவர்கள் அந்த வீட்டின் வழியே செல்லும் பொழுது எல்லாம் அவர்களுக்கு நாள்தோறும் கிடைத்த பரிசாக இருந்து வந்தது.

ஒரு நாள் அந்த வீட்டினைக் கடந்து நாயகம் செல்லும் பொழுது வழக்கமாக அவர் மீது கொட்டப்படும் குப்பை விழவில்லை. மறுநாளும் வீட்டைக் கடக்கும் போது குப்பை விழவில்லை. இதனால் ஆச்சரியமுற்ற பெருமானார் அவர்கள் அந்த அம்மையார் என்ன ஆனார் என்று தெரிந்து கொள்ள அந்த வீட்டிற்குள் நுழைந்தார்கள். அந்தக் கூடத்துள் படுத்து இருந்த அம்மையார் நபியைப் பார்த்து எழுந்து அமர்ந்தார்கள். அம்மணி உங்கள் உடம்புக்கு என்ன ஆயிற்று உடல் நலமில்லையா என அன்புடன் வினவியபொழுது அந்த அம்மையாருக்கு அவர்கள் கேள்வி வியப்பைத் தந்தது. சில நொடிகள் என்ன சொல்வது என்று தெரியாமல் திகைத்த அவர்கள் நபியைப் பார்த்து ஐயா எனக்கு உடல் நலம் இல்லைதான் என்றாலும் நாள்தோறும் உங்கள் மீது குப்பைகளைக் கொட்டிக் குரோதம் காட்டிய என்னிடம் உடல் நலம் விசாரிக்க வந்திருக்கிறீர்கள். நான், இவ்வளவு அன்பு நிறைந்த தங்களுக்கு எவ்வளவு பெரிய தீங்கினைச் செய்து விட்டேன் என்றார். நாயகம், எல்லாம் இறைவன் நாட்டம். இப்பொழுது

உடல்நலம் எப்படி உள்ளது. பரவாயில்லை சரியாகி விடும் என நம்புகிறேன் என்று அந்த வயதான பெண்மணி கூறினாள்.

இறைவன் தங்களுக்குப் பூரண நலம் கொடுக்க இறைஞ்சு கிறேன் என்று சொல்லியவாறு விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள்.

இந்த சந்திப்பு அந்த அம்மையாருக்கு ஒரு வியப்பை உண்டாக்கியது. தமது இனத்தவர் யூதர் பரப்பிய செய்தியை நம்பி நல்ல மனிதருக்கு எவ்வளவு பெரிய தீங்கைச் செய்துவிட்டோம் என எண்ணி வருந்தினார்.

* * * *

மக்கா நகருக்குச் சில கல் தொலைவில் அமைந்து இருந்தது அந்தக் கிராமம். பெரும்பாலும் யூத இனத்தைச் சார்ந்த குடிகள் வாழ்ந்த சிற்றூர் அது. அவர்களில் உவைசு என்ற நடுத்தர வயது மனிதர் வாழ்ந்து வந்தார். அந்த நல்ல மனிதர் அந்த ஊர்குடி மக்களை விட சிந்தனையிலும். செயல்பாடுகளிலும் சற்று வேறுபட்டவராகவே காணப்பட்டார். அண்மையில் உள்ள மக்கா நகரில் முஹமது என்ற இளைஞர் தம்மை இறைவனது தூதர் எனச் சொல்லிக் கொண்டு மக்கா நகர மக்களிடையே ஆன்மீகப் பிரச்சாரம் செய்து வருவதையும். மக்கள் பேணி வந்த பல தெய்வ வழிபாடு, குடிப்பழக்கம், விபச்சாரம், ஆண்களையும், பெண்களையும் விலங்குகளைப் போல் அடிமையாக நடத்துவது ஆகிய செயல் களைச் சாடி வருவதையும் கேள்விப்பட்டு வந்தார். இதன் காரணமாக அவருக்கு நபி பெருமானாரிடம் ஒருவிதமான ஈர்ப்பு ஏற்பட்டது. ஒருநாள் மக்கா நகரில் இருந்த வந்த பயணி ஒருவரிடம் மக்கா நகரச் செய்திகளை உவைசு என்ற அந்த பெரியவர் விசாரித்தபோது அந்த நகரின் மூட மக்கள் ஒரு நாள் நாயகம் அவர்களை கல்லால் எறிந்து துன்புறுத்தியதாகவும், அப்போது அவர்களது வாயில் முன் பற்கள் இரண்டு உடைந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டார். பெரியவர் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை. காரணம் முஹம்மது நபி

அவர்களை நேரில் காணாத பொழுதிலும் அவர்களின் ஆன்மீக சொற்பொழிவை ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டு நபி மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அறிவிலிகளின் செயலில் நாயகம் அவர்களுக்கு பற்கள் உடைந்தன எனக் கேள்விப்பட்டதும் தானும் தமது பற்களை உடைக்க முன் வந்தார். 'என்னே, அவர் நாயகம் மீது கொண்ட அன்பு.'

அந்த நல்ல மனிதர் ஒரு கையில் கல்லை வைத்துக் கொண்டு தனது வாயின் மேல்பகுதி பல்லை உடைக்கத் தொடங்கினார். இதைக் கண்ட ஒருவர் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபொழுது அண்ணலுக்கு ஏற்பட்ட மகத்தான இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களைப் போன்றே பற்கள் இல்லாது வாழ்ந்தால் தான் எனக்கும் வாழ்க்கையில் நிம்மதி கூடும்.

முஹம்மது நபியின் இரண்டு பற்கள் உடைந்தன என கேள்விப்பட்டேன். நீங்கள் வாயின் மேல் வரிசையில் அனைத்தையும் அல்லவா உடைக்கிறீர்கள் எனக் கேட்டார். ஆம், நாயகத்தின் எந்தப் பல் உடைந்தது என எனக்குத் தெரியவில்லை. ஆதலால் தான் அனைத்துப் பல்லையும் உடைக்கிறேன்'' என்றார். வந்தவர் அவரைத் தடுத்து நிறுத்தினார். மேலும் இதுபோல் செய்யாமல் தடுத்தார்.

இந்த வித்தியாசமான நிகழ்ச்சி அந்தப் பகுதியிலேயே நபிகள் நாயகம் அவர்களின் மீது உவைசு என்ற பெரியவர் கொண்டிருந்த ஆழமான அன்பினையும் வேற்றுச் சமயத்தினரான அந்தப் பெரியவர் நபியின் கொள்கைகளிலும் செயல்களிலும் கொண்டிருந்த உறுதியான பற்றையும் என்றும் அந்தப் பகுதி மக்களால் புதுமையான நிகழ்ச்சியாகப் பேசப்பட்டு வந்தது.

* * * *

# மதினமா நகர், முற்பகல் நேரம்

மதினமா நகரின் பள்ளிவாசலில் நபிகள் நாயகம் அவர்களும் அவர்களது தோழர்களும் அமர்ந்து இருந்தனர். பொதுவாகக் காலைச் கடன்களை முடித்த பிறகு நாயகம் அவர்களும், அவர்களது தோழர் களும் அங்கு அமர்ந்திருப்பது வழக்கம். மதினா நகரின் பிரச்சனை கள், புதிதாக இஸ்லாத்தை ஏற்றவர்களை மதினா நகரில் தங்க வைக்க வேண்டிய பொறுப்பு, ஏற்கனவே மதினா நகரில் கணிசமான அளவு குடியிருந்து வரும் யூத இனத்தவர்களுக்கும். கிறிஸ்தவர்களும் அன்சாரிகளான இஸ்லாமியர்களுக்கும் ஏற்படும் பிணக்குகள், இஸ்லாத்தின் புதிய குடியரசான மதீனா நகரை அழிப்பதற்கு எதிரிகள் செய்து வரும் சூழ்ச்சிகள் அனைத்தையும் அந்த சபையிலேயே விவாதித்து முடிவு காண்பது வழக்கமாக இருந்தது.

மேலும் நாயகம் அவர்களைச் சந்திப்பதற்காகவும், அவர்களது அறிவுரைகளையும் ஆசிகளையும் பெறுவதற்காகவும், அரபு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அன்பளிப்புக்களுடன் வந்து சந்திக்க விரும்புகிறவர்களும் புதிய சமயமாகிய இஸ்லாத்தைப் பற்றிய புதிய விவரங்களைத் தெளிவாக அறிவதற்கு விழைகின்ற யூத கிறிஸ்தவப் பெரியார்களும், அந்த சபைக்கு வந்து நாயகம் அவர்களை சந்தித்து உன்ரயாடும் வழக்கமும் இருந்து வந்தது.

அன்றைய கூட்டத்தில் அண்மையில் நடந்த பத்ரு போர் பற்றிய பிரச்சனைகளைப் பேசி முடிவெடுப்பது ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது. மிகவும் முதிர்ந்த வயதில் உள்ள ஒரு அம்மையார் அப்பொழுது அங்கு வந்து நாயகம் அவர்களுக்கு சலாத்தைத் தெரிவித்தார். அவர்கள் அங்கு வந்துள்ள காரணம் பற்றி அவரிடம் கேட்கப்பட்ட பொழுது அவர் சொன்னார். நாயகம்

அவர்களே! இறைவனது இறுதித்தூதரான தங்களை எனது வாழ்நாளில் சந்தித்து மகிழ வேண்டும் என ஆசைப்பட்டேன். அதற்கான வாய்ப்பினை இன்றுதான் எனக்கு இறைவன் வழங்கியுள்ளான். இறை நம்பிக்கையாளர்களுக்கு நேர் வழிகாட்டி ஆசீர்வாதம் செய்வதுபோல எனக்கும் தங்கள், தங்களது ஆசீர்வாதத்தை வழங்கிட வேண்டும் என்று சொல்லியவர். தனது கையில் இருந்த ஒரு சிறிய துணி முடிச்சையும் நாயகம் அவர்களிடம் பணிந்து கொடுத்தார். இது என் தோட்டத்தில் விளைந்த திராட்சைப் பழங்கள் தங்களுக்காக அதை எடுத்து வந்தேன். ''மிக்க மகிழ்ச்சி தங்கள் அன்பிற்கு ஆண்டவன் இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற உதவிகளையும் செய்வானாகவும்'' என்று சொல்லிய நாயகம் அவர்கள் அந்தப் பழங்களில் ஒன்றை எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிட்டார்கள். இப்பொழுது தங்களுக்கு மன திருப்பதி ஏற்பட்டிருக்கும் என்று சொல்லி தாங்கள் சென்று வரலாம் என்று விடையளித்தார்கள்.' அந்த அம்மையாரும் மிகுந்த மன நிறைவுடன் அங்கிருந்து சென்றார்.

அங்கிருந்த தோழர்களில் ஒருவர் எழுந்து நின்று பணிவாக சொல்லத் தொடங்கினார் இறைவனது திருத்தூதரே இன்று தங்களது வழக்கமான செயல்களுக்கு முரணாகத் தாங்கள் மட்டும் தங்களுக்கு அளித்த பழத்தைச் சாப்பிட்டீர்கள் எஞ்சியவற்றை வழக்கம்போல் எங்களுக்கெல்லாம் பகிர்ந்து கொடுக்கவில்லையே ஏன்? என்று அறிந்து கொள்ளலாமா! எனக் கேட்டார். தோழரே தாங்கள் சரியான கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். எப்பொழுதாவது யாராவது எனக்கு அன்பளிப்பாகப் பொருட்கள் வழங்கினால் அவற்றைத் தங்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பது வழக்கம் என்றாலும். அந்த அம்மையார் கொடுத்த பழங்களை நான் வாயில்போட்டு மென்றபோது அவை மிகவும் புளிப்பாக இருந்தன. அவற்றைத் தங்களுக்குக் கொடுத்தால் நீங்களும் மென்றுவிட்டு முகத்தைச் சுளிப்பதுடன் அந்தப் பழங்கள் புளிப்பாக இருக்கின்றன என்று சொன்னால் அதனை அன்போடு அளித்த அம்மையார் உள்ளத்திற்கு வருத்தமாக இருக்கும். ஆதலால் தான் அந்தப்

பழங்களை உங்களுக்குக் கொடுக்கவில்லை. இதோ எஞ்சி இருப்பவற்றை நீங்களே சுவைத்துப் பாருங்கள் என்றார்கள்.

அன்போடு நீண்ட தூரம் நடந்து வந்து கொடுத்த அந்த அம்மையாரின் மனத்தை வருத்தமடையச் செய்யக் கூடாது என்ற நாயகம் அவர்களது நல்ல பண்பினை அவரது தோழர்கள் மிகவும் பாராட்டினார்கள். அடுத்து நாயகத் தோழர்களில் மிகவும் முக்கிய மானவரான அபுபக்கர் சித்திக் எழுந்து நின்று இறைவனது தூதர் அவர்களே கடந்து சென்ற புனித ரமலான் மாதத்தில் நம்மை அழிப் பதற்கு திட்டமிட்ட மக்கமா நகரின் குரைஷிகளை இறைவன் கருணையினால் வெற்றி கொண்டோம். அந்தப் போரின் பொழுது கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 21 பேர் இன்று நமது பராமரிப்பில் இருந்து வருகின்றனர். தொடர்ந்து அவர்களை இங்கு கைதிகளாக வைத்துப் பராமரித்து வருவது நமக்கு வீணான பொருள் நஷ்டத்தை அளிப்பதாகும். ஆதலால் அதுபற்றி நாயகம் அவர்கள் இன்று ஒரு முடிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அபுபக்கர் அவர்கள் சொல்வது முற்றிலும் பொருத்தமானதுதான் இங்குள்ள தோழர்களும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தால், இந்த விசயத்திற்கு ஒரு சரியான முடிவுக்கு வரலாம் என்று நாயகம் சொன்னார்கள். திருத்தூதர் அவர்களே நமது நாட்டு வழக்கம் என்ன என்பதை தங்களுக்கு நான் தெரிவிக்க வேண்டியதில்லை. போரில் பிடிபட்டவர்களை அவர்களிடமிருந்தோ அவர்களது உறவினர் களிடம் இருந்தோ, போரில் கலந்து கொண்டு நம்மவர்களைத் தாக்கி அழித்த குற்றத்திற்காக நஷ்ட ஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்வது தான் முறை என உமருகத்தாப் என்ற தோழர் தெரிவித்தார். அங்கிருந்தவர்கள் அதனை ஆமோதித்து ஒப்புதல் செய்தார்கள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த நாயகம் அவர்கள் தமது கருத்தைச் சொல்லத் தொடங்கினார்கள். உமருகத்தாப் அவர்கள் சொன்னது இதுவரை அரபிநாட்டில் பின்பற்றி வந்த பழைய முறையாகும். ஆனால் நாம் பழமைவாதிகள் அல்ல. மனிதாபிமான உணர்வு மிக்கவர்கள். இந்தப் போர்க் கைதிகளுக்காக ஆயிரக்

கணக்கான திர்கம் பணத்தைக் கொடுத்து அவர்களை மீட்க முன்வருபவர் எத்தனைபேர்? நிச்சயமாக ஒருவரும் வரமாட்டார். பத்ரு போரில் நம்மிடமிருந்து அவர்கள் தப்பிச் சென்றதே பெரிய விசயம். ஆதலால் அவர்களை மேலும் சிரமப்படுத்துதல் கூடாது. இதற்கான ஓர் எளிய வழி ஒன்றினை நான் சொல்லலாம் என விரும்புகிறேன். ''சொல்லுங்கள் இறைதூதரே தங்களது சொல்லுக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம்'' எனச் சபையில் இருந்தவர்கள் சொன்னார்கள் ''இன்று நம்மிடையே கல்வியறிவு பெற்ற முஸ்லீம்கள் மிகவும் குறைவு. அவர்களுக்கு நாளடைவில் நாம் தான் கல்வி புகட்டுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆதலால் இப்போது நம்மிடம் உள்ள கைதிகளில் மக்கா நகர் குரைசி கல்வி கற்றவர்களாக இருப்பதால் அவர்கள் ஒவ்வொருவரும் இங்குள்ள 3 முஸ்லீம்களை இயன்றவரை விரைவில் அரபி மொழியில் எழுதப் படிக்க கற்பித்துக் கொடுக்க வேண்டும். அதுதான் அவர்களுக்கு நாம் வழங்கும் தண்டனை மட்டுமல்ல அவர்களது விடுதலைக்கு ஏற்ற வழியாகவும் இருக்கும். நாயகம் சொன்னதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால் ஒருவர் மட்டும் எழுந்து நின்று பேசத் தொடங்கினார். உமருகத்தாப் என்ற நாயகத் தோழர், திருத்தூதர் அவர்களே, மனிதாபிமான அடிப்படையில் தாங்கள் வழங்கிய தீர்ப்பு மிகவும் ஏற்றமானது என்றாலும் அந்தத் தீர்ப்பினை அந்த 21 கைதிகளில் ஒரே ஒருவருக்குப் பொருந்தாது என அறிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அந்த ஒருவர் யார்? ஏன்? அவருக்காக இந்த தீர்ப்பினை மாற்ற வேண்டும்? என சொல்லுகிறீர்கள்? என நாயகம் கேட்டார்கள். அதோ அந்த மூலையில் அமர்ந்திருக்கும் 21 பேர்களில் ஒரு பெண்ணும் இருக்கிறாரல்லவா அவர் பெயர் ஹிந்தா என்பது. நடந்து முடிந்த பத்ருபோரில் நமது தரப்பினரை பின்புறமாக நின்று வெட்டி வீழ்த்திய பாதகி மற்றும் நாயகம் அவர்களது சிறிய தந்தையான ''ஹம்சா'' என்பவர், போரில் மரணக்காயங்களுடன் வெட்டுப்பட்டு கீழே விழுந்தவுடன் அவர் நெஞ்சைப் பிளந்து அவரின் ஈரலைக் கடித்துத் குதறித்துப்பிய அரக்கி. பெண் குலத்திற்கே களங்கமாக

அமைந்துள்ள அந்தப் பெண்ணுக்கு நாயகம் அவர்களது தீர்ப்பு பொருந்துவதாக இருக்கக் கூடாது என்றும் அவருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் உமர் சொல்லி முடித்தார்.

அனைவரும் அந்த மூலையில் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணைச் சில நொடிகள் நேரம் வெறுப்புடன் நோக்கினர். அடுத்து நாயகம் அவர்கள் என்ன பதில் சொல்லுவார் எனக் கேட்பதற்கு ஆயத்தமானார்கள். நாயகம் அவர்கள் போர் என்பது மனிதனது வெறியாட்டத்தின் கொடுமுடியாக அமைவது. இரு தரப்பினரும் தங்களுக்கு வெற்றி ஏற்பட எவ்வளவு கொடுமைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு கொடுமைகளைச் செய்தனர் என்பது போர்களின் வரலாறு. இறைவனின் கருணையைக் கொண்டு மக்கா நகர குரைஷிகளை வெற்றி கொள்ள நமக்கு ஆண்டவன் தொடர்ந்து நன்மைகளை வழங்க வேண்டும் என்பதால் இறைவனின் கருணைக்கு உவந்து மனிதர்களை நண்பராக இருந்தாலும் சரி, எதிரியாக இருந்தாலும் சரி மனிதாபிமானத்துடன் மனிதர்களாக நடத்த வேண்டும். எனது சிறிய தந்தைக்குச் செய்த கொடுமை களுக்காக அந்தப் பெண்ணைப் பழி வாங்கும் வகையில் தண்டிக்க விரும்பவில்லை. அவளும் நம்மிடம் அகப்பட்டுள்ள போர் கைதிகளில் ஒருத்தி என்பதை மறந்துவிடக் கூடாது. நான் முன்பு சொன்ன தீர்ப்பு அனைத்துக் கைதிகளுக்கும் பொதுவானதாகவே இருக்கும்'' என்று மீண்டும் நாயகம் அவர்கள் சொல்லி முடித்தார்கள்.

* * * * *

இந்தச் சிந்தனைகள் சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்களது உள்ளத்தில் மிகப் பெரிய அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சில நிமிடங்கள் அந்தச் சிந்தனைகளில் லயித்திருந்த சுல்த்தான் அவர்கள் மீண்டும் தெளிவு பெற்ற பொழுது அவர்களது உள்ளத்தில் எழுந்து நின்ற எண்ணம் தாமும் தமது பாட்டனாரது வழியை அடியொற்றியவராக அரபுத் தாயகத்திற்கு அப்பாலும் தீன் விளக்கத்தில் இஸ்லாமிய சமயப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும் என்பது தான்.

# இயல் - 4

## தீன்மார்க்கத்தைப் பரப்பும் பணியில்

விரைவிலேயே அரேபிய நாட்டிற்கு கிழக்கே உள்ள சிந்து நாட்டிற்குத் தமது தோழர்களுடன் சென்றார்கள். தமது ஏக இறைக் கொள்கை வழியாக அந்தப் பகுதிகளின் குடிகளாக வாழ்ந்து வந்தவர்களை மனமாற்றம் அடையச் செய்தார்கள். இந்த முயற்சியில் பெற்ற அனுபவத்தையும் வெற்றியையும் கொண்டு அண்மையிலிருந்த குஜராத் மாநிலத்திற்கும் சென்றார்கள். பலநூறு ஆண்டுகளாகப் பொருத்தமற்ற பழக்க வழக்கங்களாலும். பகுத்தறிவுக்கு ஒவ்வாத சமயச் சடங்குகளாலும் தங்களது வாழ்க்கையினை நரகமாக்கிக் கொண்டிருந்த அம்மக்கள் அனைவரையும் தங்கள் புதிய சிந்தனையில் ஒன்றுபடச் செய்தார்கள். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று உயர் கொள்கையின் நுட்பொருளை அவர்கள் உணர்ந்து புரிந்து கொள்ளுமாறும் செய்தார்கள். அனைவரையும் தங்கள் புதிய சிந்தனையினால் ஒன்றுபடச் செய்தார்கள். மதுப் பழக்கத்தையும், சமுதாய வாழ்க்கையையும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளையும் பிறப்பால் உரிமை கொண்டாடிய மேல் ஜாதி, கீழ் சாதி என்ற பாகுபாடுகளையும் அறிவார்ந்த வணக்க வழிபாடுகளுக்கு அப்பாற்பட்ட சிலை வணக்கங்களையும், விழாக்களையும் விட்டொழிக்கச் செய்தார்கள்.

இறைவனது அற்புதக் கொடையாகிய பகுத்தறிவினால், சுல்த்தான் செய்யது இப்ராகிம் அவர்கள் புகுத்திய மெய்ஞான ஒளியினால் சிறந்து விளங்கினர். அந்தப் பாமர மக்கள் உலகின் பல பகுதிகளிலும் அப்பொழுது வாழ்ந்து வந்த பல்லாயிரக் கணக்கான ஓரிறைக் கொள்கையினரான இஸ்லாமிய மக்களது அணியில் ஒன்றுசேர முயன்று வந்தனர். இந்த அரிய தொண்டில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தங்களது நாட்டையும் வீட்டையும் துறந்து இறைவனது பாதையில் தொண்டாற்றி வந்த சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களும், அவர்களது தோழர்களும் தங்களது பணியில் முழுவெற்றியை எய்தியதாக மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினர். அடுத்து அவர்களது போதனையினால் ஈர்க்கப்பட்ட மக்கள் வழி தவறிவிடாமல் தொடர்ந்து ஏக இறைக் கொள்கையில் ஈடுபட்டு வாழ்ந்து வருவதற்காக ஆங்காங்கு பல தொழுகைப் பள்ளி வாசல்களையும், அந்த குறுகிய காலத்தில் அமைத்துக் கொடுத்தார்கள். அந்தப் பள்ளிவாசல்களில் இருந்து 5 வேளை தொழுகைக்காகக் கூவி அழைக்கப்படும் பாங்கு என்னும் அழைப்பினைக் கேட்கும் மக்கள் ''அல்லாஹு அஹ்பர்'' என மன உறுதியுடன் இறைவனை வணங்குவதற்குச் செல்லத் தவறமாட்டார்களல்லவா?

## மீண்டும் மதினா நகர் பள்ளிவாசல்

வைகறைத் தொழுகையில் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

அந்த வைகறை நேரத்தின் கிழக்கே உதயத்தின் கீறல்கள் காணப்படுவதற்கு முன்னர் அந்தப் பகுதி முழுவதும் மெல் இருட்டும், மென்மையான அமைதியும் இருந்து வந்தது. இந்தச் சூழ்நிலையை இன்னும் சிறப்புடையதாகச் செய்யும் வகையில் அவரது சிந்தனைகளின் தொடர்ச்சியாக வெண் நிலவு போன்ற இனிய ஒளிப்படலம் எழுந்தது. அதன் ஊடே அழகும், அமைதியும் நிறைந்த ஒரு பெரியவரின் தோற்றம். அவர் சுல்த்தான் செய்யது

இபுராகிமை விளித்து ஏதோ சொல்வது போன்ற ஓசை. ஆம் இப்பொழுது அந்த ஓசை செவிகளில் நன்கு தெளிவாகக் கேட்டது.

எனது அருமைப் பேரரே தாங்கள் இந்த இளம் வயதில் இறைவன் மீதும் என் மீதும் கொண்டுள்ள பாசத்தையும் பற்று தலையும் பாராட்டுகிறேன். இவைகளுக்கு மேலாக எனது வாழ்க்கை யும் உபதேசங்களையும் பின்பற்றி அண்டை நாடுகளுக்குச் சென்று ஏகதெய்வ வழிபாட்டினை விளம்பரப்படுத்தியும், அந்தப் பகுதிகளிலுள்ள பாமர மக்களான பார்சிகளையும், குஜராத்தி மக்களையும் சாந்திமார்க்கமாகிய இஸ்லாத்தில் இணையுமாறு செய்த சாதனையை மிகவும் பாராட்டுகிறேன். தங்களைப் போன்ற இளைஞர்களின் கடமையும் குறிக்கோளும் இத்துடன் முடிந்துவிட வில்லை. இன்னும் அரபு நாட்டிற்குத் தென்கிழக்கே பாரத கண்டத்தின் மிகப் பெரிய பகுதி ஒன்று உள்ளது. அதன் தென் பகுதியில் உள்ள தமிழ்நாட்டிற்கு ஏற்கனவே இங்கிருந்து பலநூறு சமயத் தொண்டர்கள் சென்றுள்ளார்கள். பல தெய்வ வழிபாட்டிலும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாத பழக்க வழக்கங்களிலும் தங்களைப் பிணைத்து கொண்டு அஞ்ஞானத்தில் வாழ்கின்ற அவர்களுக்கு அறிவு கொடுப்பதில் தங்கள் வாழ்க்கை அனைத்தையும் அர்ப்பணித் துள்ளார்கள். அவர்களது மண்ணறைகள் கடற்கரைகளிலும், காடு மேடுகளிலுமாக எங்கும் அமைந்துள்ளன. அங்குள்ள மக்கள் அவர் களை மஸ்த்தான்கள் என்றும் மலங்குகள் என்றும் அவுலியாக்கள் என்றும் ஏற்றிப் போற்றி அவர்களின் ஜீவியத்தை நினைவில் கொண்டு வருகின்றனர்.

அவர்களது பணி முடிவடையவில்லை. உம்மைப் போன்ற இளைஞர்கள் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அங்குள்ள மக்களை எல்லாம் வல்ல இறைவனின் வழிபாடுகளில் நாட்டம் கொள்ளச் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல மனிதர்களாக அண்டை அயலாரை மதித்து நட்பும், தோழமையும், பாராட்டும் குடிமக்களாக, சகோதரர்களாக மாற்ற வேண்டும். தங்களுக்கு ஏற்கனவே பெற்ற அனுபவங்களைக் கொண்டு இந்த பணியையும்

எளிதாக முடிக்க இயலும். ஆதலால் அதற்கான பணியில் ஈடுபடுக....'' என்ற சொற்கள் முடிவடையும் பொழுது நபி பெருமானின் அந்த இனிய உருவம் இபுராகிமின் அகக்காட்சியில் இருந்து மெதுவாக மங்கி மறைந்துவிட்டது.

சுல்த்தான் செய்யது இபுராகிம் தமது பாட்டனாரை அகக்காட்சியில் கண்டு அவர்களது இனிய உபதேசத்தைக் கேட்டதை இனிய நினைவுகளில் நீண்ட நேரம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது காலைத் தொழுகைக்கான பாங்கு சத்தம், அதனையடுத்த தொழுகைக்காக அந்தப் பள்ளிக்கு வருகின்ற முஸ்லீம் மக்களின் மென்மையான ஆரவாரம் முதலியவை இபுராகிமின் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தன. உலகில் கிடைக்காத ஒரு அதிசயப் பொருளைப் பெற்றது போன்ற உள்ளக் களிப்புடன் அவர் காலைத் தொழுகைக்கு எழுந்து சென்றார்.

காலைத் தொழுகை முடிந்தவுடன் அதில் கலந்து கொண்டவர்கள் சிறிது நேரம் அமர்ந்து பள்ளிவாசல் மௌலவியின் உபதேசங்களைக் கேட்டுச் செல்வது அந்த மக்களின் அன்றாட வழக்கமாக இருந்தது. அந்தச் சமயத்தில் எழுந்து நின்ற இபுராகிம் அங்கு குழுமியிருந்த மக்களுக்குத் தனது சலாத்தை தெரிவித்தார். அன்று வைகறைப் பொழுதில் அவர் பாட்டனாரின் திருவுருவக் காட்சியையும் அவர் தமக்கு வழங்கிய உபதேச மொழிகளையும் அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். செவிமடுத்த மக்கள் மகிழ்ச்சியில் சிறிது நேரம் திளைத்தனர்.

''நபி பெருமானின் பேரரே! தாங்கள் நாயகம் அவர்களைக் கனவில் கண்ட பேற்றினைப் பெற்றுள்ளீர்கள். நாங்களும் அன்னாரது உபதேசப்படி தாங்கள் ஏற்பாடு செய்யும் பயணத்தில் கலந்து கொண்டு நாயகம் அவர்களது காட்சியை காண்பதற்குரியோர்களாக முயற்சி செய்கின்றோம். ஆதலால் பாண்டியநாடு செல்வதற்கான பயணத்தில் நாங்களும் கலந்து கொண்டு இறைவனது மார்க்கத்தை

எடுத்துச் சொல்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்'' என ஒருமுகமாக அனைவரும் ஆதரவு தெரிவித்தனர். அவர்களது ஒப்புதலுக்கு நன்றி தெரிவித்த இப்ராஹிம் விரைவில் அவரின் பயணத்திட்டத்தைத் தெரிவிப்பதாக அவர்களிடம் சொன்னார். அனைவரும் ஆறுதலாகச் சென்றனர்.

அடுத்து சில நாட்களில் பல கூட்டங்கள் அங்கு நடைபெற்றன. பாண்டிய நாட்டிற்குப் பயணம் புறப்படுவது சம்பந்தமாக எத்தனை தொண்டர்களைச் சேர்த்துக் கொள்வது, எத்தனை தோணிகளைப் பயணத்திற்காக ஏற்பாடு செய்வது, பயண காலத்திற்குத் தேவையான உணவுப் பண்டங்களைச் சேகரிப்பது என்பன போன்ற பலவிபரங்கள் இந்தக் கூட்டங்களில் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டன. மற்றும் அன்றைய அரபு நாட்டின் பெரு நகர்களான மக்கா, தாயிப், ஜித்தா ஆகிய நகரங்களிலுள்ள இளைஞர்களையும் மற்றும் அண்டை நாடான சிரியா. எகிப்து, தூனிசியா, மொராக்கோ ஆகிய நாடு களுக்கும் தக்க மடல்களை அனுப்பி ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் தமிழ்நாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடுகளுடன் அந்தந்த நாட்டு இளைஞர்கள் கலந்து கொள்வது பற்றிய தகவல்கள் தெரிவிக்கப் பட்டன. செய்திப் போக்குவரத்து வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் அந்த நாடுகளை எல்லாம் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறுவது என்பது மிகப் பெரிய பிரச்சனையாக இருந்தது. இதனால் மாதங்களும், வருடங்களும் பல கழிந்து விட்டன. பாண்டிய நாட்டுப் பயணம் எப்போது என்பதுதான் சுல்த்தான் செய்யது இபுராகிமின் சிந்தனையை இரவு பகலாக அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

❖

# இயல் - 5

## பயணம் தொடர்கிறது

பல வருடங்கள் ஓடிவிட்டன. சுல்த்தான் அவர்களின் உடலில் தெம்பும் குறைந்து வந்தது. அப்பொழுது அவர்களுக்கு வயது 56 என்றாலும் முதுமையையும், உடல் நலிவையும் புறக்கணித்து விட்டு தாம் பற்றி நின்ற தீன்மார்க்கத்தை பாண்டிய நாட்டில் பிரச்சாரத்தைத் தொடர்வது என்ற உறுதியுடன் செயல்பட்டு வந்தார்கள். பயணத்திற் கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவு செய்யப்பட்டு பயண நாளும் குறிக்கப்பட்டது. அந்த நாளுக்கு முன்னதாகவே பல இளைஞர்கள் பல இஸ்லாமிய நாடுகளிலிருந்து ஜித்தா துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் பயணம் செய்ய வேண்டிய பெரிய தோணிகள் பல நூறு தோணிகள் புதிதாகக் கட்டப்பட்டன. ஜித்தா துறைமுகத்தி லிருந்து வடக்கே மிக நீண்ட தூரம் இந்தத் தோணிகள் வரிசையாக நிறுத்தப்பட்டு அந்தந்த நாடுகளுக்குரிய வண்ணக் கொடிகளுடனும் உறுதியான அகலமான பாய்மரத்திற்கான பாய்களும் பொருத்தப் பட்டன. அந்தத் தோணிகளில் பயண காலத்திற்குத் தேவையான குடிநீர். உணவுப் பண்டங்கள், காய்கறிகள் ஆகியனவும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

நிர்ணயித்த நாளாகிய ஹிஜ்ரி 582 ஜமாதுல் ஆஹிர் பிறை 2-இல் ஜித்தா நகரின் மர்கஷ் பள்ளிவாசலில் காலை நேரத் தொழுகை முடிந்தவுடன், அந்தப் பள்ளியில் ஆலிம் அவர்கள் பாண்டிய நாட்டிற்குப் பயணமாகும் சுல்த்தான் செய்யது

இபுராகிமிற்கும் அவரது குழுவினருக்கும் இறைவன் சிறந்த வெற்றியை வழங்கிப் பயணம் எளிதாக அமைய அருள்புரியுமாறு இருகரம் ஏந்தி இறைவனிடம் பிரார்த்தித்தார்.

அடுத்து பலநூறு பேர்களது குரல்கள் அல்லாஹு அக்பர் முழக்கத்துடன் ஒலித்தன. அல்லாஹு அக்பர் என்ற அந்த முழக்கம் ஜித்தா துறைமுகம் முழுவதும் எதிரொலித்தது. சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது தோழர்களும் அவர்களுக்குரிய தோணிகளில் போய் அமர்ந்தவுடன் அந்தக் கப்பல்களின் பாய்மரங்களில் பிணைக்கப்பட்டிருந்த அகன்ற பெரிய பாய்கள் உயர்த்திப் பிணைத்துக் கட்டப்பட்டவுடன் தோணிகள் தென்மேற்குப் பருவக் காற்றின் விசையினால் விடுபட்ட அம்பு போல தெற்கு நோக்கிப் புறப்பட்டன. கார் காலத்தில் கொழுத்த மீன்களைப் பிடித்து தின்பதற்காகப் புறப்படும் நாரைக் கூட்டம் போல அந்தத் தோணிகள் வரிசையாக அணிவகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஏறத்தாழ ஒரு மாத காலம் கடல் பயணத்தில் கழித்த தொண்டர்களுக்கு இரவும் பகலும் கடலையும் ஆகாயத்தையுமே காணக் கூடியவர்களாக இருந்தவர்களுக்கு அன்று காலையில் எதிரே இந்திய நாட்டின் மேற்குக் கரையான கொங்கணக் கரை கண்களில் தென்பட்டது. அளவில்லா மகிழ்ச்சியை அளித்தது, பசுமை போர்த்திய குன்றுகள், அவைகளையொற்றி வளர்ந்து நிற்கும் செழிப்பான மரங்கள், மீனவர்களது குடியிருப்புகள் இவைகளை எல்லாம் கடந்து மாலை நேரத்தில் அந்தக் குழுவினர் மேற்குக் கரையின் முக்கிய துறைமுகமான கண்ணூர் துறையை அடைந்தனர். விண்ணை மறைத்து வளர்ந்து வரிசையாக நிற்கும் தென்னை மரங்கள் அந்தக் குழுவினருக்கு வரவேற்பு நல்குவதைப் போல மாலைக் காற்றில் அசைந்து காணப்பட்டன.

கண்ணூர் என்று வழங்கப்பட்ட அந்த அழகிய கண்ணனூர் துறைமுகத்தில் கரையிறங்கிய சுல்த்தான் செய்யது இபுராகிம்

குழுவினர் முதன்முறையாக இந்தியத் திருநாட்டின் தென்றல் காற்றை சுவாசித்து மகிழ்ந்து சிலநாட்கள் அங்கு ஓய்வு எடுத்தனர். பயணக் களைப்பினின்றும். பருவகால மாற்றங்களினின்றும் நீங்கியவர்களாக அந்தக் குழுவினர் தங்களது பயணத்தை மீண்டும் தொடர்ந்தனர்.

## கோழிக்கோடு துறைமுகம்

மேற்குக் கடற்கரையில் பல நூற்றாண்டுகளாக அரபு நாடுகளுடனான கடல் வாணிபத்தில் செழித்தோங்கிய பெருநகரம் இது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அரபு நாட்டில் அண்ணல் நபிகள் நாயகம் அவர்களது வாழ்நாளின் பொழுதே இஸ்லாமிய அரபு வணிகர்கள் இந்த நகருக்கு வந்து தங்கி வாணிபத் துறையில் செழித்து நிலைத்து இருந்தனர். சுல்த்தான் செய்யது இபுராகிமும் அவரது குழுவினரும் கோழிக்கோடு அடைந்த பொழுது அவர்களுக்கு அந்த மக்கள் அன்பு நிறைந்த வரவேற்பினை நல்கி மகிழ்ந்தனர்.

அந்த நகரில் துறைமுகத்தை அடுத்திருந்த மாலிக் இபுனு தீனார் பள்ளி வாசலிலும், அடுத்த குடியிருப்புகளிலும், அந்தக் குழுவினர் ஒருவாரம் தங்கியிருந்தனர். ஒரு மாத கால கடல் பயணத்தில் களைத்துப் போய் இருந்த அவர்களுக்கு கோழிக்கோடு மக்களின் அன்பும், வரவேற்பும், புதிய தெம்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டின. மேலும் அவர்கள் அந்த ஊரின் மன்னராக இருந்த சேரமான் பெருமாளுக்கும், அரபு வணிகர்களுக்கும் இடையில் நிலவிய நேசமான தொடர்புகளைப் பற்றிய செய்திகளை அந்தக் குழுவினர் கேட்டறிந்த பொழுது அவர்கள் மேலும் கூடுதலான மகிழ்ச்சியை அடைந்தனர்.

கொல்லங்கோடு அரசர் சேரமான் பெருமாள் கடந்த சில ஆண்டுகளாகவே நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை யினையும் அவர்கள் அரபு நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் அகில உலக மக்களுக்கும் வழங்கிய ஆன்மீகச் செய்திகளையும், வாழ்ந்து காட்டிய சிறந்த வாழ்க்கை முறையினையும் வணிகர்கள்

மூலம் கேட்டு அறிந்த அந்த மன்னருக்கு, இஸ்லாம் என்ற புதிய சமயத்தின்பால் மிகுதியான ஈர்ப்பும் அக்கறையும் ஏற்பட்டது. நாளடைவில் ஏகதெய்வ வழிபாட்டினைப் பிரச்சாரம் செய்து மறைந்த முஹமது நபி அவர்களது பிறந்த நகரான மக்காவையும், புகழுடம்பு தாங்கிய மதினா நகரையும் சென்று தரிசிக்க வேண்டும் என்ற உந்துதல் அவருக்கு அதிகரித்து வந்தது. ஒரு நாள் வைகறையில் கொல்லங் கோட்டிலிருந்து அரபு தாயகம் திரும்பிய வணிகக் குழுவினருடன் கொல்லங்கோடு மன்னரும் அரபு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். மக்கா, மதினா நகரங்களைத் தரிசித்து மகிழ்ந்த மன்னர் இஸ்லாத்தை ஏற்றதுடன் அப்துல் ரஹ்மான் சாமிரி என்ற புதிய பெயரையும் சூட்டிக் கொண்டார். ''சாமிரி'' என்பது காளைமாட்டினை வணங்கும் இந்தியாவைச் சேர்ந்தவர் என்பதைக் குறிக்கும் சொல். ரஹ்மான் என்பது எல்லையற்ற கருணை பொருந்திய இறைவனது திருப்பெயர். அப்துல் என்பது இறைவனது அடிமை என்பதாகும். சில நாட்கள் மதினா நகரில் முஹமது நபி அவர்கள் அடக்க பீடத்திற்கு முன்பாக அமர்ந்து தியானத்திலும், தொழுகையிலும் ஈடுபட்டு ஆன்மீகப் பற்றுக் கொண்ட கொல்லங்கோடு மன்னர் தாயகம் திரும்புவதற்கு அரபு நாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்த ஜபர் என்ற துறை முகத்தை அடைந்தார். அங்கு அவருக்கு உடல்நலிவு ஏற்பட்டது. முன்பின் அறிமுகமில்லாத, அந்த ஊரின் மக்கள் அப்துல் ரஹ்மான் சாமிரியை அன்புடனும் அனுதாபத்துடன் கவனித்து வந்தனர். அவர்களில் ஒரு அரபுப் குடும்பத்தினர், பேணிக்காத்து வந்தனர். அந்தக் குடும்பத் தலைவரின் பெயர் மாலிக் இபுனு தீனார் என்பதாகும். அவர்களின் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும் இருந்து வந்த மன்னருக்கு உடல்நிலையில் ஓரளவு முன்னேற்றம் இருந்தாலும் அவரைத் தாக்கிய நோய் அவரை விட்டு அகன்றபாடில்லை. பல நாட்கள், பல மாதங்களாகி விட்டன. கொல்லங் கோட்டிற்குப் பயணம் செய்யத் தக்க உடல்நிலை அவருக்கு ஏற்படவில்லை. ஆதலால், தொடர்ந்து அவரைக் கவனித்துப் பராமரித்து வந்த மாலிக் இபுனே தினாரின் தங்கையை மணம் செய்து கொண்டார். மன்னரைப் பற்றிய

தகவல் ஏதும் இல்லாமல் பரிதவிக்கும் கொல்லங்கோடு மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்காக மாலிக் இபுனு தீனாரை தமது பிரதிநிதியாக கொல்லங் கோட்டிற்கு அனுப்பி வைத்தார். அவரிடம் தக்க அறிமுகக் கடிதங்களை வழங்கி அவருக்கு ஏற்ற உதவிகள் அனைத்தையும் செய்யுமாறு கேரளத்தில் பல பகுதிகளில் இருந்த மன்னர்களுக்கும் பரிந்துரை அனுப்பி வைத்தார். மாலிக் இபுனு தீனார் கேரளம் வந்தபோது மக்கள் மன்னரைப் பற்றிய செய்தியைத் தெரிந்து மகிழ்ந்ததுடன். அவரின் போதனைகளைக் கேட்டு புதிய சமயமாகிய இஸ்லாத்தையும் ஏற்றனர். அவர்களின் அன்றாட வழிபாட்டிற்காக கேரளத்தில் 8 ஊர்களில் மாலிக் இபுனு தினார் புதிய பள்ளி வாசல்களை நிர்மாணித்தார். அவைகளில் ஒன்றுதான் செய்யது இபுராகிம் தங்கியிருந்த அந்த கோழிக்கோடு பள்ளிவாசலாகும்.

இந்த செய்திகள் எல்லாம் அறிந்த சுல்த்தான் செய்யது இபுராகிமுக்கும் அவரது குழுவினருக்கும் தமிழ்நாட்டுப் பயணத் திற்கான தெம்புமிகுந்தது. சில நாட்களில் அந்தக் கோழிக்கோட்டி லிருந்து புறப்பட்டு ஹிஜ்ரி 583 - இல் தெற்கே பாண்டிய நாட்டின் பெரும் துறைமுகமான காயல் பட்டினத்தைப் போய்ச் சேர்ந்தது.

❖

# இயல் - 6

# பாண்டிய நாட்டின் அரசியல் சூழ்நிலை

முடியுடை மூவேந்தர்களில் ஒருவரான பாண்டிய மன்னர் களைப் பற்றிய சிறப்பான செய்திகளைச் சங்க இலக்கியங்களும் வரலாறும் தெரிவிக்கின்றன. சேர, சோழ, மன்னர்களுக்கு இல்லாத தனிப் பெரும் சிறப்பு இந்தப் பாண்டிய மன்னர்களுக்கு மட்டும் உரியதாகும். காரணம் நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் வளர்ச்சி பற்றிச் சிந்தித்துச் செயல்பட்டவர்கள் இந்த மன்னர்கள். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழ்மொழியின் தனிப்பெரும் சிறப்பினைக் காத்து வளர்ப்பதற்காக மூன்று தமிழ்ச் சங்கங்களை இந்த மன்னர்கள் தங்கள் நாட்டில் நிறுவினர், இவர்களது கோநகரான மணலூரிலும் கபாடபுரத்திலும் பின்னர் இன்றைய நான்மாடக் கூடலாகிய மதுரையிலும் இருந்து அவை செயல்பட்டன.

இந்த மன்னர்களில் சிலரைப் பற்றிய சிறப்பான செய்திகளை சங்க இலக்கியங்கள் வழங்குகின்றன.

''கானப்பேர் எயில்கடந்த உக்கிரபாண்டியன்,
ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.
கடலுள் மாய்ந்த இளம் வழுதி
அறிவுடை நம்பி

நின்றசீர் நெடுமாறன்
வரகுண பாண்டியன்''

ஆகியவர்கள் பெருமைக்குரிய பாண்டிய மன்னர்கள். இவர்களின் வழித்தோன்றல்களாக மதுரை மாநகரில் கி.பி. 11, 12 - ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த பாண்டியர்களது வரலாறு தமிழக வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாக அமைந்துள்ளது.

இராஜராஜ சோழதேவன் ஆட்சிக் காலம் முதல் ஆதிக்க உணர்வும் நாடுகள் பிடிக்கும் நப்பாசையும் சோழ மன்னர்களிடம் வளர்ந்து வந்ததால், மதுரைப் பாண்டியநாடு சோழப் பேரரசின் அங்க மாயிற்று. இராஜேந்திர சோழன் காலத்தில் அவனது மக்கள் சோழ பாண்டியர்கள் என்ற சிறப்புப் பெயருடன் மதுரையை ஆட்சி செய்து வந்தனர். பாண்டியர்கள் அவர்களுக்குக் கட்டுப்பட்ட குறுநில மன்னர்களாகவும், சிலபோழ்து அவர்களது அனுதாபத்திற்குரியவர் களாகவும் மதுரை ஆட்சியைச் சோழரிடமிருந்து பெற்று அவர்களுக்கு உட்பட்டவர்களாக ஆட்சி செய்து வந்தனர்.

இந்த நூற்றாண்டுகளில் மதுரையும் அதனைச் சுற்றியுள்ள பகுதியையும் பராக்கிரம பாண்டியனும் திருநெல்வேலிப் பகுதியில் சடையவர்மன் குலசேகர பாண்டிய மன்னனும் ஆட்சி புரிந்து வந்தனர். இவர்களிடையே எழுந்த பிணக்கும் பொறாமைத் தீயும் பாண்டிய நாட்டில் உள்நாட்டுப் போராக மாறியது. மதுரை, பராக்கிரம பாண்டியனுக்குச் சொந்தமானதும், மதுரை நகருக்கு மேற்கே அமைந்திருந்ததுமான சோழ குலாந்தக சதுர்வேதி மங்கலம் என்ற குருவித்துறையை கைப்பற்றிய சடையவர்மன் குலசேகர பாண்டியன், மதுரையை நோக்கி முன்னேறி வந்தான். இவனது மாமனாரான கொங்குச் சோழனது உதவியிருந்ததால் படை யெடுப்புத் தீவிரமாகியது.

இதனை அறிந்த பராக்கிரம பாண்டியன் தனது நண்பனான இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவிடம் படை உதவி கோரினான்

அவனது உதவி கிடைப்பதற்கு முன்னரே சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி. 1166-இல் பராக்கிரம பாண்டியனைப் போரில் கொன்று மதுரையைக் கைப்பற்றினான். ஆனால் இலங்கை மன்னனது படைகள் கி.பி.1169-இல் மதுரையை நோக்கி முன்னேறி வந்து குலசேகர பாண்டியனை, மதுரையிலிருந்து துரத்தி விட்டு இறந்து போன பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியனை கி.பி.1170-இல் மதுரை அரியாசனத்தில் அமர்த்தி முடிசூட்டியது. சோழ நாட்டிற்கும் இலங்கை நாட்டிற்கும் இடையே பகைமை உணர்வுகள் இருந்து வந்ததால், குலோத்துங்க சோழன் குலசேகர பாண்டியனுக்கு உடனடியாகப் படை உதவி அளித்து இலங்கைப் படைகளை மதுரையை விட்டு ஓடும்படி செய்தான். வீரபாண்டி யனுக்குப் பதிலாக மதுரை மன்னனாக கி.பி. 1173 - இல் குலசேகர பாண்டியனை நியமித்தான்.

மதுரை மன்னனாக இருந்து வந்த சடையவர்மன் குலசேகர பாண்டியன், சோழர்கள் தமக்குச் செய்த நன்றியினை நாளடைவில் மறந்து விட்டு இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவிடம் உறவுகளைப் புதுப்பித்துக் கொண்டான். இதனை அறிந்து சீற்றம் கொண்ட சோழ மன்னன் இராசாதிராசன் மற்றொரு படை யெடுப்பினை மதுரை மீது ஏவிவிட்டான். குலசேகர பாண்டியன் சோழ்ப் படைகளால் தோற்கடிக்கப்பட்டு திருநெல்வேலிச் சீமைக்கு ஓடிவிட்டான். வீரபாண்டியனை மீண்டும் மதுரை மன்னனாக சோழர்கள் கி.பி. 1173 - இல் நியமித்தனர். இந்த ஆண்டிற்குப் பிறகு சடையவர்மன் குலசேகர பாண்டியனைப் பற்றிய செய்திகள் எதுவும் வரலாற்றில் இடம்பெறவில்லை. வீரபாண்டியன் ஆட்சி கி.பி. 1185 வரை நீடித்தது.

இதற்கிடையில் பாண்டியரது இளவலான மாணாபரணன் என்பவனை மணந்திருந்த இலங்கை மன்னன் பராக்கிரம பாகுவின் சகோதரிக்குப் பிறந்த சடையவர்மன் ஸ்ரீ வல்லபன் என்பவன் இலங்கையிலிருந்து தப்பி வந்து மூன்றாம் குலோத்துங்க

சோழனிடம் அடைக்கலம் புகுந்தான். நாளடைவில் இந்த சடைய வர்மன் ஸ்ரீ வல்லபனுக்கும் மதுரை மன்னன் வீரபாண்டியனுக்கும் பகைமை ஏற்பட்டதால் வேறு வழியில்லாமல் வீரபாண்டியன், அப்போது ஆட்சியிலிருந்த இலங்கை மன்னன் நிசங்க மல்லனது உதவியை நாடினான். மீண்டும் இலங்கைப் படைகளும் மூன்றாம் குலோத்துங்க சோழனது படைகளும் பாண்டிய நாட்டில் பல இடங்களில் பொருதின. முடிவு கி.பி. 1186 - இல் வீரபாண்டியன் சோழப் படைகளிடம் தோற்றும் ஓடினான். தொடர்ந்து வீரபாண்டியன் தனது எஞ்சிய பலத்துடன் குலோத்துங்க சோழனது படைகளை நெட்டூரில் சந்தித்தும் அங்கும் அவனுக்குப் பெருத்த தோல்வி ஏற்பட்டது. பின்னர் பாண்டிய நாட்டை விட்டு கேரள நாட்டிற்கு ஓடிவிட்டான். இவனது முடிவு பற்றிய செய்திகள் தெளிவாக இல்லை.[1]

கி.பி. 1186 - இல் மூன்றாவது குலோத்துங்க சோழனால் மதுரை மன்னனாக நியமிக்கப்பட்ட விக்கிரம பாண்டியன் அமைதியாக ஆட்சி செய்து கி.பி. 1190ல் இறந்தான்.[2]

இத்தகைய மிகவும் குழப்பமான சூழ்நிலையில் பாண்டியநாடு கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி இருந்து வந்ததை ஆவணங் களுடன் கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன. இதற்கு மூல காரண மாக அமைந்தது, சோழர்களது ஆதிக்க உணர்வுதான் எனக் குறிப் பிட்டால் அது மிகையாகாது. சோழர்கள் தங்களைப் போன்ற தொன்மையான முடியுடை மன்னர்கள் பாண்டியர்கள் என்பதை மறந்து, பாண்டியர்களைத் தங்களது கைப்பொம்மைகளாக இயக்கி வந்ததும் பாண்டிய நாட்டு அரசியல் பேரழிவிற்குப் பொருத்தமான காரணம் என்பதும் விளங்கும்.

---

1) சிதம்பரம் கல்வெட்டு ஏ.ஆர்.எண். 25/1903 குடந்தை என். சேதுராமன் பாண்டியர் வரலாறு (1989) பக்கம் 71.

2) சதாசிவப் பண்டாரத்தார் டி.வி. பாண்டியர் வரலாறு (1940) பக்கம் 105.

தங்களுக்கு எதிரியாக நிமிர்ந்து நின்ற இலங்கை மன்னர்கள் பராக்கிரம பாகுவையும் நிஷங்க மல்லனையும் அழிப்பதற்கும் அவர்களது இலங்கை நாட்டினை அழித்துச் சோழ நாட்டின் அடிமை நாடாக மாற்றுவதற்கும் பாண்டியர்களைச் சோழர்கள் பயன்படுத்தி வந்தனர். ஆனால் அவர்களது ஆதிக்கக் கனவு நனவாகவில்லை என்பதை இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் ஆகியோர்களது இலங்கைப் படையெடுப்புகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தச் சோழ வரலாற்றின் எச்சமாக, இன்றும் இலங்கை பொலன் நறுவா ஜனநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள சிவன் கோயில் ஒன்று மட்டும் கடந்த 900 ஆண்டுகளாக மௌன சாட்சியாக இருந்து கொண்டு வருகிறது.

❖

# இயல் - 7

## புதிய சமயத்தைப் பரப்பும் பணி

இத்தகைய சூழ்நிலையில் சடையவர்மன் குலசேகர பாண்டியன் என்பவன் காயல்நகரை கி.பி. 1162 முதல் கி.பி. 1177 வரை கோநராகக் கொண்டு ஆட்சி செய்தான் என்பது வரலாறு. இதனை பூதலமடந்தை என்று தொடங்கும் மெய்க்கீர்தியின்படி குழப்பமான நிலையை மேலும் குழப்பும் வகையில் சடையவர்மன் குலசேகர தேவன் என்ற மற்றொரு பாண்டியன் கி.பி. 1190 முதல் கி.பி. 1218 வரை நெல்லைப் பகுதியில் ஆட்சி செய்தான் என்பது மற்றொரு செய்தி. இவனது மெய்க்கீர்திகள் ''பூவின்கிழத்தி'' எனத் தொடங்குவதைக் கல்வெட்டுகளில் காணலாம்.

முன்னர் சொல்லப்பட்ட சடையவர்மன் குலசேகரன். மாறவர்மன் ஸ்ரீ வல்லபபாண்டியன் (கி.பி. 1145 - 62) என்பவனது மகனாவான். சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் கி.பி. 1187-இல் (ஹிஜ்ரி 683-ல்) வந்தபோது இந்த மன்னன் தான் காயல் நகரில் அப்போது கொழுவீற்றிருத்தல் வேண்டும் என்பது உறுதி. ஆனால் கல்வெட்டறிஞர் மறைந்த குடந்தை சேதுராமன் அவர்களது ஆய்வின்படி இந்த சடையவர்மன் குலசேகர பாண்டியனது ஆட்சிக் காலம் கி.பி. 1177-இல் முடிவடைந்ததாகத் தெரிய வருகிறது[1] சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வருகைக்கும் சடையவர்மன் குலசேகரனது கல்வெட்டுச்

---

1) என். சேதுராமன் - பாண்டியர் வரலாறு 550 - 1371

செய்திக்கும் 10 வருட வித்தியாசம் உள்ளது. சுல்தான் செய்யது இபுராகிம் அவர்களது பாண்டிய நாட்டு வருகையும் அங்கு தங்கியிருந்து வீரத் தியாகியானதுமான காலம் இஸ்லாமிய பஞ்சாங்க கணக்குப்படி ஹிஜ்ரி 583 - 594 ஆகும்.[1]

இதனைப் போன்றே சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கை வரலாற்றை விளம்புகின்ற இஸ்லாமிய வரலாற்றுச் செய்திகளுக்கும் அன்றைய பாண்டிய மன்னர்களது கல்வெட்டுச் செய்திகளுக்கும் பெருத்த வேறுபாடுகள் இருப்பதை அடுத்தடுத்துக் காண்போம்.

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வருகைக்கு முன்னரே சிலர் பாண்டியநாட்டில் இஸ்லாமிய இறைக் கொள்கை களைப் பரப்பியதை வரலாற்று ஏடுகளில் காணத்தக்கதாக உள்ளன. அவைகளில் முதலாவது செய்தி கி.பி. 7-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக உள்ளது. இஸ்லாம் என்ற புதிய சமயத்தின் ஒளிமிகுந்த கதிர்கள் அரபுத்தாயத்திற்கு வெளியே முதன் முதலாக தமிழ்நாட்டின் மேற்குக் கரையிலும், கிழக்குக் கரையிலும், பரிணமிக்கத் தொடங்கின. பாண்டிய நாட்டில் மட்டும் தான் இதற்கான உறுதியான ஆதாரங்கள் இருந்துள்ளன. கூன்பாண்டியன் என்றும், நின்றசீர் நெடுமாறன் என்றும், நூலாசிரியர்களால் அழைக்கப்பட்ட பாண்டிய மன்னரது ஆட்சிக் காலத்தில் வணிகம் நிமித்தமாக வந்த இஸ்லாமிய அரபி வணிகர்கள், மதுரையில் இருந்து வந்தனர். இவர்கள் தங்களது குடியிருப்புகளை பீபிகுளம், சொக்கிகுளம், சொரிக்குடி, கண்ணா நேம்பல், சிறுதூர், திருப்பாலை என்ற மதுரையை அடுத்த ஆறு ஊர்களில் அமைத்து வாழ்வதற்காகப் பாண்டிய மன்னனிடம் பதினா யிரம் பொன்னை விலைப் பிரமானமாகக் கொடுத்து வாங்கினார் என்பதை மதுரைச் சீமை மேன்யுவலில் குறித்துள்ளார்கள்.[2]

---

1) ஷகீதுசரிதை (1952) பக்கம்
2) Nelson - Manual of Madura Country (1861)

இந்தத் தகவலை கி.பி. 1573 ஆம் ஆண்டில் மதுரை மன்னராக இருந்த முத்துவீரப்ப நாயக்கர் இந்தக் கிராமங்களின் உரிமையினை பற்றிய சிக்கலை விசாரித்ததுடன், மதுரை நகர் கோரிப்பாளையம். பள்ளிவாசலுக்கு நேரில் சென்று சம்மந்தப்பட்ட ஆவணங்களை நேரில் பரிசீலித்து அறிந்து முடிவான உத்திரவைப் பிறப்பித்துள்ளார். கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் அரபு நாட்டு வணிகர்கள் மேலே குறிப் பிட்டுள்ள கிராமங்களைப் பாண்டிய மன்னரிடம் கிரையம் வாங்கியதை உறுதிப்படுத்தியுள்ளார். அவரது ஆணை பற்றிய கல்வெட்டு (184 வரிகளைக் கொண்டது) இன்றும் அந்தப் பள்ளிவாசலில் பாதுகாக்கப்பட்டு வருவதை யாரும் காணலாம்.[1] இந்த கல்வெட்டின் முழுமையான வாசகம் இந்த நூலில் கொடுக்கப்பட்டுள்ளது.

இன்னொரு செய்தி கி.பி. 11 - ஆம் நூற்றாண்டில் மதுரை மாநகருக்கு மாலிக்குல் முல்க் என்பவர் தமது சீடரான செய்யது அலியார்ஷா என்பவருடன் மதுரைப் பகுதியில் இஸ்லாமிய இறைக் கொள்கை பற்றிய பிரச்சாரத்தில் ஈடுபட்டு இருந்தார் என்பதனையும் ஆசிரியர் நெல்சன் அவர்களே தெரிவித்துள்ளார்கள். இவ்விதம் இஸ்லாமிய இறைக்கொள்கை பற்றிப் பிரச்சாரம், பாண்டிய நாட்டில் அமைதியான முறையில் சுல்த்தான் செய்யது இபுராகிமின் வருகைக்கு முன்னரே தொடர்ந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. என்றாலும் சுல்த்தான் செய்யது இபுராகிமின் காயல் நகர் வருகை தான் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும் தெளிவான விபரங்களைத் தருவதாகவும் அமைந்துள்ளது. இவரது ஓரிறைக் கொள்கையை 10 ஆண்டுகளுக்கு மிகுதியாகப் பாண்டிய நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் ஏற்று வந்தனர் என்பதை ஷஹாதத் நாமா என்ற பார்சி மொழி நூலும், மீசல் வண்ணக்களஞ்சியப் புலவரது இலக்கியமான தீன் விளக்கம் என்ற நூலும் உறுதிப்படுத்துகின்றன. இஸ்லாமிய அரபிகளது குடியிருப்புகள் பெரும்பாலும் கிழக்குக் கடற்கரை துறை முகங்களை ஒட்டி எழுந்தன. அவை அஞ்சு வண்ணம் என

1 கோரிப்பாளையம் கல்வெட்டு A.R.No.

அழைக்கப்பட்டதையும் அதில் வாழ்ந்தவர்கள் அஞ்சு வண்ணத் தவர், 'யவனர், சோனகர் எனவும் வழங்கப்பட்டனர் என்பதையும் கி.பி. 12-ம் நூற்றாண்டு இலக்கியமான பல்சந்தமாலையும்[1] பல கல்வெட்டுக்களும் தெரிவிக்கின்றன[2]. கி.பி. 7. 8 - ஆம் நூற்றாண்டு களில் தமிழகத்தில் ஆரியர்களது வைதீகச் செல்வாக்கினாலும், அவர்களது நீதி நூலான மனுசாஸ்திரத்தின்படி தமிழக மக்கள் நான்கு பிரிவுகளாக (வர்ணத்தினராக) பிராமணர், வைசியர், சத்திரியர், சூத்திரர் என அவர்கள் வழங்கப்பட்டு வந்தனர். இத்தகைய சாதிப் பிரிவினைச் சூழலில் அரபிய முஸ்லீம்கள் வாழ்ந்து வந்ததால் அவர்களை ஐந்தாவது வர்ணத்தினராக அஞ்சு வண்ணத்தினராக கொள்ளப்பட்டனர்.

இந்தப் புதிய சமயக் கொள்கை பாண்டிய நாட்டிலும் அதன் தென் பகுதியான நாஞ்சில் நாட்டிலும் தமிழ் மக்களின் ஆங்காங்கு பௌத்த, சமண சமய கொள்கைகளைப் போன்று ஒரு சிலரால் பின்பற்றப்பட்டு வந்தன. குளச்சல், திருவிதாங்கோடு, தக்கலை, அஞ்சுவண்ணம் ஆகிய ஊர்கள் இத்தகைய புதிய சமயத்தினரின் குடியிருப்புகளாகத் தொடர்ந்து வந்தன. பொதுவாக தமிழ்நாட்டில் சைவ, வைணவ கொள்கைகள் மக்களிடம் வலுவாகப் பரவியிருந்த பொழுதும் கி.பி. 10ம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றிய திருமூலர் முதலான பதினென் சித்தர்கள் இந்த சமயங்களைக் கடுமையாக விமர்சனம் செய்து வந்தனர். சைவ வைணவ சமயங்களில் மலிந் துள்ள பொருளற்ற சடங்குகள், நடைமுறைகள் சிறுதெய்வ வழி பாடுகள் ஆகியன இந்த விமர்சனத்திற்கு உரிய பொருளாக மக்களிடையே பரவலாகப் பேசப்பட்டு வந்தன.

இத்தகைய விழிப்புணர்வு ஏற்பட்டு வந்த சமயத்தில். தமிழகம் வந்த அரபு முஸ்லீம் வணிகரது வணிக முறைகளும் வாழ்க்கை

---

1. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பதிப்பு களவியற்காரிகை (1931)

2. நாகசாமி டாக்டர். ஆர். தஞ்சைப் பெருவுடையார்கோவில் கல்வெட்டுகள்.

நடைமுறைகளும் பாண்டிய நாட்டு மக்களை அவர்கள் பின்பற்றி வந்த சமயத்தின் பால் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். இந்த வணிகர்களைத் தொடர்ந்து பாண்டிய நாட்டிற்கு வந்த இஸ்லாமியத் துறவிகளான இறை நேசர்கள், வலிமார்கள், செய்குகள், தர்வேஷ்கள், மஸ்தான்கள் என்ற சூஃபிகளது எளிய வாழ்க்கையும் இனிய பேச்சுக்களும், ஆரவார, அர்த்தமற்ற சடங்குகளும் இல்லாத இறை வழிபாட்டு முறைகளும் தமிழ் மக்களது சிந்தனையில் ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தி வந்தன. இத்தகைய சாதகமான சூழ்நிலையில் சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்களது பணி எளிதாக அமையத் தொடங்கியது.

தென்பாண்டிய நாட்டில் தாமிரபரணி ஆறு வங்கக் கடலில் கலக்கும் சங்கமம் பகுதியில் காயல்நகர் அமைந்திருந்தது. இந்த ஆற்றின் போக்கு பல காலங்களில் மாற்றம் அடைந்து வந்ததால். இந்த காயல் நகருக்கு மேற்கே சற்றுத் தொலைவில் புன்னைக் காயல் என்ற ஊரும் அதற்கு அப்பால் பழைய காயல் என்ற ஊரும் இருந்து வரலாற்றில் மறைந்துவிட்டன. பழைய காயல் என்ற அந்த நகரம் சங்க இலக்கியங்களில் கொற்கை என்றும் கி.பி. 3,4 - ஆம் நூற்றாண்டுகளில் தமிழகக் கடற்கரைக்கு வந்த தாலமி போன்ற கிரேக்க நாட்டு நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ள ''கோல்கை'' என்பதும் இந்த ஊரேயாகும்[1]

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களும் அவரது உதவியாளர் இருவரும் அப்போது காயலில் இருந்த சடையவர்மன் குலசேகர பாண்டியனைச் சந்திப்பதற்காக மன்னரது மாளிகைக்குச் சென்றனர். அரபு நாட்டிலிருந்து அந்தக் குழுவினர் வந்திருப்பது அறிந்து அவர்களைச் சந்திக்க மன்னர் இணங்கினார். பாண்டிய மன்னரைச் சந்தித்த சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் மன்னரிடம் தெரிவித்ததின் சுருக்கம் வருமாறு.

---

1. திருச்சிராப்பள்ளி கோட்டைப் பள்ளி வாசலிலுள்ள அரபிக் கல்வெட்டு.

''தங்களது நாட்டிற்கு வடமேற்கே உள்ள அரபு நாட்டில் இருந்து வந்துள்ளோம். எங்களது நாட்டிற்கும், தங்களது நாட்டிற்கும் கடந்த பல நூற்றாண்டுகளாக வாணிபத் தொடர்புகள் இருந்து வந்துள்ளதை மன்னர் அவர்கள் அறிந்திருப்பீர்கள். தங்கள் நாட்டிலிருந்து அகிலும், துகிலும், மிளகும் எங்களது நாட்டிற்குக் கொண்டு வந்து விற்கப்பட்டன. பண்டமாற்றுதல் முறையில் எங்கள் நாட்டு வாசனைப் பொருள்களான அத்தர், பன்னீர், தோல் பொருட்கள் மற்றும் பொன், தங்கள் நாட்டு வணிகர்களுக்கு விற்கப்பட்டு வந்தன. ஆதலால் எங்களுக்கு மிகவும் அறிமுகமான தமிழ்நாட்டிற்கு அரபு நாட்டு மதினநகரின் குறுநில மன்னனான நானும், எனது குழுவினரும் சமயத் தொண்டிற்காக தங்கள் நாட்டிற்கு நேற்று வந்து கரையிறங்கினோம்.''

''எங்களது பயணத்தின் ஒரே இலட்சியம் மக்களுக்கு ஏகதெய்வ[1] கொள்கையைப்பற்றிப் பிரச்சாரம் செய்வது மட்டுமாகும். எண்ணறிய பிறவிகளில் மிகச் சிறந்ததான, மனிதப் பிறவியைப் பெற்றுள்ள மக்கள் இறைவன் வழங்கியுள்ள விழுமிய அறிவினைக் கொண்டு நன்மை தீமைகளில் பகுத்து அறிந்து இறைவனது வழியில் தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்பதுதான் இறைவனது கட்டளையாகும். இதனை என் போன்ற தொண்டர்கள் கடந்த பலநூறு ஆண்டுகளில் ஆப்பிரிக்க கண்டத்தின் பல நாடுகளிலும் ஐரோப்பிய கண்டத்தின் ஸ்பெயின் போன்ற நாடுகளிலும், இந்த நாட்டில் பஞ்சாப், சிந்து குஜராத் பகுதிகளிலும், பிரச்சாரம் செய்து வந்துள்ளனர். கேரளக் கரையில் ஆட்சி செய்த சேரமான் பெருமாள் மன்னரது பிரதிநிதியான மாலிக்கிப்னுதினார் என்ற புனிதர் கி.பி. 9-ம் நூற்றாண்டில் கேரளா நாடு முழுவதும் ஓரிறைக் கொள்கையான இஸ்லாத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்ததுடன் ஆங்காங்கு பல தொழுகைப் பள்ளி

---

1. Neelakanda Shastri - K.A. Foreign Notices of South India (1948) Page -

வாசல்களை நிறுவியுள்ளார். சோழ நாட்டிலும் வணிகத் தொடர்பு கொண்டுள்ள எங்களது நாட்டு இஸ்லாமிய வணிகர்கள் சோழ மன்னரது தலைநகரான உறையூரில் ஒரு தொழுகைப் பள்ளிவாசலை ஏற்படுத்தி உள்ளனர். இந்த பள்ளி வாசலை ஹாஜி அப்துல்லாபின் அன்வர் என்ற பெரியார் கி.பி. 727 - இல் நிர்மாணித்ததை அங்குள்ள அரபி மொழி கல்வெட்டு தெரிவிக்கின்றது. தஞ்சையில் ஆட்சிபுரிந்த இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் எங்கள் நாட்டு வணிகர்களுக்கு வாணிபச் சலுகைகளை வழங்கி வந்ததுடன், அவர்களது அவைக் களத்தில் சிறப்பான இடங்களையும் நல்கியிருந்தனர். இந்த வணிகர்கள் தமிழ்நாட்டின் கடற்கரைகளில் நிலையாகத் தங்கி அஞ்சு வண்ணம் என்ற குடியிருப்புகளையும் அமைத்துத் தமிழ்நாட்டில் வாணிபம் செய்து வந்ததுடன், தங்களது வாணிபச் செலாவணிக்கு ஏற்றவாறு தங்களது பூர்வீக நாடான அரபு நாட்டில் வழங்கி வந்த தினார் (பொன் நாணயம்) திர்கம் (வெள்ளி நாணயம்) நாணயங்களைத் தமிழ் நாட்டிலும் செலவாணியில் விட்டுள்ளனர். அவை முறையே தமிழ் மக்களது உச்சரிப்பிற்கு ஏற்றவாறு தினாரா, திரம்மா என்று வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் தமிழ் மன்னர்களது வழியில் பாண்டிய நாட்டு வேந்தரான தாங்களும் எங்கள் குழுவினருக்குத் தங்கள் நாட்டில் ஓரிறைக் கொள்கையைப் பிரச்சாரம் செய்வதற்கு மேலான அனுமதியை வழங்கி உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.''

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வேண்டுகோளைப் பொறுமையுடன் கேட்டறிந்து பாண்டியன் குலசேகரன், சுல்த்தான் அவர்களுக்கு உரிய அனுமதியைத் தயக்கமின்றி வழங்கியதுடன் அவர்களது குழுவினருக்குத் தேவைப்படும் உதவி புரிவதாகவும் வாக்களித்தார். மன்னருக்கு நன்றி கூறிய சுல்த்தான் அவர்கள் மகிழ்ச்சியுடன் காயல் நகர் கடற்கரை முகாமிற்குத் திரும்பி னார்கள்...... சுல்த்தான் அவர்கள் தமது குழுவினரைப் பல சிறிய குழுக்களாகப் பிரித்துத் தென் பாண்டிய நாட்டில் பல பகுதிகளிலும் ஓரிறைக் கொள்கையையும், நபிநாதர் அவர்களது பணிகளையும்

எடுத்துச் சொல்லி மக்களை ஆன்மீகப் பாதையில் அழைக்குமாறு செய்தார்.

ஓரிறைக் கொள்கை என்பது தமிழ்நாட்டிற்கு புதியதல்ல. சங்ககாலத்தில் இருந்த புலவர் பெருமக்களும் பின்னர் 10,11 - ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சித்தர்களும் தமிழக மக்களுக்குக் காட்டிய ஆன்மீக வழியே இதுவாகும்.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே உணர்மின்''

என்ற திருமூலரின் திருமந்திரமும் ஏனைய சித்தர்களது போதனையும் அதுதான். இந்து சமயத்தில் இரண்டு பிரிவுகளில் ஒன்றான வைணவம், வலியுறுத்தும், அத்வைதம் என்ற கொள்கை இந்த ஓரிறைக் கொள்கையே ஆகும். ஆதலால் இஸ்லாம் என்ற ஓரிறைக் கொள்கையை சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களும் அவரது குழுவினரும் பிரச்சாரம் செய்த பொழுது, பாண்டிய நாட்டு மக்களில் கணிசமான பகுதியினர் அந்தக் கொள்கையை முழுமை யாக ஏற்று தாங்கள் கடைப்பிடிப்பதற்கான ஆன்மீக வழியாகக் கொண்டு ஒழுகலாயினர். இத்தகைய பிரச்சாரத்தினால் ஈர்க்கப்பட்ட வர்களில் தமிழக சித்தர்களில் ஒருவரான சதுரகிரிமலையைச் சேர்ந்த இராமதேவர் என்பவரும் ஒருவராவார். இஸ்லாமிய இறைக் கொள்கை இவரது உள்ளத்திற்கு மிகவும் இதமாக இருந்த காரணத் தினால் இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய இந்த சித்தர் இஸ்லாமியப் புனிதத் தலங்களான மக்கா, மதினா ஆகிய தலங்களுக்குப் புனிதப் பயணம் சென்று திரும்பினார். அவர் தமது பெயரையும் யாக்கோப்புச் சித்தர் என மாற்றிக் கொண்டார். அக்காலத்தில் தமிழகத்தில் பதினென் சித்தர்களுள் ஒருவராக போற்றப்பட்டவர் இராமதேவர் என்பவர், இவரே. இவர் ஞானப்பாடல்களுடன் வைத்திய முறைச் சம்பந்தமாக பல பாடல்களையும் பாடியுள்ளார். அந்தத் தொகுப்பு யாக்கோப்பு சித்தரது வைத்திய சிந்தாமணி எனப்

பெயரிடப்பட்டுள்ளது. சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர் களுக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுவாகும்.

இத்தகைய முதல் வெற்றியினால் மகிழ்ச்சியுற்ற சுல்த்தானும் அவரது குழுவினரும் தங்களது சமயப் பணியினை மிகவும் தீவிரமாகத் தென்பாண்டிய நாட்டில் தொடர்ந்து வந்ததுடன் அடுத்து வடக்கு நோக்கி தங்களது பணியினைத் தொடங்குவதற்கு தக்க ஆயத்தங்களைச் செய்வதில் முனைந்து வந்தனர். திட்டமிட்டபடி சுல்த்தான் அவர்கள் தம்முடன் வந்திருந்த பல நூறு தொண்டர்களில் ஒரு பிரிவினரை மட்டும் காயல் நகரில் தங்கி இருக்குமாறு செய்து விட்டு, மற்றவர்களுடன் வட திசையில் மதுரை நோக்கிப் பயணமானார்கள்.

❖

# இயல் - 8

# மதுரைப் போர்

## மதுரைக்கோட்டை

இஞ்சிசூழ் மதுரை என இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரையில் சங்ககாலப் பாண்டியர்கள் கோட்டை கொத்தளம் அமைந்திருந்ததற்கான சான்றுகள் இல்லை. பிற்காலப் பாண்டியப் பேரரசு காலத்தில் இருந்து வலிமைமிக்க கோட்டை உருவாகி இருக்க வேண்டும். இதனை கி.பி. 16-ம் நூற்றாண்டில் விஜயநகர மண்டலேஸ்வரர்களும், மதுரை நாயக்க அரசு வழியினரும் மேலும் வலிமைமிக்க அரணாக மாற்றினர் என்பது வரலாற்று ஆய்வாளர் களது கருத்தாகும்.

காயல்நகரிலிருந்து புறப்பட்ட சுல்த்தான் செய்யது இபுராகிமும் அவரது சமயத் தொண்டரணியும், வழி எங்கும் இஸ்லாமிய பிரச்சாரத்தில் ஈடுபட்டவர்களாக சுமார் 15 நாட்களுக்குப் பிறகு மதுரைப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். இந்த அணியினர் மதுரைக்கு தெற்கே 5 கல் தொலைவிலுள்ள திருப்பரங்குன்றம் பகுதியில் முகாமிட்டு இருந்தனர். இரண்டு நாள் ஓய்விற்குப் பின்னர் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் தங்களது குழுவினருடன் ஆலோசித்து பிறகு மதுரையில் இருந்த பாண்டிய மன்னருக்குத் தூது அனுப்புவது என முடிவு செய்தனர். இந்தப் பணிக்கென அமிர் இஸ்கந்தர், செய்யது முஹைதின் என்ற இரு வீரர்களைத்

தேர்ந்தெடுத்து பாண்டிய மன்னருக்கு ஒரு ஓலையையும் கொடுத்து தூதராக அனுப்பினர். இந்த ஓலையில் அவர்கள் அரபு நாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு ஏக இறைவனது சன்மார்க்க கொள்கையினைப் பிரச்சாரம் செய்வதற்கு வந்திருப்பதாகவும், ஏற்கனவே பாண்டிய நாட்டில் பரவியுள்ள இஸ்லாம் என்ற சாந்தி மார்க்கத்தை மேலும் வலுப்படுத்தி அனைத்து மக்களிடமும் அன்பும், மனித நேயமும் மிக்க ஆன்மீக உறவுகளை அதிகப்படுத்துவதற்கும் வந்திருப்பதாக சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். மேலும் இத்தகைய புனிதப் பணிக்குக் காயல் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யும் சடையவர்மன் குலசேகர பாண்டியன் வழங்கியுள்ள சிறப்பான வரவேற்பையும். அனுமதியும் நினைவு படுத்தி மதுரைப் பகுதியிலும் தங்களது சமயப் பிரச்சாரத்திற்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்குமாறு கோரியிருந்தார்கள்.

இஸ்லாமியத் தூதுவர்களது மடலினைப் பெற்றுப் படித்துப் பார்த்த பாண்டிய மன்னன், சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது கோரிக்கையைப் புறக்கணித்தான். ஏற்கனவே தமது சகோதரராக காயல் நகர் குலசேகரபாண்டியனுடன் நல்ல உறவுகளைப் பேணி வராத மதுரை மன்னருக்கு இந்த இஸ்லாமிய சமயக் குழுவினர் மிகுந்த எண்ணிக்கையில் வந்திருப்பது கலக்கத்தை அளித்தது. மேலும் தமது நாட்டில் தீய பிரச்சினைகள் எதுவும் ஏற்படவிடாமல் பார்த்துக் கொள்வது தான் சரியான நடைமுறையாக இருக்கும் எனவும் பாண்டிய மன்னர் கருதினான். அவர்களது கொள்கை பாண்டிய நாட்டு மக்களுக்கு ஏற்புடையது அன்று என்றும், அதனால் தமது நாட்டுப் பகுதியிலிருந்து அவர்களை வெளியேறிவிடும் படியாகவும் உத்திரவிட்டான்.

மன்னனது மறுப்பினை தூதுவர் மூலம் அறிந்த சுல்த்தான் அவர்கள் தமது முயற்சியில் மற்றுமொரு நடவடிக்கையாக மதுரை மன்னனை நேரே சந்தித்து தங்களது கோரிக்கையைப் பற்றி விபரமாக எடுத்துச் சொல்வதென உறுதி செய்தார்கள். இதனைத்

தொடர்ந்து மறுநாள் காலையில் சுல்த்தானும் அவரது குழுவினரின் ஒரு பகுதியினரும் மதுரை மாநகர் நோக்கிப் பயணமானார்கள். நகருக்குத் தெற்கே ஒரு கல் தொலைவில் அவர்களைத் தடுத்து நிறுத்திய பாண்டிய வீரர்கள் மன்னருக்கு தகவல் தெரிவித்து உத்தரவு கோரினர். மதுரைப் பாண்டியன் தனது நிலையினின்று மாறாமல். இஸ்லாமியக் குழுவினரைச் சந்திக்க மறுத்ததுடன் திரும்பிச் செல்லுமாறும், தவறினால் வன்முறையில் அவர்களை வெளியேற்ற வேண்டும் என அரசனது உத்தரவு இருந்தது. இதனை அறிந்த சுல்த்தான் அவர்கள் மன்னரது உத்தரவை மீறுவதென்றும், அமைதியான பிரச்சாரப் பணிக்கு ஏற்படும் இந்தத் தடங்களை எதிர்த்து மதுரை மாநகருக்குள் பிரவேசிப்பது என முடிவு செய்தார்கள். மறுநாள் காலையில் திருப்பரங்குன்றம் பகுதியில் இருந்த எஞ்சிய தொண்டர்களையும் வரவழைத்து தமது முழு அணியுடன் மதுரை நகருக்குள் பிரவேசிக்க முயற்சித்தார்கள். இந்த முயற்சி வன்முறையாக மாறியது. பாண்டிய வீரர்களும் சுல்த்தானது தொண்டர்களும் கை கலப்பில் ஈடுபட்டனர்.

இந்த மோதலைக் கேட்டறிந்த சுல்த்தான் அவர்கள் மிகவும் வேதனைப் பட்டார்கள். பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து வந்து சன்மார்க்கப் பிரச்சாரத்தைச் செய்ய இயலாமல், மாறாக வன்முறையை சந்திக்க வேண்டிய தாயிற்றே என்பதே அவரது வேதனையாகும். அமைதியான ஏக இறைக் கொள்கை பற்றி பிரச்சாரம் செய்வதற்காக மட்டுமே வந்திருந்த தொண்டர்கள் வன் முறையைத் தடுப்பதற்காக அவர்களும் பாண்டிய வீரர்களுடன் வன் முறையில் ஈடுபட்டனர். அடுத்தடுத்த நாட்களில் இருதரப்பினரும் ஒருசிறிய போரினில் ஈடுபட்டனர். போரின் முடிவு இஸ்லாமியத் தொண்டர்களுக்கு சாதகமாகவே இருந்தது. ஏற்கனவே சிந்துப்பகுதி, குஜராத், கேரளக்கரை, திருநெல்வேலிப் பகுதி ஆகிய இடங்களில் எல்லாம் ஆங்காங்குள்ள மக்களுடன் இணக்கமான முறையில் இஸ்லாமியக் கொள்கையினை எடுத்து இயம்பிய அந்தத் தொண்டர் களுக்கு, மதுரைக் கோட்டை அனுபவம் முற்றிலும் மாறுபட்டதாக

அமைந்திருந்தது. சுல்த்தான் அவர்களது தொண்டர்கள் பாண்டிய வீரர்களது எதிர்ப்பை முறியடித்துக் கோட்டைக்குள் புகுந்த பிறகும் பாண்டியரது வீரர்கள் அவர்களது முன்னேற்றத்தைத் தடுக்கும் வழிகளில் போராடினர் என்றாலும், இறை உணர்வுடன் இறைவனது மார்க்கத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற குறிக்கோளில் அவர்கள் மிகுந்த ஆக்ரோசத்துடன் பாண்டிய வீரர்களை வெற்றி கண்டனர்.

கோட்டைக்குள் இருந்த பாண்டியன் தமது குடும்பத்தினருடன் கோட்டையின் வடக்கு வாசல் வழியாக சோழ நாட்டிற்கு உயிர் தப்பி ஓடினான். இதைத் தவிர அப்போது பாண்டியனுக்கு வேறு வழி யில்லை. இப்போது சுல்த்தான் அவர்களது தொண்டர்கள் மதுரை மாநகர மக்களிடம் ஏக இறைக் கொள்கையைத் தெளிவாக எடுத்துச் சொல்லினர். அதில் ஓரளவு எதிர்பார்த்த வெற்றியையும் எய்தினர். அடுத்து என்ன செய்ய வேண்டும்?

சுல்த்தான் அவர்கள் தமது தளபதியான இஸ்கந்தரையும் ஏனைய முக்கிய அணித்தலைவர்களையும் வரவழைத்து ஆலோசனை நடத்தினார்கள். மதுரை மாநகரில் இயல்பான வாழ்க்கை நிலையை ஏற்படுத்திவிட்டதால் அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணியைப் பற்றி ஆய்வு செய்தனர். முடிவு கோட்டைப் பொறுப்பை தளபதி இஸ்கந்தரிடம் ஒப்படைத்துவிட்டு தென்கிழக்காகக் கடற்கரைப் பகுதிக்குச் சென்று, பாண்டியனது இளவலான விக்கிரமபாண்டியனைச் சந்தித்துப் பேசுவது என முடிவு செய்தார்கள்.

❖

# இயல் - 9

# கிழக்குப் பகுதியில் இஸ்லாம்

## பௌத்திர மாணிக்கப்பட்டினம்

பாண்டிய நாட்டின் கிழக்குக் கடற்கரையில் கீழக்கரை. வேதாளை ஆகிய இரு ஊர்களுக்கு இடையே கடற்கரையில் இந்த ஊர் அமைந்துள்ளது. அதன் இன்றைய பெயர் பெரியபட்டனம் ஆகும். கி.பி. 15 - ஆம் நூற்றாண்டு வரை மிகச் சிறந்த பாண்டிய நாட்டு துறைமுகங்களில் ஒன்றாக விளங்கி வந்தது. பௌத்திர மாணிக்கம் என்பது பவித்திர மாணிக்கம் என்ற வடசொல்லின் திரிபு ஆகும். காக பேதம் போன்ற எண்வகை குற்றங்கள் நீங்கிய நல்ல மாணிக்கம் என்பது தான் இதன் பொருள். வெவ்வேறு காலங்களில் வளமையிலும் வணிகச் செழுமையிலும் சிறந்திருந்த பட்டிணங் களைக் குறிப்பதற்காக இந்தச் சொல் வழக்குப் பெற்றுள்ளது. ஒரு காலத்தில் கொற்கை நகரமும் இன்னொரு காலத்தில் தொண்டியும் பவித்திர மாணிக்கம் என்ற பெயரால் வழங்கப்பட்டிருப்பதை அந்த ஊர்களில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

இராமநாதபுரம் பகுதியில் அமைந்திருந்த இந்த பவித்திர மாணிக்கப் பட்டிணத்தைப் பற்றிய கல்வெட்டு ஒன்று திருப்புல்லாணி திருக்கோயிலில் காணப்படுகிறது. இந்த கல்வெட்டினைப் பொறித்தவன் எம்மண்டலமுங் கொண்டான் என்ற சிறப்புப் பெயருக்குரிய மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆவான் (கி.பி. 1216 - 1232) அந்தக் கல்வெட்டின் வாசகம் கீழ்ச்

செம்பி நாட்டு பவித்திர மாணிக்கப் பட்டிணத்தின் கீழ்பால் உள்ள பிலார் பள்ளியான சோனக சாமந்த பள்ளிக்கு இறையிலியாக ஆம்புத்தூர் முதலிய கிராமங்கள் வழங்கப்பட்டதை தெரிவிக்கின்றது.[1]

இந்தக் கல்வெட்டுப் பொறிப்பதற்கு முன்னரே கி.பி. 12 - ஆம் நூற்றாண்டில் இந்த ஊர் பராக்கிரம பட்டிணம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு கி.பி. 1166 வரை ஆட்சி செய்த பராக்கிரம பாண்டியனது பெயரால் இந்த ஊர் வழங்கி வந்தது.

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் அப்பொழுது பராக்கிரம பட்டிணம் என வழங்கப்பட்ட பவித்திர மாணிக்க பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விக்கிரம பாண்டியனுக்கு தூதுக்குழு ஒன்றினை அனுப்பி வைத்தார்கள். கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்வதற்காக அந்தப் பாண்டிய மன்னனது அனுமதியைக் கோரி அந்தக் குழு அங்கு அனுப்பப்பட்டது.

அந்தத் தூதுக் குழுவினர் விக்கிரம பாண்டியனைச் சந்தித்து தங்களது தலைவரான சுல்த்தான் செய்யது இபுராஹிம், அரபு நாட்டில் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் என்ற புதிய சமயத்தைத் தோற்றுவித்த முகமது நபிகள் அவர்களது வழியில் வந்தவர் என்றும் மதினப் பகுதியின் மன்னர் என்றும் தெரிவித்தார்கள். அதற்கு முந்தைய ஐநூறு ஆண்டுகளில் ஏகதெய்வ கொள்கையினை வலி யுறுத்தும் இஸ்லாம் என்ற புதிய சமய நெறியை இந்திய நாட்டிற்கு மேற்கே உள்ள பாரசீகம், துருக்கி, சிரியா, பாலஸ்தீனம் ஆகிய மேற்கு ஆசிய நாடுகளிலும், எத்தியோபியா, சூடான், எகிப்து, துனிஷயா, மொராக்கோ, அல்ஜியஸ் ஆகிய ஆப்பிரிக்க நாடுகளிலும் பரவலாக மக்களால் பின்பற்றப்படுகிறது என்பதை

1 திருப்புல்வாணிக் கல்வெட்டு A.R. No.

அந்தத் தூதுக்குழு பாண்டியனுக்குத் தெரிவித்தது. ஏற்கனவே பாண்டிய நாட்டிற்கும் அரேபிய நாட்டிற்கும் இடையில் வாணிபம் வளர்ந்து வந்திருப்பதைப் போன்று பாண்டிய நாட்டில் ஏக தெய்வக் கொள்கையான இஸ்லாத்தை பிரச்சாரம் செய்து மக்களை இறைவனது வழியில் அணி திரளுமாறு செய்வதே எங்கள் தலைவரது நோக்கம் என்பதைத் தெரிவித்ததுடன் விக்கிரம பாண்டியனது ஆட்சியில் அமைந்த பகுதிகளில் அமைதியாக இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்ய அனுமதியும் கோரினர்.

தமது நாட்டுக் குடிமக்கள் நல்ல முறையில் சிவனிய கொள்கையினைப் பின்பற்றி வருபவர் என்றும் அவர்களுக்கு வேறு புதிய சமய நெறி தேவையில்லை என்றும் ஆதலால் அந்தக் குழு வினரும் அவரது தலைவரும் பாண்டிய நாட்டைவிட்டு அகன்று விடுமாறும், தவறினால் வன்முறையில் அவர்கள் வெளியேற்றப் படுவர் என்றும் பாண்டியன் தெரிவித்துவிட்டான். ஏமாற்றமுற்ற தூதுக் குழுவினர் மதுரைக்குத் திரும்பி செய்தியை சுல்த்தான் செய்து இபுராகிம் அவர்களுக்குத் தெரிவித்தனர்.

சுல்த்தான் அவர்கள் தமது நண்பர்களுடன் நீண்ட ஆலோசனை செய்த பிறகு விக்கிரம பாண்டியனது ஆட்சிப் பகுதியில் இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொள்ளுவது என்றும், பாண்டியன் எதிர்ப்பையும் வன்முறையையும் தமது தொண்டர்கள் மீது பயன்படுத்தினால் தாமும் அந்த வன்முறையைச் சந்திப்ப தென்று முடிவு செய்தார்கள். சில நாட்களில் தமது குழுவினருடன் சுல்த்தான் அவர்கள் கிழக்கு இராமநாதபுரம் பகுதிக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். ஏற்கனவே காயல் பட்டினத்தில் முகாமிட்டிருந்த அவர்களது தொண்டரணியும் இராமநாதபுரம் பகுதிக்கு மதுரை அணியினருடன் வந்து சேர்ந்து கொண்டனர்.

எதிர்பார்த்தப்படியே விக்கிரம பாண்டியனது படைகள் சுல்த்தான் அவர்களது தொண்டர் படையுடன் பொருதின. பல இடங்களில் போர் உக்கிரமாக நடைபெற்றது. பத்து நாட்கள்

தொடர்ந்த அந்தப் போரில் இரு தரப்பினருக்கும் மிகுதியான ஆட்சேதம் ஏற்பட்டது. விக்கிரம பாண்டியனது மக்கள், மருமக்கள் ஆகிய முக்கியமான தளபதிகள் கொல்லப்பட்டனர் என்பதை இஸ்லாமிய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. இதனைப் போன்றே சுல்த்தானது அணியைச் சேர்ந்த மிகச் சிறந்த வீரர்களான செய்யது காதிர், அப்பாஸ், சம்சுதீன், இமையான், முகையதீன் ஆகியோர்கள் வீரமரணம் அடைந்ததுடன், சுல்த்தான் அவர்களது தம்பியான செயினுள் ஆபிதீனும் சுல்த்தான் அவர்களது குமாரரான அபுதாஹீரும் சகிது (தியாகிகள்) ஆனார்கள். எஞ்சியிருந்த வீரர்களைத் திரட்டிச் சுல்த்தான் அவர்கள் மிகுந்த வீராவேசத்துடன் பாண்டியனது படைகளைப் பொருதி அழித்தார்கள். இறுதியாக விக்கிரமபாண்டியனும், சுல்தான் அவர்களது வாளுக்கு இரையானான்.

பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் கோட்டை, அரண்மனை, கருவூலம் ஆகியவை சுல்த்தான் செய்யது இபுராஹிமின் உடைமை ஆகியன. இந்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி நடைபெற்றது ஹிஜ்ரி 583. துல்கயிதா பிறை 10 (11.1.1188) ஆகும். பாண்டிய நாட்டு வரலாற்றில், இந்த நிகழ்ச்சி ஒரு புதிய திருப்பு முனையாக அமைந்தது.

## பாண்டிய நாட்டில் புதிய ஆட்சி

மக்காவிலிருந்து மதின மாநகர் சென்ற முகம்மது நபி அவர்கள் மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக விளங்கியதுடன் இஸ்லாம் மார்க்கம் பரவிய பாரசீகம், சிரியா போன்ற நாடுகளின் நிர்வாகத்தையும் ஏற்று நடத்தியது போல இப்பொழுது சமயப் பிரச்சாரத்திற்காகப் பாண்டிய நாடு வந்த சுல்தான் செய்யது அவர்கள், அந்த நாட்டின் அரசு பதவியில் அமர்ந்து நீதி பரிபாலனம் செய்யும் அரிய வாய்ப்பினை இறைவன் அவர்களுக்கு அளித்து மகிழ்ந்தான். சுல்தான் அவர்களது தொண்டர்கள் அதிகாரப் பூர்வமான முறையில் பாண்டிய நாடு முழுவதும் பயணம் செய்து மக்களைப் புதிய தெய்வ சமயமாகிய இஸ்லாத்தில் இணையும் வாய்ப்பினை

ஏற்படுத்தினர். ஓரிறைக் கொள்கை இம்மை, மறுமையின் அதிபதியான இறைவனை உறுதியுடன் நம்பி ஒழுகுவது, மக்கள் அனைவரிடமும் அன்பு கொண்டு சகோதரர்களாக மதித்து நடத்துதல், நாள்தோறும் ஐந்து வேளைத் தொழுகையில் ஈடுபட்டு மன அமைதி பெறுதல், போன்ற புதிய நிலைப்பாடுகளினால் ஈர்க்கப்பட்ட மக்கள், சுல்தான் செய்யது இபுராகிம் அவர்கள் திரு முன்னர் இஸ்லாத்தை ஏற்று உலகமெங்கும் பரவியுள்ள இஸ்லாமிய மக்களது சகோதரர்களாக மாறினர். இந்த மக்களது மனப் போக்கிலும் வாழ்க்கை நெறியிலும் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டது. இதனால் அதுவரை பல குழப்பங்களினாலும் போர்களினாலும் அவதியுற்று வந்த அவர்களுக்கு அமைதியாகவும் ஆறுதலாகவும் வாழத்தக்க சூழ்நிலை எழுந்தது.

ஏறத்தாழ 10 ஆண்டுகள் நடைபெற்ற சுல்தான் செய்யது இபுராகிமின் நல்லாட்சியினை உணர்ந்த குடிமக்கள் பலர் புதிய சமயமாகிய இஸ்லாத்தை நாளடைவில் ஏற்று வாழ்ந்து வந்தனர். வடக்கே சுந்தரபாண்டியன் பட்டணத்திலிருந்து மச்சூர், தொண்டி, மங்கலக்குடி, அஞ்சுக்கோட்டை நம்புதாழை, திருப்பாலக்குடி, இராஜசிங்க மங்கலம், அழகன்குளம், ஆற்றாங்கரை, வேதாளை, சிக்கல், முதுகுளத்தூர் ஆகிய ஊர்களிளெல்லாம் முஸ்லீம்கள் பரவலாக வாழ்ந்து வரத் தொடங்கினர்.

சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் இந்த மக்களுக் காகப் பல புதிய வழிபாட்டுத் தலங்களை நிறுவியதுடன், நமது மக்கள் இறைவனுக்கு அஞ்சியவர்களாகவும் நல்ல முஸ்லீம்களாக வும் நேர்வழியில் வாழத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னர் வரை பாண்டிய நாட்டின் கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்த சோனகன் பேட்டை, பாசிப்பட்டிணம், தொண்டி, சோழியக்குடி, தேவிபட்டனம், ஆற்றாங்கரை, அழகன் குளம், காயல்பட்டிணம் ஆகிய ஊர்களுடன் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த சில அரபு நாட்டு முஸ்லிம்கள் மட்டும்தான் அங்கும் இங்குமாக காணப்பட்டனர். ஆனால் இப்பொழுது பாண்டிய

நாட்டின் கிழக்குப் பகுதியில் மக்கள் தொகையில் கணிசமான அளவிற்கு புதிய முஸ்லீம்களின் நடமாட்டம் இருந்து வந்தது. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அரபியரது வழிகாட்டுதலினால் இந்த மக்கள் கடலோர நாடுகளுடனும் கடலுக்கு அப்பால் உள்ள கிழக்கு ஆசிய நாடுகளுடனும் வியாபாரத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்தனர். பாரம்பரியத் தொழில்களான சங்கு எடுத்தல், முத்துக் குளித்தல், அம்பர் சேகரித்தல் ஆகிய கடல்படு தொழில் களில் புதிய உத்திகளையும் தெரிந்து பின்பற்றலாயினர்.

அமைதியும், இறைவனது கருணையும் இணைந்து எழுந்த இந்தப் புதிய சூழ்நிலையில் பாண்டியநாட்டு மக்கள் சிறப்பாக முன்னேற்றப் பாதையில் நடந்து வந்தனர். சுல்தான் செய்யது இபுராகிம் அவர்களது ஷரிஅத் ஆட்சி அவர்களுக்கு பக்க பலமாகவும் வழிகாட்டியாகவும் இருந்து வந்தது. இவர்களது வணிகத்திற்கு உதவுவதற்காக சுல்தான் அவர்கள் சில புதிய நாணய வகைகளையும் பாண்டிய நாட்டு செலாவணியில் சேர்த்தார்கள். செம்பு, பொன் ஆகிய கனிமங்களில் அச்சடிக்கப்பட்ட சுல்தான் அவர்களது நாணயங்கள் சில கிடைத்துள்ளன. அவைகளில் சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்களது தந்தையான செய்யது அகமது என்ற பெயரும் சேர்க்கப்பட்டு சுல்தான் செய்யது இபுராகிம் பின் செய்யது அகமது என பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். ஏற்கனவே பாண்டிய நாட்டின் செலாவணியில் இருந்த தினாரா (தினார்) திரம்ம (திர்ஹம்) என்ற அரபு நாட்டுப் பொன், வெள்ளி நாணயங்களுடன் சுல்தான் அவர்களது நாணயங்களும் செலாவணியில் இருந்து வந்தன. டாக்டர் அப்பாத்துரையார் தமது நூலில் பாண்டிய நாட்டில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை அரபு நாட்டு நாணயங்களான தினார், திர்ஹம் செலாவணியில் இருந்ததைக் குறிப்பிட்டுள்ளார்[1] தினாரா என்ற அரபு நாட்டுத் தங்க நாணயம் கி.பி. 8 - ஆம் நூற்றாண்டு முதல் சேதுநாட்டுச் செலவாணியில்

---

1. Appadurai. Dr. - Economic Conditions of Tamil Nadu (1100 AD - 1300 AD)

இருந்ததைத் திருப்பத்தூர் கல்வெட்டு ஒன்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. பார்ப்பனப் பெண்மணி ஒருத்தி திருப்பத்தூர் திருத்தலியாண்ட நாயனாருக்கு வழிபாடு செய்ய இரண்டு தினார்களை வழங்கினார் என்பதுதான் அந்தச் செய்தி. அவைகளின் ஒரு பகுதியே சுல்தான் செய்யது இபுராகிம் அவர்களது நாணயங்களாகக் கொள்ளலாம்.[1]

மேலும் புதிய குடிமக்களது பயன்பாட்டிற்கென சுல்தான் அவர்கள் பல புதிய பள்ளிவாசல்களையும் நிர்மானித்தார்கள். முஸ்லீம் மக்களிடையே ஒற்றுமையையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் குறிப்பிடும் ஐந்து வேளை தொழுகைகளில் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். சுல்த்தான் அவர்கள் நிர்மானித்த பள்ளிவாசல்களில் ஒன்று இன்றும் பவித்திர மாணிக்கப் பட்டிணம் என வழங்கப் பெற்ற இன்றைய பெரிய பட்டினத்தில் காணலாம். இந்தப் பள்ளி முழுமையும் வாயில், தூண்கள், மிம்பர் மேடை, கூரை சாளரங்கள் ஆகியவை முழுவதும் கல்லினால் உருவாக்கப்பட்டுள்ளன. இது கல்லுப் பள்ளி எனவும் ஜமால் ஜலால் பள்ளி எனவும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியின் பராமரிப்புச் செலவிற்காகத்தான் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1216 - 1232) அம்பத்தூர் முதலான ஊர்களை சர்வமானியமாக வழங்கியிருந்ததை அந்த மன்னனது திருப்புல்லாணி கல்வெட்டு தெரிவிக்கின்றது. இந்தக் கல்வெட்டில் இந்த பள்ளிவாசல் ''பிலார் பள்ளியான சோனக சாமந்தப்பள்ளி'' என குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. சோனகர் என்ற சொல்லுக்கு அரபு நாட்டவர் என்றும் சாமந்தப் பள்ளி என்பது அரபித் தலைவன் என்றும் பொருளாகும்.

சுல்தான் அவர்களது ஆட்சிக் காலத்திற்கு நூற்றைம்பது ஆண்டுகட்குப் பின்னர் இந்தப் பள்ளிக்கு வருகை தந்த துனீஷிய நாட்டைச் சேர்ந்த உலகப் பயணியான இபுனு பதுதா என்பவர் இந்தப் பள்ளியையும் இந்தப் பள்ளி அமைந்துள்ள பெரிய பட்டிணத்தைப் பற்றியும் தமது பயணக் குறிப்புகளில் பதிவு

---

1. திருப்புத்தூர் கல்வெட்டு A.R.No

செய்துள்ளார்.[1] கால நீட்சியில் சுல்தான் அவர்களது செம்மையான ஆட்சி பற்றிய ஆவணங்கள் மறைந்துவிட்டன. இதனால் தமிழக வரலாற்றில் நுனிப் புல் மேய்ந்தது போன்ற நிகழ்ச்சிகளை மட்டும் அங்குமிங்குமாக வரைந்த நூலாசிரியர்கள் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேல் நீடித்த சுல்தான் அவர்களது ஆட்சியைப் பற்றி ஒரு சிறிய குறிப்புக் கூட வரைவதற்குத் தவறிவிட்டனர்.

இந்த நூலாசிரியர்களுக்கு விலக்காக டாக்கா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் மதுரையைப் பூர்வீகமாகக் கொண்டவருமான வரலாற்று ஆசிரியர் டாக்டர். எஸ்.ஏ.க்யு. ஹீசைனி என்பவர் மட்டும் சுல்தான் அவர்களது ஆட்சி பற்றியும் அவரது ஆட்சி நிலவிய பகுதி வைப்பாறுக்கும் வைகையாற்றுக்கும் கடலுக்கும் இடைப்பட்ட ஒரு முக்கோண வடிவிலான பகுதி என்றும், தமது வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்[2] சுல்தான் அவர்களது ஆட்சியை வேறு வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடாத இருட்டடிப்புக்குப் பின்னணி எது என்பது புரியவில்லை.

தமிழக வரலாற்றில் இந்தக் கால கட்டத்திற்கு முன்னரும் இருட்டடிப்பு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. குறிப்பாக சங்க காலத்தை அடுத்த கி.பி. 3 - ஆம் நூற்றாண்டு முதல் 6 - ஆம் நூற்றாண்டு வரையான கால வரையறையில் தமிழகத்தில் நிலவிய ஆட்சி, ஆட்சியாளர்கள், படைக்கப்பட்டுள்ள இலக்கியங்கள் ஆகியன பற்றிய செய்திகள் எதுவும் இல்லாததால் இந்தக் காலவரையறை இருண்ட காலம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இதனையடுத்து பாண்டியநாட்டு ஆட்சியாளரைப் பற்றிய கி.பி. 8.9.10 - ஆம் நூற்றாண்டுகளுக்கான தெளிவான வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் இல்லை. எது எப்படி இருப்பினும் இஸ்லாமிய இலக்கியங்களும் இஸ்லாமிய வரலாறும் சுல்த்தான் அவர்களைப் பற்றிய செய்திகளை விவரமாகத் தந்துள்ளன.

❖

1. Neelakanda Shastri K.A. - Foreign Notices of South India (1948)
2. Hussaini Dr. S.A.Q - A History of Pandiya Kingdom (1962)

# இயல் - 10

# இறுதிப்போர்

சுல்தான் அவர்களது ஆட்சியில் மக்கள் அமைதியாக இயல் பான வாழ்க்கை நிலைகளில் ஈடுபட்டு நாட்டிற்கு வளம் சேர்க்கும் வழிகளில் முனைந்து இருந்தனர். அரபு நாட்டிலிருந்தும், பாரசீகம், ஆப்பிரிக்க நாடுகளிலிருந்தும் இஸ்லாமியப் பணிக்காகச் சுல்த்தான் அவர்களைத் தொடர்ந்து வந்த ஏராளமான தொண்டர்கள் சுல்த்தான் அவர்களது அனுமதியுடன் தங்களது தாயகங்களுக்குத் திரும்பிச் சென்றனர். சுல்த்தான் அவர்களது குடும்ப வாழ்க்கையிலும் குறிப் பான இரு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விக்கிரம பாண்டியனுடன் மேற் கொண்ட போரில் சுல்த்தான் அவர்களது உடன்பிறவாச் சகோதரரான இஸ்மாயில் ஷகிதானார் (தியாகியானார்). அவரது மகன் இஸ்காக்குக்கும் சுல்த்தான் அவர்களது தங்கை மகளான செல்வி ஜைனதுக்கும் திருமண நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அந்த நிகழ்ச்சி சிறப்பாக நடந்தேறியது. இதனையடுத்த சில நாட்களில் சுல்த்தான் அவர்களது தாயார் காலமானார். இதனால் சோர்ந்து போயிருந்த சுல்த்தானுக்குக் கவலையளிக்கக் கூடிய மற்றுமொரு செய்தி காத்திருந்தது. அது தான் பத்தாண்டுகளுக்கு முன்னர் சுல்த்தானுடன் பொருதி மாண்டு போன விக்கிரம பாண்டியனின் இளவல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருகிறான் என்பது ஆகும்.

சுல்த்தான் அவர்கள் நிலை நிறுத்திய புதிய இஸ்லாமிய ஆட்சிக்கு மிகப் பெரிய ஆபத்து அல்லவா ஏற்பட்டுவிட்டது. அவர்களது வசம் அப்பொழுது இருந்தது மிகக் குறைவான படைதான் என்றாலும் எதிரியை எதிர்த்துப் போராட ஆயத்தமானார்கள்.

அந்தக் குழம்பிய மன நிலையில், அவர்களது பாட்டனார் சங்கைக்குரிய நபிகள் நாயகம் அவர்களது கால நிகழ்ச்சியொன்று நினைவுக்கு வந்தது. அதுதான் பத்ருப்போரை நபிகள் நாயகம் அவர்கள் முன் நடத்திச் சென்று வெற்றிகண்டது ஆகும்.

ஹிஜ்ரி 2-வது ஆண்டில் மக்கத்திலிருந்து மதீனா போய் சேர்ந்த அண்ணல் அவர்களை மக்கத்து குரைஷிகள் வலுச்சண்டைக்கு அழைத்து மதீனா வாசிகளையும், நபிகள் நாயகத்தையும் துன்புறுத்து வதற்காகச் செய்த சூழ்ச்சியே பத்ருப்போராகும். மக்காவில் இருந்து ஷாம் நாட்டுக்குச் செல்லும் பாதையில் அடிக்கடி குரைஷிகளது ஒட்டகச்சாத்துக்களை மதீனாவாசிகள் கொள்ளையடிப்பதைத் தடுக்க போர் தொடுப்பதாக நாயகம் அவர்களுக்கு மக்கததுக்குரைஷிகள் ஓலை அனுப்பினர்.

அப்பொழுது அந்த வருடம் ரமலான் நோன்பு ஆரம்பித்த 17-வது நாளாகும். மதீனத்து அன்சாரிகள் அனைவரும் நபிகள் நாயகம் உட்பட ரமலான் நோன்பு மேற்கொண்டிருந்தனர் என்றாலும் பொய்யான காரணத்தைக் கற்பித்து போர்முரசு கொட்டுவதை எதிர்ப்பதென முடிவு செய்யப்பட்டது. மதீனத்துக்குத் தெற்கே சிறிது தூரத்தில் பத்ரு எனுமிடத்தில் குழுமியிருந்த குரைஷிப்படைகளை முறியடிப்பதற்காக, நபிகள் நாயகம் அவர்கள் தலைமையில் 313 முஸ்லீம்கள் மட்டும் திரண்டு சென்றனர். குரைஷிகளது படைப் பெருக்கத்தைக்கண்ட மதீனத்து அன்சாரிகள் முதலில் தயங்கியபடி கலக்கமடைந்தனர். பயப்பட வேண்டாம், இறைவன் நமது பக்கத்தில் இருக்கிறான் என்ற நபிகள் நாயகம் அவர்கள் தைரியம் சொன்னதும் அன்சாரிகள், குரைஷிகளை வீராவேசமாகத் தாக்கி அழித்தனர். அரபு

நாட்டு வரலாற்றில் ஒரு அதிசய நிகழ்வாகத் திகழும் அந்த பத்ருப்போரின் நினைவுகள் இப்பொழுது சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களுக்குத் தெம்பூட்டியது. பாண்டியரது படை சுல்த்தான் அவர்களது படையை விடப் பல மடங்கு அளவில் மிகுதியாக இருந்தது. இருந்தாலும் இறைவனது நாட்டப்படியே எல்லாம் நடக்கும் என்ற உறுதியான நம்பிக்கையினால், சுல்த்தான் அவர்கள் எதிரியை எதிர்த்து வீராவேசமாகப் போரிட்டார்கள். முடிவு தோல்வி சுல்த்தானது அணியினருக்கு. பாண்டியனது வாளினால் வெட்டப்பட்ட சுல்த்தான் அவர்கள் வீரமரணம் எய்தினார்கள். மனித குலத்தில் மகத்தான இறைத்தூதராகவும் ஏகத்துவ நெறி உலகெங்கும் பரவுவதற்கு அயராது பாடுபட்ட நபிகள் நாயகம் ஸல்லல்லாகு அவர்களது பேரனாரும், பாலைவனச் சோலையான அரபுநாட்டு மதின மாநகரில் மலர்ந்த பாரிஜாத மலரான செய்யது இபுராகிம் அவர்களது பொன்னுடலைப் புனித சேதுநாட்டு மண் தாங்கிப் பொன்றாத புகழ் கொண்டது. இந்த நிகழ்ச்சி நடந்தது ஹிஜ்ரி 594 துல்கயிதா பிறை 23 (26.09.1198) ஆகும். அதுவரை பாண்டிய நாட்டில் சமய போதனைக்காக வந்த எந்த சமயச்சான்றோரும் கொல்லப்படவில்லை என்பது முக்கியமான செய்தியாகும். எடுத்துக் காட்டாக, கடைச்சங்க காலத்தில் வடக்கே கங்கைநதி தீரத்தில் நிலைத்திருந்த ஆரியர்கள் பாண்டிய நாட்டில் குடியேறினர். அவர்களது - சிவபெருமானை முதற் கடவுளாகக் கொண்ட பல தெய்வ வழிபாடும் சமுதாய மக்களைப் பிரிவினை செய்யும், பிராமணர், வணிகர், சத்திரியர், சூத்திரர் என்று நான்கு வகை வர்ணாசிரம தர்மத்தை நடைமுறைப் படுத்திவந்தனர். இவர்களில் மற்றொரு பிரிவினர் பரந்தாமனாகிய மகாவிஷ்ணுவை முதற் கடவுளாக, (பிரதானக்கடவுளாகக்) கொண்டு ஏகயிறைக் கொள்கை யின் அடிப்படையில் வைணவ சமயத்தைப் பரப்பிவந்தனர். இந்தச் சமயத்தினர்களுக்கு அப்பொழுது இருந்த ஆட்சியாளர்கள், ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்ததால், இந்த இருவகையான சமயக் கொள்கைகளும் மக்களிடையே பரவலாகப் பின்பற்றப் பட்டது.

சைவ சமயப் பெரியார்களான, திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகியோரும், திருமங்கை யாழ்வார் உள்ளிட்ட பன்னிரு ஆழ்வார்கள் பக்தி இலக்கியங்களை இயற்றி மக்களைக் கவர்ந்தனர்.

இவர்களையடுத்து, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்னும் உயரியதத்துவத்தை மக்களிடம் பரப்பிய திருமூலர் முதலான சித்தர்கள், சைவ, வைணவக் கொள்கையில் பொதிந்து நின்ற சமயச் சடங்குகளையும் வைதீக வழிபாடுகளையும், சாடிவந்தனர். இத்தகைய சூழ்நிலையில்தான் (கி.பி. 12 - ஆம் நூற்றாண்டின் இறுதியில்) நபிகள் நாயகம் ஸல்லல்லாகு அவர்களது பேரனாரும், மதீனமா நகரின் அதிபதியுமாகிய சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள், பாண்டிய நாட்டுக்கு வந்து, இறுதித்தூதர், வெளிப் படுத்திய இறை மறையையும் அன்னரது வழிமுறைகளையும் மக்களிடையே பரப்புவதற்காக முயன்றார். காயல்பட்டினம் பகுதியில் அவரது முயற்சி பூரணமாக வெற்றி பெற்றாலும் மதுரை, பௌத்திர மாணிக்கப்பட்டிணம் என்னும் பெரிய பட்டிணப்பகுதியில் அப்போதிருந்த பாண்டியர்கள் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தி சுல்த்தான் அவர்களோடு பெரும்படையுடன் மோதினர்.

பாண்டிய நாட்டு வரலாற்றில், அதுவரை, நிகழ்ந்திராத சமயப்படுகொலை இப்பொழுது நடந்துள்ளது. ஏனெனில் அதுவரை தங்களது சமயத்தை மக்களிடம் போதித்த சமயச்சான்றோர் எவரையும் பாண்டியர்கள், தங்களது மதத்தின் பெயரால் அழித்து ஒழிக்கவில்லை. இத்தகைய வீரமரணம் எய்தியவர்கள் அரபி மொழியில் ஷகீது என அழைக்கப்படுகின்றனர். அதாவது உயிர்த் தியாகி தங்களது இன்னுயிரை இறைவனது பாதையில் இறைவனுக்காக ஈந்தவர் என்பதாகும். இத்தகையவர் பெரும்பாலும் இஸ்லாம் மதத்தை நிலை நிறுத்துவதற்காகப் பல மதப் போர்களில் (ஜிகாதுகளில்) பங்கெடுத்து உயிரை அர்ப்பணித்தவர்கள் (திருகுர் ஆன் 5 : 13) என்பதை இஸ்லாமிய வரலாறு தெரிவிக்கின்றது.

மேலும் இறைவனது திருமறையில் இங்ஙனம் உயிர்த்தியாகம் செய்தவர்கள் இறந்துவிடவில்லை என்றும் அவர்கள் இவ்வுலகில் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருப் பதுடன் அவர்களுக்கு இறைவனால் உணவு வழங்கப்படுவதாகவும் குறிக்கப் பெற்றுள்ளது. (திருக்குர் ஆன் 57 : 19)

வீரர்களைப் போற்றி வருவது மனித குலத்தின் மரபு ஆகும். நமது நாட்டில் சங்க காலத்தில் சமுதாய நன்மைக்காகப் போரிட்டு உயிர் துறந்தவர்களை என்றென்றும் நினைவுபடுத்தி மக்கள் நடுகல் என்ற வடிவில் கல்லினை நட்டு இறந்தவர்களது பேரும் புகழையும் பொறித்து வழிபட்டனர் என்பதைப் பல இலக்கியங்கள் தெரிவிக் கின்றன. இவர்களைப் ''பட்டவர்கள்'' என்றும் போரில் அவர்களது நினைவிடங்களில் உள்ள நடுகல் அல்லது வீரக்கல் வழிபாட்டுக் குரியதாகவும் ஆக்கப்பட்டிருந்தது. கொங்கு நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் இத்தகைய நடு கற்கள் பலவற்றை வரலாற்று வல்லுநர்கள் கண்டுபிடித்துத் தெரிவித்துள்ளனர். அண்மையிலுள்ள கன்னட நாட்டிலும் இத்தகைய வீரர்களுக்குரிய வணக்கம் இருந்ததை அங்குள்ள மாஸ்திக்கல் மூலம் தெரிய வருகின்றது.

சமுதாய நலனுக்காகப் பாடுபட்டவர்களுக்கு மக்கள் சிறந்த மதிப்பும் மரியாதையும் நல்கியிருக்கும் பொழுது மனிதர்களைப் படைத்த இறைவனுக்காக, இறைவனது நெறிமுறைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக உயிரை அர்ப்பணித்தவர்களது நினைவுகளைப் போற்றிப் புகழ்வது இயல்புதான். இறைவனது சன்மார்க்க சமயமாகிய இஸ்லாத்தைப் பரப்புவதிலும் அதனை நிலை நிறுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகளுக்கு எதிராகத் தமது இன்னுயிரை நல்கிய புனிதர் செய்யது இபுராகிம் அவர்களது அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் அறிந்த சேதுபதி மன்னர் கட்டையத் தேவர் என்ற குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி அவர்கள் பின்னர் ஏர்வாடியில் அமைந்துள்ள சுல்த்தான் செய்யது இபுராகிம் ஷகீது அவர்களது நினைவிடமாகிய ஏர்வாடி

தர்ஹாவிற்கு, ஏர்வாடிக்கு அண்மை யிலுள்ள மாயாகுளம் என்ற கிராமத்தை சர்வமானியமாக கி.பி. 1742 - இல் வழங்கி உதவினார். இந்தச் செப்பேட்டின் உண்மை நகல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

# II சேதுபதி மன்னர் செப்பேடு

## இராமநாதபுரம்

மன்னர் முத்துகுமார விஜய ரகுநாத சேதுபதி, ஏர்வாடி பள்ளிவாசல் தர்மத்திற்கு மாயாகுளம் கிராமத்தை கி.பி. 1742-ல் வழங்கிய செப்புப் பட்டையத்தின் உண்மை நகல்

| | | | |
|---|---|---|---|
| 1) | செப்பேடு வழங்கியவர் | - | முத்துக்குமார விஜய ரெகுநாத சேதுபதி காத்த தேவர் |
| 2) | செப்பேடு பெற்றவர் | - | ஏர்வாடி பள்ளிவாசல் |
| 3) | செப்பேட்டின் காலம் | - | சாலிவாகன சகாப்தம் கி.பி. 1664 துந்துபி வருடம் ஐப்பசி மாதம் (கி.பி. 1.11.1742) |
| 4) | செப்பேட்டின் பொருள் | - | ஏர்வாடி பள்ளி வாசலுக்கு பெரிய மாயாகுளம் கிராமம் தானம். |

# முதல் பக்கம்

1) ''ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகந சகாப்தம் 1664 இதன் மேலச் செல்லா நின்ற துந்துபி வருஷ

2) நாம ஸம்வத் சரத்தில் தெட்சணாயனத்தில் சதுர் நதிதிதியில் ஐப்பசி மாஸத்தில் பவணமையும் சோ.

3) ம வாரமும் அசுபதி நட்செத்திரமும் வச்சிர நாம யோகமும் சுககரணமும் பெத்த சுபதினத்தில் சுபஸ்ரீ

4) மன்மகா மண்டலேசுபரன், அரியராயிர தள விபாடன், பாசைக்குத் தப்புவ ராயிர கண்டன், மூவரா

5) யிர கண்டன், கண்டனாடு கொண்டு கொண்டனாடு கொடாதன், பாண்டி மண்டலத் தாபனாசாரி.

6) யன், சோளமண்டலப் பிறதிஷ்டபெனாசாரியன், தொண்ட மண்டலப் பிறசண்ட பிறசண்டன், யழமுங்

7) கொங்கு யாழ்ப்பாண பட்டணமும் கெசவேட்டை கொண்டருளிய ராசாதி ராசன், ராச பரமேசுப

8) ரன், ராசமாற்றதாண்டன், ராசகெம்பீரன், ராச குலதீபன், வீரரில் வீரன், வீர கஞ்சுகன், வீரலெவண்பா

9) மாலை, வீரரான கேசரி, வீரவிற்கிரமாற்கள், பரிக்கு நகுலன், குடைக்குக் கற்ணல், வில்லுக்கு விசையன், மல்லு.

10) - க்கு வீமசேனன், பொறுமைக்கு தர்மபுரத்திரன் ஆக்கினைக்கு சுக்கரீபன், அடிகுக்கு வாலசீவகன், சிள.

11) ங் கத்துக்கு ஆதிசேசஷன், கருணைக்கு ரெகுராமன், சத்திய பாஷா அரிச்சந்திரன், சத்துரு வாதியன், மீ

12) ண்டன், சகல குண சம்பனை, சங்கீத சாயுத்திய வித்தியா வினோதன், சறுவசீவ தயாபரன், சாமித்.

13) சூராகியன், மிண்டன், தண்டுவார் மிண்டன், தளங்கண்டு தத்தளிப்பார்கள் கண்டன், தந்தார

14) தார பிற தார புத்தின், சகல சாம்பிறாச்சிய லட்சுமி நிவாசன், கருதவர்கள் முடியிடறு கள துரந்த

15) ர னகுலன், கட்டாரி ராயன், கருணா கடாட்சம், காமிநி கந்தப்பன், கலை தெரியும் விற்பனன், கலியான

16) குணசீலன், இரவிகுல சேகரன், இறவிவற்மன், இவுளி பாவடி மித் தேவறுவார்கண்டன், இடறு

17) வார் கண்டன், இப்றுவார் கோபாலி, மிரவலர் கலி கோபன், அரசராவண ராமன், அடியார் வேளை.

18) க் காறன் அந்தம் பிற கண்டன், அனுமத்துவஜன, கருடத்து ஹனன்துவசன், சிங்கத்துசவன், வியாக்கிறம.

19) துவசன், நீமிதுஜன, காவித்து வஜன்முகு செங்காவிக் குடையும் அதின்மேல் விருது சல்லியும் உண்டான தே

20) வாதி தேவன், அடைக்கிலங்காத்தான், உரிக்கோ ஸ்சுல்த்தானன் வீரதண்டை சேமட் தலை விளங்கும் தாளினான்.

21) ‘மனுநீதி மன்னன், மலைகலங்கிலும் மனங்கலங்காதவன், வன்னியராட்டந் தவிளத்தான், அசுபதி கெ

22) சபதி நரபதி சேது செம்பி வளநாடன், வேதியர் காவலன், கொலு மீதி கொண்டு குவலையாங் காத்

23) தவன், சேது மூல ரெட்சா துரந்தரன், தேவி நகராதிபன், துரகரேவேந்தன், துலுக்கா தள விபாட.

24) ன் சோடச மகாதான சீலன், பஞ்சகால பயங்கரன் பஞ்ச பானா அவதாரன் பஞ்சவற்ன ராவுத்தான்.

25) முண்டன் படைக்குங் குடைக்கும் ஒடாத கண்டன், ராமனாத சுவாமி பறுவதவற்தினி பாதரவிந்த

26) சவிதன், தனுக்கோடி காவலன், திலத நுதல் மடமாதர் மடலெளுது புயசு முகன், இயலிசை நாடக முத்

27) தமிளறிவாளன், அனகன் அதிவீரன், அகளங்கள் அதிசெயன் புவனேக வீரன், மருவலர் கெசசிங்

28) கம் விருதான் வலியச்சருவி வளியில் கால்நீட்டி துட்டர் கொட்ட மடக்கி பட்டமானங் காத்தான்.

29) பகை மன்னர் கற்ப கெருடன், பரதள விபாடன் பனுக்கு வார் கண்டன், பரராச சிங்கம், தாலிக்கு வேலி.

30) தெஷண சிங்காசனாபதி, மனுநீதி மன்னன், செகராசர் பணியாதன், அன்னதான சோமன், அம.

31) லன், அம்போடு கடாட்சன், தற்மபரிபாலனன், கற்பன், பாஷா துரந்தரன், சங்கீத சுவாமி பறு.

32) வதவற்த்தினி நாயகி ராமநாதசுவாமி கருணா கடாட்சன பரிபூறன கீர்த்திப் பிறதாபன், ஸ்ரீமது இ

33) றனி கெற்பாயாகி ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் குமாரர் ஸ்ரீ மது முத்துக்குமார வி

34) யை ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் ஏறுபாடிப் பள்ளி வாலுக்குக் கட்டளையிட்ட கிறாம

35) த்துக்கு முசாபர் நல்ல இபுறாகிமிடத்தில் தாம்பிற சாதனம் கொடுத்த பரி சாவது இப்போது.

36) செம்பி நாட்டில் பெரிய மாயா குளமான எந்தவதற்க் கெல்கையாவது கீள்யெல்.

37) கை நீலமுடையான் கணமாயிகள் கரைக்கும் சின்னு பன்னு பண்டாரம் தோட்டத்துக்கு.

38) மேற்கு வடயெல்கையாவதும் பண்ணைக் காட்டிலத் தெலிச்சான் வீரன் தட்டுக்கும்

39) பனையேந்தல் புஞ்சைக் காட்டுக்கும் யெதம்பாடல் புஞ்சைக் காட்டுக்கும் தெற்கு

40) ம லெங்கையாவது ஷ யெதம்பாடல் காட்டுக்கும் ஆண்டி சுத்தான் வாகையடி ஊ

41) றணிக்கும் கிளக்கு தெற்கெல்லையாவது, ஓரக் கரைக்கு வடக்கு பின்னாங் கொல்கைக்

42) குள்பட்டது ஆயக்கட்டுப் படிக்கு நஞ்சை விரையடி 50 கலம் புஞ்சைத் தட்டு கொச்சமுளபட செய்.

## இரண்டாம் பக்கம்

43) க்கு விரையடி 4 கலத்து 3 கலம் ஆக விரையடி 53 கலத்து 3 கலத்து ஷைஊ புஞ்சையில் திவுத்திரகோசமன்

44) கைப் பிறவேசமாயிருந்த தட்க 32 அரைக்கானி சதிர செவ்வாய் மணக்காடும் கட்டளையிட்டுக கொ

45) டுத்தக் காட்டுக்கு யெல்கையாவது மாவிலங்க ஊரணிக்கும் அரியவன் கட்டையன் தட்டு.

46) க்கும் கரி முந்தலுக்கும் கிளக்க தெற்கெல்லையாவது சமுத்திக் கரைக்கு வடக்கு கிழக்கே.

47) லகையாவது பள்ளி முனைக் குடாவுக்கும் வாளி நாடான் தட்டுகளும் பூசாறி நா

48) டான் தட்டுகளும் தச்சனூறணிக்கும் மேற்கு ஓரக்கரைக்கு தெற்கு இன்னாங் கெல்கை.

49) க்குள் பட்ட செவ்வல் மனல் நஞ்சை புஞ்சையும் ஊரணிக் குட்டம் திட்டு திடல் மாவடை ம

50) ரவடை மேல்நோக்கி மரம் கீள் நோக்கிய கிணரும் தீரும் பாசியும் பள்ளுப்பறை.

51) ஊழியம் உலுப்பை வைக்கல் கட்டுவண்டில் மாடு ஆயக்கட்டுவரி உப்பளவரி நில.

52) வரி பள்வரிப் பறைவரி கம்பளவன். முள்ளுவரி, காணிக்கைவரி இவ்வரி முதல் யெவ்.

53) வரிப்பிறக்கிலும் அவ்வரி முதல் அஷ்ட போக தேச சாமியங்களும் ஓடையளத்தில்.

54) மாதாத்த மாண்டு பறை உப்பு மூன்றெடுவையில் நெல்லும் புல்லு யே தொன்றாகிலும்.

55) பொதி பிடிச்சு கொள்வினை விற்பினை யாமினை யாபாரம் பண்ணி கொள்கிறதுக.

56) கு ஆயத்தீருவை சம்மாடஞ் சத்தவரியிது முதலான அஷ்டபோக தேச சாமியங்களும்.

57) பள்ளிவாசலுக்கு சறுவ மானியமாகக் கட்டளையிட்ட படிக்கி ஆதித் சந்திராதித்த சந்ததிம் பிற.

58) வேறுமாக புத்திர கோத்திரமாக ஆண்டனுபவித்து கொள்பவராகவும் இந்த தற்மத்தை யாதாமெ.

59) ருத்தர் பரிபாலனம் பண்ணின பேர்கள் கோடிப் பிரதிஷ்டையும் கோடி சிவலிங்கம் பிரதிஷ்டை.

60) யும் கோடி கன்னிகா தான பிற்ம பிரதிஷ்டையும் கோடி அன்னதான சொற்னதான கோ தானமும் ப

61) ண்ணி விக்கிற சுகுர்தத்தை அடைவாராகவும் இந்த தற்மத்துக்கு யாதாமொருதர் அசிதம் பண்ணி.

62) ன பேர்கள் கெங்கைக் கரையிலேயும் சேது ஷலேயும் மாதா பிதாக் குருக்களையும் காராம் பசு

63) வையும் பிறாமனானையும் வதை பன்னின தோஷத்திலே போவராகவும் இந்த தற்மத்துக்கு

64) யாதாமொரு, இ சில மாணவர்களில் பரிபாலனம் பண்ணினவர்கள் கோடி அருமை கொண்

65) டு உருமைக்கு விட்ட பலனும் கோடி கச்சு செய்த பலனு மடைவாராகவும் இந்த தற்மத்துக்

66) கு விகாம் பண்ணினவர்கள் மாதா பிதா ஓஸ்தாத்தை வதை பண்ணிவிச்சு மக்குத்துப் பளி.

67) ளியை இடித்த பாவத்திலே போவராாகவும் யிப்படி தாம்பிற சாதனங் கொடுத்

68) தோம் ஸ்ரீயிறனிய கெற்பயாசி இரகுனாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் குமாரர் ஸ்ரீ மது முத்துக்கு.

69) மார விசைய ரெகுநாதச் சேதுபதி காத்த தேவரவர்கள் விசுவ கோத்திரத்தில்.

70) மூர்த்தி காலிங்கராயன் ஆசாரி குமாரன் சடையப்பன் விகிதம். உ''

❖

# ஏர்வாடி செப்புப் பட்டயத்திற்கான விளக்கவுரை

இந்தப் பட்டயத்தினை ஏர்வாடி தர்ஹாவிற்குப் பள்ளிவாசல் தர்மமாக சர்வ மானியமாக வழங்கியவர் கட்டையத் தேவர் என்ற குமாரமுத்து விஜயரகுநாத சேதுபதி ஆவார். இவர் சேதுநாட்டை கி.பி. 1728 முதல் கி.பி. 1745 வரை செம்மையான ஆட்சி நடத்தியவர். இந்த மன்னருக்குச் சிறப்பு பெயராக அமைந்துள்ள 101 விருதா வளிகள் இந்தப் பட்டயத்தின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பட்டயம் ஏர்வாடி பள்ளிவாசல் முசாபர் நல்ல இபுராஹிமுக்கு 1.11.1742 அன்று ஏர்வாடியை அடுத்துள்ள மாயாகுளம் கிராமம் வழங்கப்பட்டது. இந்தப் பட்டயத்தின் வரி 35 - இல் காணப்பட்டதாக உள்ளது. இந்த பட்டயத்தில் அறக்கொடையாக வழங்கப்பட்டுள்ள மாயாகுளம் கிராமத்திற்கான பெரு நான்கு எல்லைகளும், அதற்குள் கட்டுப்பட்ட நஞ்சை புஞ்சை நிலங்களின் விவரமும் இதில் காணப்படுகின்றன. மேலும் அத்துடன் மாயாகுளம் கிராமத்திலிருந்து சேதுபதி மன்னருக்கு அரச இறையாகச் செலுத்தப்பட்டு வந்த உலுப்பை, வைக்கோல் கட்டுவரி, ஆயக்கட்டுவரி, உம்பளம், மாட்டு வரி, நிலவரி, பலவரி, பறைவரி, கம்பளவரி, முள்ளுவரி, காணிக்கைவரி உப்பளவரி, சம்மாடம், சத்தவரி ஆகிய வரிகளுடன் புதிதாக வரிவிதிப்பு இருப்பினும் அவையும் ஏர்வாடி பள்ளி வாசலுக்குச் சேர வேண்டும் என்பது சேதுபதி மன்னரது கட்டளை.

பட்டயங்களில் பொதுவாக இத்தகைய தர்மங்களைப் பேணிக் காத்தவருக்கும் தர்மத்திற்கு அகிதம் பன்னியவருக்கும் கிடைக்கும் பலன்களைக் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் இந்தப் பட்டயத்தில் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வரிகளில் (64 வரி - 67 வரி) இஸ்லாமிய முறைப்படியான சொற்றொடர் அமைக்கப்பட்டி ருப்பது ஒரு புதுமையானதாகும்.

**''யாதாமொரு இசுலாமானவர்களில் பரிபாலனம்**
**பண்ணினார்கள்**
**கோடி அடிமை கொண்டு**
**உரிமைக்கு விட்ட பலனும் கோடி ஹஜ்ஜீ செய்த**
**பயனுடையவாராகவும் இந்த தற்மத்துக்கு**
**விகாரம் பன்னினவர்கள் மாதா பிதா உஸ்தாதை**
**வதை பண்ணிவீச்சு மக்கத்துப் பள்**
**ளியை இடித்த பாவத்திலே போவாராகவும்''**

இந்தப் பட்டயத்தில் காணப்படும் புஞ்சை நிலங்களில் பகுப்புப் பெயர்களும் இந்த வட்டார வழக்கிற்குப் பயன்படுபவன வாகும். எடுத்துக்காட்டாக தட்டு, புஞ்சைக்காடு, மணக்காடு, முந்தல் என்பன. செய்யது இபுராகிம் அவர்களது அர்ப்பணிப்பையும், தியாகத்தையும் அறிந்த சேதுபதி மன்னர் கட்டயத் தேவர் என்ற குமார முத்து விஜயரகுநாத சேதுபதி அவர்கள் பின்னர் ஏர்வாடியில் அமைந்துள்ள சுல்த்தான் செய்யது இபுராகீம் ஷகீது அவர்களது நினைவிடமாகிய ஏர்வாடி தர்ஹாவிற்கு, ஏர்வாடிக்கு அன்மையி லுள்ள மாயாகுளம் என்ற கிராமத்தைச் சர்வமானியமாக கி.பி. 1742-ல் வழங்கி உதவினர். அந்தச் செப்பேட்டின் விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.[1] சுல்த்தான் அவர்களுடன் வீரப் போரிட்டு ஷகீதான (தியாகியான) வீரர்கள், தளபதிகள்

---

1) கமால் எஸ்.எம். டாக்டர் - சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994)

ஆகியோர்களுடன் சுல்தானது பொன்னுடலையும் தாங்கிய பூமிதான் இன்றைய ஏர்வாடி அல்லது ஏறுபதி என்று அழைக்கப்பட்டு வருகிறது. ஏர்வாடி என்ற சொல் வழக்கிற்குச் சரியான பொருள் கிடைக்கவில்லை. இது தமிழ்ச் சொல்லும் அல்ல. சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது தாயகமான மதின மாநகரின் ஒரு பகுதி யத்ரீப் என வழங்கப்பட்டதாகவும் அந்தப் பெயரிலேயே சகீது அவர்களது தியாக பூமியும் பெயரிடப்பட்டு நாளடைவில் யத்ரிப், ஏர்வாடியாக மருவியிருப்பதாக சில அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த இடம் சுல்தான் அவர்கள் ஆட்சி செய்த பௌத்திர மாணிக்க பட்டிணத்திற்கு தெற்கே 20 கல் தொலைவில் கடற்கரையில் உள்ளது.

இந்தப் பகுதியை இன்றைய ஏர்வாடியின் தர்ஹா, காட்டுப் பள்ளிவாசல் என்ற பகுதிகளாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த இரு இடங்களிலும் அமைந்துள்ள நூற்றுக்கணக்கான மண்ணறைகள் (புதைகுழிகள்) கி.பி. 1198 - இல் இந்தப் பகுதியில் நடைபெற்ற சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்களது வீரப்போரினையும் அவர்களது தியாகத்தையும் என்றும் நம் மனக் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாக இருக்கின்றன. இந்தக் கல்லறைகளில் இனம் தெரிந்த தியாகிகளின் பட்டியலை கீழே கொடுத்திருக்கிறோம்.

1) சுல்தான் அவர்களது துணைவியார் செய்யது அலி பாத்திமா

2) சுல்தான் அவர்களது திருமகனார் செய்யது அபுத்தாஹிர்

3) சுல்தான் அவர்களது தங்கை செய்யது ராபியா

4) மைத்துனர் செய்யிது ஜெய்னுலாபிதின்

5) தளகர்த்தர் ஷம்சுத்தின்

6) கமருத்தீன்

7) நூருத்தீன்

8) பிரதம தளபதி அப்பாஸ்

9) ஹக்கிம் அப்துல் கரீம்

10) அப்துல்லா

11) செய்யிது அஹமது

12) செய்யிது முகியித்தீன்

13) செய்யிது காதிர்

14) அப்துல்லா

15) அப்துல்காதிர் சமதானி

16) மக்துன் சாஹிப்

17) செய்யது இஸ்மாயில்

18) செய்யது இஸ்ஹாக்

19) செய்யது ஹுசைன்

20) செய்யது அபூபக்கர்

21) செய்யது பக்கீர்

22) குல்ஸம் பீவி

23) பல்கீஸ் பீவி

24) சபுரா அம்மாள்

25) ஜைனபு பீவி

இன்னும் இவர்களைப் போன்றவர்களது மண்ணறைகள் பல அழிந்து மறைந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் அடக்கம்

பெற்றுள்ள வீரப்பெருமக்கள், சுஹதாக்கள் ஸாலிஹீன்கள் ஆகியோரைப் பற்றிய விவரங்களும் அவர்களது தியாகச் செயல்களும் நமக்குக் கிடைக்கவில்லை. தமிழக வரலாறும் இவர்களைப் பற்றியும் இவர்களது தியாகப் போர் பற்றியும் ஒரு சிறிய குறிப்பினைக் கூட தந்து உதவவில்லை.

இந்தத் தியாகச் செம்மல்களையும் சுல்தான் அவர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று பாண்டிய நாட்டில் புதிதாக நிறுவப்பட்ட ஷரி-அத் ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக இறைவனது பாதையில் முஜாகிதீன்களான இந்தப் பெருமக்களைப் பற்றிப் பிற்காலங்களில் இந்தப் பகுதிக்கு வருகை வந்த அரபு நாட்டு நூலாசிரியர்களான யாக்குபு, டிமிஸ்க்கி (கி.பி. 1325), அபுல்பிதா (கி.பி. 1273 - 1331), இபுனு பதுதா (கி.பி. 1355) போன்றவர்களும் தங்களது பயணக் குறிப்புகளில் ஒருவர் கூட குறிப்பிடாதது வேதனைக்குரியதாகும்.

❖

# இயல் - 11

# முஸ்லீம் சமய முன்னோடிகளில் முதல்வர்

தமிழ் நாட்டிற்கு வடமேற்கேயுள்ள அரபு நாட்டில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஓரிறைக் கொள்கையை உணர்த்துவதற்காக முகம்மது நபி ஸல்லலாகு அவர்களை இறைவன் தனது இறுதித் தூதராக ஏற்று அவருக்கு வேத வெளிப்பாடுகளை அறிவித்தான். இறை யாணையை இதயத்தில் ஏற்றவராக நபிகள் நாயகம் அவர்கள் தமது எஞ்சிய 20 ஆண்டு கால வாழ்வினை இருண்ட உலகம் எனக் கருதப்பட்ட அன்றைய அரபு மக்களிடையே ஏக இறைக் கொள்கையை போதனை செய்து வந்ததுடன் அவர்களை ஆழ்த்தியிருந்த அஞ்ஞான செயல்களிலிருந்து விடுபடுமாறும் பிரச்சாரம் செய்து வந்தார்.

அன்னாரது பிரச்சாரத்திற்குப் போதிய ஆதரவு கிடைக்கப் பெறாததுடன் அவர்களது உயிருக்கு உலைவைக்க குரைஷி கூட்டத் தினர் முடிவு செய்ததால் நபிகள் நாயகம் அவர்கள் பிறந்தகமாகிய மக்கமாநகரை விட்டு மதின மாநகர் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களது சமயப் பணிக்குப் பேராதரவு எய்திய நிலையில் அங்கேயே காலமானர்கள். ''இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜீயுன்'' நபிகள் நாயகத்திற்குப் பிறகு அவரது

சஹாபாக்களான நான்கு கலிபாக்கள் - 1) அபுபக்கர் சித்திக் 2) உமர் கத்தாப் 3) உதுமான் 4) அலி - ஆகியோர் பொறுப்பி லிருந்தாலும் அவர்கள் இறைவனது திருமறையையும் நபிகள் நாயகம் அவர்களது போதனைகளையும் பரப்பும் பணியில் ஈடுபடவில்லை.

இவர்களில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் ஒரே ஒருவர் மட்டும் இஸ்லாமிய சமயப் பணிக்காக அரபு நாட்டிலிருந்து தென்கிழக்கே கேரளக் கரைக்கு வந்தார். அவரைப் பற்றிய செய்திகளை இப்பொழுது பார்ப்போம்.

வரலாற்று ஆவணங்களின்படி கேரளத்தின் கரையோர நகராகிய கொல்லங்கோட்டிலிருந்து சேரமான் பெருமாள் என்ற மன்னன் கி.பி. 825-இல் அரபு நாடு சென்று மக்கா, மதீனா நகர்களுக்கு விஜயம் செய்து இஸ்லாத்தை ஏற்றவராக அப்துல் ரஹ்மான் சாமிரி என்ற பெயருடன் கேரளத்திற்குத் திரும்புவதாக இருந்தார். வழியில் அரபு நாட்டின் தெற்கே உள்ள துறைமுகமாகிய சபர் பட்டினம் போய்ச் சேர்ந்த பொழுது அவர் நோய்வாய்ப்பட்டார். பல மாதங்கள் ஆகியும் நோயினின்றும் விடுபடாத நிலையில் கேரளத்திற்கு மாலிக் இபுனுதினார் என்பவரை அறிமுக மடல்களுடன் அனுப்பி வைத்தார். அவர் சேரமான் பெருமானது அறிமுக கடிதத்தினைக் கோழிக்கோடு, வேணாடு மன்னர்களிடம் சேர்ப்பித்தார். அவர்களது ஆதரவுடன் கேரளத்தில் இஸ்லாமியச் சமயப் பிரச்சாரத்தை நடத்தியதுடன் 8 நகர்களில் முஸ்லீம்களுக்கான தொழுகைப் பள்ளிகளையும் நிறுவினார்[1].

நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களின்படி அரபு நாட்டிலிருந்து நபிகள் நாயகம் மறைவிற்குப் பிறகு தென்னாட்டிற்கு வந்த முதலாவது இஸ்லாமிய பிரச்சாரகர் மாலிக் இபுனு தினார்

---

1) Hussain Nainar Dr. - Arab geographers knowledge about south India (1944)

மட்டுமே என்பது உறுதியாகிறது. ஆனால் நபிகள் நாயகம் அவர்கள் மறைந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு அரபு நாட்டிலிருந்து பாரசீகம் ஆப்கானிஸ்தான் வழியாக இந்தியாவிற்கும் பல வீரர்களும் மன்னர்களும் வந்துள்ளனர். குறிப்பாக கஜினி முகமது, கோரி முகமது, அடிமை வம்சத்தினர் ஆகியோர் நம் நாட்டின் மீது படை எடுத்து வந்தனர். அவர்களது குறிக்கோள் இந்தியாவில் இறைவனது ஒரிறைக் கொள்கையை நிலை நிறுத்துவதோ அல்லது அதற்கான பிரச்சாரங்களைச் செய்வதோ அல்ல. மாறாக நமது நாட்டின் செல்வ வளமையைச் சுட்டுகின்ற பொன்னும் மணியும் நிறைந்த கோயில் திரு ஆபரணங்களைக் கைப்பற்றுவதே ஆகும்.

இத்தகைய கொள்ளைக்காரர்களுக்கு மாற்றாக அரபு நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இரண்டு உத்தமர்கள் கி.பி. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் வருகை தந்தனர். அவர்களின் நோக்கமும் செயலும் இறைமறையான - இறைவனது வேத வெளிப்பாடாகிய திருகுர் ஆன் வலியுறுத்துகின்ற ஏக இறைக் கொள்கையையும் நபிகள் நாயகம் அவர்கள் வாழ்ந்து காட்டிய சுன்னத் என்ற வாழ்க்கை நடைமுறைகளையும் அனைத்து மக்களிடமும் தெரிவிக்க வேண்டும், அவைகளின் வழியில் அனைவரும் இறைவனது கருணைக்கு இலக்காகி நற்பேறு பெற வேண்டும் என்பதுமாகும். இவர்களில் முதலாமவர் பாபா நத்ஹர் (வலி) இவர் சிரியா நாட்டு மன்னராவார் - இவர் ஆன்மீக உந்துதலால் ஆட்சியைத் துறந்து கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு வந்து சமயப்பணி மேற் கொண்டார். திருச்சிராப்பள்ளியில் தமது வாழ்நாள் முழுவதும் இஸ்லாமிய சமயப் பணிக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார். இவரது அடக்கஸ்தலம் அங்கேயே உள்ளது.

இரண்டாமவரான சுல்த்தான் செய்யது இபுராஹிம் (வலி) அவர்கள் தமது தொண்டர்களுடன் சமயப்பணிக்காக கி.பி. 1187 இல் பாண்டிய நாட்டின் காயல் கடற்கரையை அடைந்தார். அதுவரை

தமிழ்நாட்டிலும் சரி வேறு நாடுகளிலும் சரி இஸ்லாமிய கொள்கைகளைப் பரப்பும் பணியில் ஈடுபட்டவர்கள் எவரும் எய்தப் பெறாத இன்னல்களையும். இடர்ப்பாடுகளையும் அனுபவித்தார். பாண்டியர் நாட்டில் அமைதி மார்க்கம் எனப் புகழப்படும் இஸ்லாத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்குக் கூட மதுரைப் பாண்டியன் பெருந்தடை விதித்தான். இறைவனது வேதத்தைப் பிரசித்தம் செய்வதற்கு இப்படியொரு தடையா எனச் சில நாட்கள் கவலையுற்ற சுல்த்தான் அவர்கள் தடையை மீறுவது என முடிவு செய்தார். எவ்விதப் போருக்கும் ஆயத்தமில்லாத நிலையில் சமயப் பிரச்சாரத்திற்கென சுல்தானுடன் வந்த தொண்டர்கள், பாண்டியனது எதிர்ப்பை மீறித் தகர்த்தெறிந்து மதுரையில் தீன் கொடி நாட்டினர்.

அடுத்துப் பாண்டிய நாட்டின் கிழக்குப் பகுதிக்குச் சென்ற பொழுது அங்கும் சுல்த்தான் அவர்கள் ஓர் இறைக் கொள்கையை எடுத்துச் சொல்வதற்கு ஒரு பெரும் போரையே சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பௌத்திர மாணிக்கப் பட்டினம் (பெரிய பட்டிணம்) என்ற பெருநகரில் அமர்ந்து ஆட்சி செய்த பாண்டியனுடன் பத்து நாட்கள் போரிட்டு அவனைக் கொன்றார். அவனது ஆட்சி முடிந்து விட்டதால் மதுரையிலிருந்து பௌத்திர மாணிக்கப் பட்டினம் வரையான பகுதியில் சுல்த்தான் அவர்களது தொண்டர்கள் சமயப் பிரச்சாரத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். பௌத்திர மாணிக்கப் பட்டினத்தில் சுல்த்தான் அவர்கள் நிலை நிறுத்திய ஷரி அத் ஆட்சியினால் வடக்கே சோழ மண்டல எல்லை யிலிருந்து தெற்கே திருநெல்வேலி சீமை வரையான பரந்த பகுதியில் வாழ்ந்த மக்களில் கணிசமான எண்ணிக்கையினர் இஸ்லாத்தைத் தழுவினர். பரவலாக ஆங்காங்கு பள்ளி வாயில்கள் அமைக்கப்பட்ட தால்ப் புதிய சமயத்தைச் சேர்ந்த மக்கள் இறைவனுக்கு நாள்தோறும் கையேந்தி நன்றியைத் தெரிவித்தனர். எங்கும் தீன் முழக்கம் எதிரொலித்தது. தமது இலட்சியம்

நிறைவேறியதால் சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடைந்தார்கள்.

தென்னகத்தின் சமுதாய வாழ்வில் ஒரு புதிய ஆன்மீக உணர்வினை, இயக்கத்தை ஏற்படுத்தி நபிகள் நாயகம் வழியில் நின்று இந்த மண்ணிற்கே உரிய மகத்தான பண்புகளான நேச மனப்பான்மை, நல்லிணக்கம், சமயப் பொறை, சகோதரத்துவம், ஓரிறைக் கொள்கை ஆகியவைகளை வளர்த்துச் செழுமைப்படுத்திய சுல்த்தான் செய்யிது இபுராஹிம் அவர்களது அரிய தொண்டினையாரும் எளிதில் மறக்க முடியாது.

இதன் காரணமாக இறை நேசர் செய்யது இபுராஹிம் அவர்கள் வீரப்போர் புரிந்து இறைவனுக்கு உகந்த தியாகியான அவர்களது இறுதி போராட்டக் களமாகியது இன்றைய ஏர்வாடி தர்ஹா. செரீபில் நாட்டின் பல பகுதியைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் ஆண்டு தோறும் சாதி, குல சமயமொழிப் பாகுபாடுகளை மறந்தவர்களாக ஒவ்வொரு ஆண்டும் சுல்தான் அவர்கள் மறைந்த நாளான, துல்கயிதா பிறை 23 அன்று இரவில் கூடி நின்று இந்த இறைநேசருக்கு நன்மாராயம் கூறி வருகின்றனர். இறைவனது அனுபூதி பெற்ற இந்த நல்லடியாரது ஆன்மீக ஒளி இந்த மக்களுக்குப் பல்லாண்டு காலம் நல்வழி காட்டியாக அமைந்து உதவி வருகிறது. தொடர்ந்து இந்த மக்கள் இறை நம்பிக்கையுடனும் சுல்தான் அவர்களைப் போன்ற பெருமக்களது தியாகத்தையும் சமுதாயப் பணியையும் நினைவூட்டி தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரியப் பெருமைக்கு வழிகோலும் நன்மக்களாக அமைந்து விளங்குவர் என்பது உறுதி. ஆதலால், புனித சுல்த்தான் அவர்களை தமிழகத்தில் முஸ்லீம் சமயத்தை பரப்பும் பணியில் ஈடுபட்ட முன்னோடிகளில் முதல்வர் என கொள்ளுதல் பொருத்தமாகும்.

மேலும், அதுவரை, வெற்றிக் கொடி நாட்டிய, வீராதி விரர்களையும், பலசிறு நாடுகளை, இணைத்து, பேரரசாக மாற்றிய, பேரரசர்களைப் பற்றியுமே உலக வரலாற்றில் பதிவு செய்துள்ளன. ஆனால் சுல்த்தான் செய்யது இபுறாகிம் ஷகிது அவர்களைப் போன்ற சமயச் சான்றோர்களை, ஏக இறைக் கொள்கையை, நிலை நாட்ட தங்கள் இன்னுயிரையை ஈந்தவர்களை, வரலாறும், மக்களும் அறிந்திருக்க வில்லை.

சிறந்த குணங்களுக்கும், மனித பண்புகளுக்கும், முன்னோடி யாக விளங்கிய முகமது நபி ஸல்லல்லாகு அவர்களது வழியில் இன்று பல மாநிலங்களுக்கும் சென்று ஏக இறைக் கொள்கையை பரப்பும் பணியில் தியாகியானவர்கள், யாரும் இல்லை. இந்த அறிய குண நலன்களை உடைய, கோமான் சுல்தான் செய்யது இபுறாகிம். அவர்களை பாண்டிய நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகள் கடந்த பொழுதிலும் இறைவனுக்கு அடுத்த படியாக, சுல்தான் அவர்களை தங்களது இதயத்தில் நிறுத்தி வைத்து, போற்றி வருகின்றனர். வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்கள், தீராத வியாதியினால் துன்பப்படுகிறவர்கள் ஆகிய பல தரப்பு மக்களும் தங்களது நம்பிக்கை வழியாக சுல்த்தான் அவர்களைப் போற்றி வருகின்றனர். சமய, இன மொழி, வேறுபாடு இல்லாத நிலையில் தங்கள் குறைபாடுகளை, சுல்த்தான் அவர்களது சன்னிதானத்தில் தெரிவித்து அதற்கான தீர்வுகளை இறைவனிடமிருந்து பெற்று அருளுமாறு அவர்கள் நாள்தோறும் நெக்குருகிக் கெஞ்சுவது காண்டோரது மனதை கலங்கச் செய்யும், காட்சியாக அமைந்துள்ளது.

தொலை தூரத்தில் உள்ள கேரளக் கதையின் வட கோடியில் உள்ள தாழிப்பரம்பாவிலிருந்து தெற்கே இலங்கையின் காலி நகர் வரையான பகுதியிலிருந்து மக்கள் கூட்டம் ஏர்வாடி சைகிது அவர்களின் சன்னிதானத்திற்கு நாள் தோறும். வருகை தருவது, நம்மை சிந்திக்க வைக்கின்றது.

பேரும் புகழும் பெற்ற மருத்துவர்களால்; தீர்க்க முடியாத நோய்களையும் மன குழப்பங்களையும் உடைய அந்த மக்கள் சுல்த்தான் செய்யது இபுறாகிம் அவர்கள் பேரிலும்; இறைவனது நம்பிக்கையிலும், ஏர்வாடிக்கு வந்து செல்வது, வீண் பிரயத்தனம் அல்ல என்பதையும் விந்தை மிக அற்புதம் என்பதையும் இத்தகைய மக்களது, பலவேறு அனுபவங்கள். தெற்றனத் தெளிவாக்குகிறது. மனித சமுதாயம் அன்பாலும், இறை நம்பிக்கையாலும். ஜாதி, இன, மத பேத மற்ற நல்லுணர்வுகளாலும், தொடர்ந்து விளங்குவதற்கு, சுல்த்தான் அவர்களது சன்னிதானம், மிகச்சிறந்த எடுத்துக் காட்டாக இருந்து வருகிறது.

❖

# இயல் - 12

## வரலாற்று வழித்தடத்தில்

இதுவரை இந்தத் தொகுப்பில் வரையப்பட்டுள்ள சுல்த்தான் செய்யது இபுராகிம் ஷகீது அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகள் அனைத்தும் இஸ்லாமிய வரலாற்று நூல்களான ஷகாதத் நாமா (பாரசீக மொழி) சுல்த்தான் செய்யது இபுராகிம் (வலி) அவர்களது பேரில் பாடப் பெற்ற மௌலீது செரீப் (அரபிமொழி), ஏர்வாடி அம்மானை, தீன்நெறி விளக்கம், ஷகீது சரிதை. ஆகியவைகளில் சொல்லப்பட்டுள்ளவைகளைப் பின்புலமாகக் கொண்டவை. இந்த நூல்களில் ஒருமுகமாக கீழ்க்கண்ட நிகழ்வுகள் குறிப்பிடப்படு கின்றன. (1) சுல்தான் செய்யது இபுராகிம் அவர்கள் அரபுத் தாயகத்திலிருந்து ஹிஜ்ரி 582 - இல் புறப்பட்டு வந்து காயல் நகரை அடைந்தது. (2) மதுரையிலிருந்த பாண்டியனுடன் போர் புரிந்து மதுரையைக் கைப்பற்றியது. (3) மதுரைக் கோட்டைக்குக் கிழக்கே யுள்ள பவுத்திர மாணிக்கப் பட்டிணத்தில் ஆட்சிபுரிந்த விக்கிரம பாண்டியனுடன் போர்புரிந்து அவனைக் கொன்றது. ஹிஜ்ரி 583 துல்கயிதா பிறை 10 (கி.பி. 1188) (4) பவுத்திர மாணிக்க பட்டிணத்தில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்தி 12 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்த சுல்த்தான் அவர்களை, விக்கிரம பாண்டியன் வழியினரான திருப்பாண்டியன் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியது ஹிஜ்ரி 594 துல்காயிதா பிறை 23 (கி.பி. 1198).

ந. - 7

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் பாண்டிய நாட்டில் கி.பி. 1188-க்கும் கி.பி. 1198-க்கும் இடையில் நிகழ்ந்தவையாகும். ஆனால் இந்தக் காலவரையரையை உறுதிப்படுத்தும் தமிழ்நாட்டு வரலாற்று ஆவணங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. இந்த ஒரு காரணத்தினால் தமிழக வரலாற்றில் ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தித் தமிழ்ச் சமுதாயத்தின் பெருமைக்கு உரியவர்களாகத் தமிழ் முஸ்லீம்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய இந்த மாபெரும் வரலாற்று நிகழ்வினைப் புறக்கணித்தல் என்பது இயலாத காரியமாகும்.

மேலே கண்ட நூல்களில் மிகவும் தொன்மையானதாக கருதப்படுவது ஷஹாதத் நாமா என்ற பாரசீக மொழி நூலாகும். இந்த நூல் பெரும்பாலும் கி.பி. 15, 16 - ஆம் நூற்றாண்டுகளில் வரையப் பெற்றிருத்தல் வேண்டும். கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எம்மண்டல முங் கொண்டான் என்ற புகழ் படைத்த மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சியிலும், அடுத்து கொல்லம் கொண்டான் என்ற சிறப்பு விருதுக்குரிய மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சியிலும் பாரசீக நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே அரபிக் குதிரை வணிகம் மும்முரமாக நடைபெற்றதை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் காலத்தில் தான் குதிரைகளின் ஒரு பிரிவிற்கு பரி (பாரசீக நாட்டுக்குதிரை) துரகம் (துருக்கி நாட்டுக் குதிரை) கோரம் (கொராசன் நாட்டுக் குதிரை) என்ற பெயர்கள் ஏற்பட்டன என்பது இங்கு நினைவு கொள்ளத் தக்கது. இந்தக் காலக் கட்டத்தில் தமிழகம் வந்து திரும்பிய பாரசீகக் குதிரை வணிகர் ஒருவர் தெரிவித்த செய்திகளின் அடிப்படையில் சுல்த்தான் செய்யது இபுராஹிம் ஷகீது அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றினை ஷஹாதத் நாமா நூலின் ஆசிரியர் தொகுத்திருத்தல் வேண்டும். இந்த வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் அந்த ஆசிரியரால் தமிழகத்தில் நேரடியாகப் பெறப்பட்டவை அல்ல, செவிவழிச் செய்தி ஆகும். அதனால் அந்த நூலில் தமிழக வரலாற்றின் ஆட்சியாளர்களான கி.பி. 12 - ஆம் நூற்றாண்டு பாண்டியர்களின் பெயர்களைப் பற்றிய செய்திகளும் வரலாற்று

நிகழ்வுகளும் தவறாகத் தமிழக வரலாற்றிற்கு முரணான முறையில் விவரிக்கப் பட்டுள்ளன. அவைகளை இப்பொழுது பார்ப்போம்.

பாண்டியநாடு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று பாண்டியர்களால் ஆளப்பட்டது என்பது அந்த நூலில் குறிப்பிடப் பட்டுள்ளதாகும். இதற்கான ஆதாரம் பாண்டிய, சோழ, நாஞ்சில் நாட்டு கல்வெட்டுக்களில் காணப்பெறவில்லை.

அடுத்ததாக சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் கி.பி. 1187 - இல் காயல் நகரை வந்தடைந்த பொழுது அங்கு கோப்பாண்டியன் என்ற சடையவர்மன் குலசேகரனும், மதுரையில் திருப்பாண்டியனும், பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் விக்கிரம பாண்டியனும் ஆட்சி செய்து வந்ததாக அந்த நூலில் இடம் பெற்றுள்ளது. இதில் விக்கிரம பாண்டியன் என்ற பாண்டியனது பெயர் மட்டும் தான் பாண்டியரது வம்சாவழிப் பட்டியலுக்குப் பொருந்தி வருகிறது. ஏனைய கோப் பாண்டியன், திருப்பாண்டியன் என்ற பெயர்கள் அந்தப் பட்டியலில் இடம் பெறவில்லை. இங்கு குறிப்பிட்டுள்ள தமிழக வரலாற்றின் இயையுடைய பெயரான விக்கிரம பாண்டியனது ஆட்சிக் காலம் கி.பி. 1181 - 1190 ஆகும். இவர் ஸ்ரீ வல்லப் பாண்டியனது (கி.பி. 1145 - 1162) மகனாவான். விக்கிரம பாண்டியன் பௌத்திர மாணிக்கப் பட்டினத்தை ஆட்சி செய்த பொழுது சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களால் ஹிஜ்ரி 583-ல் அதாவது கி.பி. 1188 - இல் கொல்லப்பட்டான் என அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பது வரலாற்றிற்கு ஏற்புடையதாக இல்லை. அத்துடன் விக்ரம பாண்டியனது தலைநகரம் மதுரை ஆகும். சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் காயல் நகரிலிருந்து கோப்பாண்டியனது ஆதரவு பெற்று, திருநெல்வேலிப் பகுதியில் சன்மார்க்கப் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு மதுரை வந்த பொழுது மதுரையிலிருந்த திருப்பாண்டியன், சுல்தான் அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் இதனால் ஏற்பட்ட பூசலில் மதுரைப் பாண்டியன் வடக்கே ஓடி விட்டதாகவும் ஷகீது சரிதையில் கூறப்பட்டுள்ளது. மதுரையில் இத்தகைய போர் ஒன்று

நடைபெற்றதாக தமிழக வரலாற்று நூல்களில் காணப்படவில்லை. மேலும் பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக இஸ்லாமிய ஆட்சி நடைபெற்ற பொழுது ஏற்கனவே பௌத்திர மாணிக்கப் பட்டினம் போரில் கொலையுண்ட விக்கிரம பாண்டியனின் சகோதரன் திருப்பாண்டியன், வடக்கே திருப்பதியி லிருந்து ஒரு பெரும் படையைத் திரட்டி வந்து பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களை ஹிஜ்ரி 594 துல்கயிதா பிறை 23 அன்று கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் காலவரை ஆங்கில ஆண்டுக்கணக்கில் 26.9.1198 ஆகும். இது தமிழக வரலாற்றின் நிகழ்ச்சிகளுக்குப் பொருந்துவதாக இல்லை. ஏனெனில் அப்பொழுது தமிழ் நாட்டின் தென் பகுதி முழு வதும் (பாண்டிய நாடு உள்பட) மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியில் அடங்கி இருந்தது. திருப்பாண்டியன் திருப்பதியிலிருந்து படை உதவி பெற்று வரவேண்டிய அவசியம் இல்லை. மேலும் திருப்பாண்டியன் என்ற பாண்டிய மன்னன், பாண்டியர் வரலாற்றில் காணப்படவில்லை என்பதை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைக் கல்வெட்டுச் செய்திகள் தெளிவாக அறிவிக்கின்றன. சிதம்பரம் கோயில் கல்வெட்டு வாசகத்தின்படி[1] மூன்றாம் குலோத்துங்க சோழன் மாறவர்மன் விக்கிரம பாண்டியனைக் கி.பி. 1186 - இல் மதுரை மன்னனாக்கினான் என்றும் அவனது மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் 5.6.1190 முதல் 1218 வரை மதுரை மன்னனாக இருந்து வந்தான் என்றும் குறிப்பிட்டுள்ளது[2]. இதனால் சுல்தான் செய்யது இபுராகிம் அவர்கள் 11.1.1188இல் விக்கிரம பாண்டியனைக் கொன்றார் என்றும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருப்பது தவறான செய்தியாகும். ஏனெனில் விக்கிரம பாண்டியன் கி.பி. 1190 வரை மதுரையை ஆட்சி செய்தான்

1) சிதம்பரம் கோயில் கல்வெட்டு (எஸ்.ஐ.ஐ. 3.86)

2) கோவிலூர் கல்வெட்டு ஏ.ஆர். 1830, 1908 சேரனூர்

என்பதற்கும் அதனை அடுத்து அவனது மகன் சடையவர்மன் குலசேகர பாண்டியன் கி.பி. 1190 - 1218 வரை தொடர்ந்து மதுரை மன்னனாக இருந்தான் என்பதற்கும் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.[1] பௌத்திர மாணிக்கப் பட்டிணத்துப் போரில் சுல்த்தான் அவர்களால் கொல்லப்பட்ட பாண்டியன் விக்கிரம பாண்டியன் அல்ல வேறொருவனாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இதனைப் போன்றே வடக்கேயிருந்த வந்த முன்னாள் மதுரை மன்னனான திருப்பாண்டியன் சுல்த்தான் அவர்களை இரண்டாவது பௌத்திர மாணிக்க பட்டிணப் போரில் (26.9.1198-ல்) ஹிஜ்ரி 594 துல்காயிதா பிறை 23-ல் கொன்றதாக குறிப்பிடப்பட்டிருப்பதும் தவறான செய்தியாகும். அந்தக் கால கட்டத்தில் மதுரையிலிருந்த மன்னன் சடையவர்மன் குலசேகரன் தான் சுல்தான் அவர்களைப் போரில் கொன்றிருக்க வேண்டும் என்பதே பொருத்தமான உண்மை ஆகும். ஏனெனில் இந்த மன்னன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை கி.பி. 1190 வரை ஆட்சி செய்துள்ளான் என்பதற்கும் பல சான்றுகள் உள்ளன.

இவைகளிலிருந்து சுல்த்தான் செய்யது இபுராகிம் சகீது அவர்களைப் பற்றியவை இஸ்லாமிய பஞ்சாங்க ஹிஜ்ரி ஆண்டுக் கணக்கில் சரியாக குறிக்கப் பெற்று உள்ளது. அதாவது ஹிஜ்ரி 583-க்கும் ஹிஜ்ரி 594-க்கும் இடைப்பட்ட கால நிகழ்ச்சிகள் அவையனைத்தும் உண்மை நிகழ்ச்சிகள் என உறுதிபடக் கொள்ள லாம். இஸ்லாமியப் பஞ்சாங்க முறைக்கு கிறித்தவ ஆண்டுமுறை கணக்கிடப்பட்டுள்ள விபரத்தை அடுத்த இயலில் பார்க்கலாம். ஆனால் அவைகளில் குறிப்பிட்டுள்ள பாண்டியர்களது பெயர்கள் மட்டும் தவறானதாகவும் தமிழக வரலாற்று ஆவணங்களுக்கு முரணானதாகவும் உள்ளன் என்பது தெளிவு.

---

1) மேற்படி நூல் குடுமியான் மலை

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது பாண்டிய நாட்டு வாழ்க்கையில் மிக முக்கியமானதாக கருதப்படுவது அவர்கள் பவித்திர மாணிக்கப் பட்டிணத்தில் ஆட்சி புரிந்து வந்த பாண்டியனை ஹிஜ்ரி 583 - இல் (11.1.1188 - இல்) கொன்று அந்த ஆட்சியைக் கைப்பற்றியதும் அங்கு தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேலாக ஷரிஅத் ஆட்சி நடத்தியதும் ஆகும். அவர்களது ஆட்சிப்பரப்பு பாண்டிய நாட்டில் எங்கு அமைந்து இருந்தது என்பதை டாக்கா பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் டாக்டர் எஸ்.ஏ.க்யூ. ஹுசைனி அவர்கள் மட்டும் தமது நூலில் தெளிவாக வரையறுத்துக் காட்டியுள்ளார்[1] அதாவது பாண்டிய நாட்டின் தெற்கே வைப்பாறுக்கும் வடக்கே வைகையாற்றுக்கும் கிழக்கே வங்கக் கடலுக்கும் இடைப்பட்ட முக்கோண வடிவிலான இன்றைய நெல்லை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களைக் கொண்டது அந்தப் பகுதி ஆகும்.

பௌத்திர மாணிக்கப் பட்டிணம் என்ற பராக்கிரம பட்டிணத்தைப் பற்றிய செய்திகளை, இலங்கை நாட்டு வரலாறான மகாவம்சமும் பாண்டியரது முதலாவது உள்நாட்டுப் போரினைக் குறிப்பிடுகின்ற கீழ்க்கண்ட வரலாற்று நூல்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

1) உலகப்பயணி இபுனு பத்துதாவின் பயணக் குறிப்புகள் அடங்கிய "Foreign notices of South India" (1948) by K.A. Neelakanda Shastri.

2) Dr.S. Krishnaswamy Ayyangar's The South India and her mohamaden Invaders (1928)

3) Memorial Lecture - by K.K. Pillai (Madras University Series)

---

1. Hussaini Dr. S.A.Q. - The Pandia Kingdom (1962)

மற்றும் இந்தப் பவித்திர மாணிக்கப்பட்டினம் இராஜராஜ சோழனது ஆட்சிக் காலத்திலிருந்து பிற்காலம் வரை அதன் பெயரில் மாற்றம் பெற்று பராக்கிரம புரமாகவும் பெரிய பட்டிணமாகவும் மாறியது என்பதை ஆய்வு செய்து எழுதியுள்ள ஆசிரியர் அவர்களது கட்டுரையைத் தாங்கிய தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்குக் கோவை 1980 (டாக்டர். ஆர். நாகசாமி அவர்கள் பதிப்பு) - இல் காணலாம்.

மேலும் இந்தப் பவித்திர மாணிக்கப்பட்டிணம் எங்கு அமைந்திருந்தது என்பதை மாறவர்மன் சுந்தரபாண்டியனது திருப்புல்லாணித் திருக்கோயில் கல்வெட்டும் அறுதியிட்டுக் குறிப் பிட்டுள்ளதை ஏற்கனவே இயல் 10 - இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே கண்ட இத்துணை வரலாற்று ஆதாரங்கள் வரலாற்றில் பதிவு பெற்றிருந்தும் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் பௌத்திர மாணிக்கப் பட்டிணத்தில் கி.பி. 1188 முதல் 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னரசு ஆட்சி ஒன்றை நிறுவியிருந்ததை தமிழக வரலாற்றில் இடம் பெறாதது விந்தையான செய்தியே ஆகும்.

இத்தகைய தமிழக வரலாற்றில் விடுபட்டுள்ள இன்னொரு செய்தியினை இங்குக் குறிப்பிடுதல் பொருத்தமானதாக இருக்கும். கி.பி. 1165 முதல் பாண்டிய நாட்டில் தொடர்ந்த உள்நாட்டுப் போரில் பராக்கிரம பாண்டியனுக்கும் அவனது இளவல் வீரபாண்டியனுக்கும் உதவுவதற்காக இலங்கையிலிருந்து பராக்கிரம பாகுவின் ஆட்சிக் காலத்திலும் அவனது மருமகன் நிசங்க மல்லனது ஆட்சிக் காலத்திலும் பாண்டிய நாட்டிற்கு இராமேஸ்வரம் தீவு வழியாக உதவிப் படைகள் வந்தன. இந்தப் போர் ஏறத்தாழ இருபது ஆண்டுகள் நீடித்த போது இலங்கைப் படைகளின் ஒரு பகுதி இராமேஸ்வரம் தீவினை முழுமையாகக் கைப்பற்றி வைத்திருந்தனர் என்பது வரலாறு. இதனை எந்த வரலாற்று ஆசிரியரும் குறிப்பிட்டு வரையவில்லை என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

இத்தகைய வரலாற்று நிகழ்வுகள் தமிழக வரலாற்றில் ஒட்டு மொத்தமாக நிகழ்ச்சிக் கோவையில் விடுப்பட்டதற்குக் காரணம் ஒன்று உள்ளது. அதுதான் சோழர்கள் அப்பொழுது தங்களது அரசியல் பகடைகளாக பாண்டியர்களை ஆட்டிப் படைத்ததும் அதன் விளைவாக அமைதியும் வளமையும் நிறைந்த பாண்டிய நாட்டில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் மிகவும் குழப்பமான சூழ்நிலை நிலவியதேயாகும்.

வருங்கால வரலாற்று ஆய்வாளர்கள் தமிழக வரலாற்றில் இந்த வழித்தடத்தை ஆய்வு செய்து சரியான வரலாற்றினை மக்களுக்கு வழங்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

❖

# இயல் - 13

## ஹிஜ்ரி ஆண்டை கிறிஸ்தவ சகாப்தத்துடன் கணக்கிடுதல்

மனித சமுதாயம் தோற்றம் பெற்ற காலத்தை இதுவரை யாரும் வரையறுத்துச் சொல்லவில்லை என்றாலும் மனிதன் விலங்கின வாழ்க்கையிலிருந்து முதிர்ச்சியும் அனுபவமும் பெற்றுப் பல நூறு ஆண்டுகள் ஆனபிறகு நமது உள்ளக்கருத்தைப் பிறருக்கு வெளியிட வேண்டும் என்ற இயற்கை உந்துதலினால் ஒலிக் குறிப்புகளைக் கொண்டு பேச்சு மொழியையும், பின்னர் அதற்குரிய வரிவடிவங்களான எழுத்துக்களையும் கண்டுபிடித்தான். இத்துடன் அமையாமல் தமது அனுபவ முதிர்ச்சியையும் நாகரிக வாழ்க்கையையும் வரையறுத்துச் சொல்வதற்கு எண்களையும் கண்டுபிடித்துள்ளான். இந்த எண்களுக்கும் உலகின் பல பகுதியிலுள்ள மக்கள் தாங்கள் பேசும் மொழியிலேயே இந்த எண்களுக்கான வரி வடிவினையும் அமைத்தனர். பொதுவாக இன்று உலகம் முழுவதும் இந்த எண்கள் ரோமர்களது எழுத்திலும் எடுத்துக்காட்டாக, (I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X) அரபுப் மொழியிலும் (எடுத்துக்காட்டாக 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10) எழுதப்பட்டு வழக்கத்தில் இருந்து வருகின்றன. இதேபோல தமிழ் எண் வரிசையை 1 முதல் 10 வரை குறிப்பிட க,உ,ங,ச,ரு,சு,எ,அ,கூ,ய தமிழ் எழுத்துக்களிலேயே குறிக்கப்பட்டு வருகிறது.

இந்த எண்கள் நாட்களையும் மாதத்தையும் வருடத்தையும் கணக்கிடுவதற்குப் பயன்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுகளை நூறு வரை உள்ள காலத்தை நூற்றாண்டு என்றும் அதற்கும் மேலே பல நூற்றாண்டுகளைக் குறிப்பதற்கு சகாப்தம் அல்லது யுகம் என்று பெயரிடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டுகளை நூற்றாண்டு கணக்கில் வரையறுக்கப்பட்ட பஞ்சாங்கம் பல நாடுகளிலும் வெவ்வேறு விதமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இன்றைய வரலாற்றினைக் குறிப்பிடுவதற்கு பெரும்பாலும் கிறிஸ்தவ சகாப்தம் தான் கிறிஸ்துவிற்குப் பின்னர் (கி.பி) கிறிஸ்துவுக்கு முன்னர் (கி.மு.) எனப் பொதுவாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கிறிஸ்துவ சமயம் பரவியிருப்பதால் இந்தப் பழக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. பின்னர் ஏனைய நாடுகளும், தங்களுக்கென தனியாக சகாப்தங்களைக் கொண்ட பஞ்சாங்கத்தினை வைத்திருந்த பொழுதும் இந்த கி.பி., கி.மு. கணக்கையே பொதுப் பஞ்சாங்கக் கணக்காக ஏற்றுக் கொண்டுள்ளன. தமிழ் நாட்டின் வரலாற்றை வரையறுத்துக் கூறுவதற்கு சக ஆண்டு என்ற முறையைப் பின்பற்றி வருகிறோம். இந்த முறையின்படி கிறிஸ்தவ ஆண்டிற்கும் சக ஆண்டிற்கும் கால வேறுபாடு 78 ஆண்டுகள் என்பது இங்கு நோக்கத்தக்கது.

இதுவரை எழுதப்பட்டுள்ள சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளில் முக்கிய நிகழ்வுகளுக்கு அரபு நாட்டுப் பஞ்சாங்கமான ஹிஜ்ரி ஆண்டைப் பற்றிய சில செய்திகளை வாசகர்கள் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது. ஹிஜ்ரி என்பது இன்றைய அரபி நாட்டவரின் ஆண்டுக்கணக்கை, பஞ்சாகத்தைக் குறிக்கும் சொல் ஆகும். கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் நபிகள் நாயகம் ஸல்லல்லாகு அவர்கள் மதின மாநகரில் 17 ஆண்டுகள் வாழ்ந்து முடிந்த பிறகும் கூட அரபிகளுக்குத் தனியாக பஞ்சாங்கம், ஆண்டுக் கணக்கு ஒன்று இருந்தது இல்லை. இந்தக்

குறைபாட்டினை நபிகள் நாயகம் அவர்களுக்குப் பின்னர் இரண்டாவது கலிபாவாக பதவியேற்ற உமர்கத்தாப் அவர்கள் உணர்ந்தார்கள். அதுவரை அரபு நாட்டின் ஆண்டுகளுக்குத் தனித் தனியாகப் பெயர்கள் மட்டும் தான் எடுத்துக்காட்டாக யானை ஆண்டு, நில அசைவு ஆண்டு, அனுமதி ஆண்டு என்ற பெயர்கள் இருந்து வந்தன. கலிபா உமறு கத்தாப் அவர்கள் மதின நகர் தோழர்களை அழைத்துப் பேசி தமது நாட்டு ஆண்டுப் பஞ்சாங்கத்தை நிர்ணயிப்பது சம்மந்தமாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன் வழி அனைத்துத் தோழர்களும் ஏற்றுக் கொண்ட ஒருமித்த கருத்தில் ஹிஜ்ரி ஆண்டு பிறந்தது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாகு அவர்கள் மக்க மாநகரிலும் அதனைச் சுற்றிய பகுதிகளிலும் பல ஆண்டுகள் மக்களைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டும் அவர்களுக்கு அருளப் பெற்ற திருக்குர் ஆன் வசனங்களை விளக்கிச் சொல்லுவதிலும் பயன் ஏதும் ஏற்படாமல் அன்னவர்களது உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட நிலையில் மக்கா நகரை விட்டு மதின நகரைப் போய்ச் சேர்ந்ததை இந்த ஹிஜ்ரி ஆண்டு குறிப்பிடுவதாகும் எனப் பலர் நம்பி வருகின்றனர். நபிகள் நாயகம் அவர்கள் மதின மாநகர் சேர்ந்த நாள் அரபி மாதம் ரபிஉல் அவ்வல் 12-ம் தேதி. இந்த நாளுக்கு முன்னதாக அமைந்த சபர்மாதம். முஹர்ரம் மாதம் ஆகியவைகளின் மொத்தம் 69 நாட்களை அதாவது நபிகள் நாயகம் அவர்கள் மதினம் வந்த நாளிலிருந்து முன்னதாக உள்ள 69-வது நாளில் ஹிஜ்ரி ஆண்டு முஹர்ரம் மாதத்தில் தொடக்கம் பெறுவதாக நிர்ணயம் செய்தார்கள். கிறிஸ்தவ சகாப்தத்தின்படி இந்த நாள் 16.07.622 ஆகும் என ஆங்கில நாட்டு கலைக்களஞ்சியமான பிரிட்டானிகா என்சைக்ளோ பீடியா என்ற தொகுதியில் வரையப்பட்டுள்ளது.

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கையில் முக்கிய நிகழ்வுகளை ஹிஜ்ரி ஆண்டில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளன.

1) சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் மதின மாநகரில் பிறந்தது ஹிஜ்ரி 530 ரமலான் பிறை - 3.

2) மேற்படியாரது திருமண விழா நடந்தது ஹிஜ்ரி 555.

3) ஜித்தா துறைமுகத்திலிருந்து பாண்டியநாடு புறப்பட்டது ஹிஜ்ரி 582. ஜமாதுல் ஆகிர்.

4) மேற்படியார் காயல் நகர் வந்து சேர்ந்தது ஹிஜ்ரி 583.

5) பௌத்திர மாணிக்கப்பட்டிணத்தில் விக்கிரம பாண்டியனை வென்று ஆட்சியை ஏற்படுத்தியது. துல்கயிதா பிறை 10 ஹிஜ்ரி 583.

6) திருப்பாண்டியன் போரில் அவர்களை வென்று கொன்றதினால் வீர மரணம் எய்தியது, துல்கயிதா பிறை 23. ஹிஜ்ரி 594.

சுல்த்தான் அவர்களது வாழ்க்கையினை விவரிக்கும் ஒரே நூலான ஷகீது சரிதை (பதிப்பு ஆண்டு 1953) - இல் கொடுக்கப் பட்டுள்ள மூன்று நிகழ்ச்சிகளுக்கு மட்டும் ஹிஜ்ரி ஆண்டுக் கணக்கிற்கு உரிய ஆங்கில ஆண்டு திங்கள், நாள் ஆகிய விவரங் களைக் கணக்கிட்டு கீழே கொடுத்துள்ளோம். இந்தக் கணக்கீட்டிற்குக் பயன்பட்ட ஆங்கில நூல்.

"Conversion of Hijiri year into Christian Year"

மேலே கண்ட நூலில் கொடுக்கப்பட்டுள்ள மூன்று அட்டவணைகளையும் முறைப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அட்டவணைகளின் அடிப்படையில் ஹிஜ்ரி ஆண்டுக்குரிய கிறிஸ்தவ ஆண்டு, திங்கள், நாள் ஆகியவைகளை எவ்விதம் கணக்கிடலாம் எனப் பார்ப்போம்.

ஹிஜ்ரி ஆண்டிற்கு இணையான கிறிஸ்தவ ஆண்டை கண்டுபிடிப்பது இந்த அட்டவணை விளக்குகிறது.

TABLE I

| Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed | Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed |
|---|---|---|---|---|---|
| 487 | 1094, January 21 | 20 | 522 | *1128, January 6 | 5 |
| 488 | 1095, January 11 | 10 | 523 | *1128, December 25 | 359 |
| 489 | 1095, December 31 | 364 | 524 | 1129, December 15 | 348 |
| 490 | *1096, December 19 | 353 | 525 | 1130, December 4 | 337 |
| 491 | 1097, December 9 | 342 | 526 | 1131, November 23 | 726 |
| 492 | 1098, November 28 | 331 | 527 | *1132, November 12 | 316 |
| 493 | 1099, November 17 | 320 | 528 | 1133, November 1 | 304 |
| 494 | *1100, November 6 | 310 | 529 | 1134, October 22 | 294 |
| 495 | 1101, October 26 | 298 | 530 | 1135, October 11 | 283 |
| 496 | 1102, October 15 | 287 | 531 | *1136, September 29 | 272 |
| 497 | 1103, October 5 | 277 | 532 | 1137, September 19 | 261 |

| Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed | Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed |
|---|---|---|---|---|---|
| 498 | *1104, September 23 | 265 | 533 | 1138, September 8 | 250 |
| 499 | 1105, September 13 | 255 | 534 | 1139, August 28 | 239 |
| 500 | 1106, September 2 | 244 | 535 | 1140, August 17 | 229 |
| 501 | 1107, August 22 | 233 | 536 | 1141, August 6 | 217 |
| 502 | *1108, August 11 | 223 | 537 | 1142, July 27 | 207 |
| 503 | 1109, July 31 | 211 | 538 | 1143, July 16 | 196 |
| 504 | 1110, July 20 | 200 | 539 | *1144, July 4 | 185 |
| 505 | 1111, July, 10 | 190 | 540 | 1145, June 24 | 174 |
| 506 | *1112, June 28 | 179 | 541 | 1146, June 13 | 163 |
| 507 | 1113, June 18 | 168 | 542 | 1147, June 2 | 152 |
| 508 | 1114, June 7 | 157 | 543 | *1148, May 22 | 142 |
| 509 | 1115, May 27 | 146 | 544 | 1149, May 11 | 130 |
| 510 | *1116, May 16 | 136 | 545 | 1150, April 30 | 119 |
| 511 | 1117, May 5 | 124 | 546 | 1151, April 20 | 109 |
| 512 | 1118, April 24 | 113 | 547 | *1152, April 8 | 98 |

| Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed | Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed |
|---|---|---|---|---|---|
| 513 | 1119, April 14 | 103 | 548 | 1153, March 27 | 87 |
| 514 | *1120, April 2 | 92 | 549 | 1154, March 18 | 76 |
| 515 | 1121, March 22 | 80 | 550 | 1155, march 7 | 65 |
| 516 | 1122, March 12 | 70 | 551 | *1156, February 25 | 55 |
| 517 | 1123, March 1 | 59 | 552 | 1157,February 13 | 43 |
| 518 | 1124, February 19 | 49 | 553 | 1158, February 2 | 32 |
| 519 | 1125, February 7 | 37 | 554 | 1159, January 23 | 22 |
| 520 | 1126, January 27 | 26 | 555 | *1160, January 12 | 11 |
| 521 | 1127, January 17 | 16 | 556 | *1160, December 31 | 365 |
| 557 | 1161, December 21 | 354 | 592 | 1195, December 6 | 339 |
| 558 | 1162, December 10 | 343 | 593 | *1196, November 24 | 328 |
| 559 | 1163, November 30 | 333 | 594 | 1197, November 13 | 316 |
| 560 | *1164, November 18 | 322 | 595 | 1198, November 3 | 306 |
| 561 | 1165, November 7 | 310 | 596 | 1199, October 23 | 295 |
| 562 | 1166, October 28 | 300 | 597 | *1200, October 12 | 285 |

| Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed | Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed |
|---|---|---|---|---|---|
| 563 | 1167, October 17 | 289 | 598 | 1201, October 1 | 274 |
| 564 | *1168, October | 278 | 599 | 1202, September 20 | 262 |
| 565 | 1169, September 25 | 267 | 600 | 1203, September 10 | 252 |
| 566 | 1170, September 14 | 256 | 601 | *1204, August 20 | 231 |
| 567 | 1171, September 4 | 246 | 602 | 1205, August 18 | 229 |
| 568 | *1172, August 23 | 235 | 603 | 1206, August 8 | 219 |
| 569 | 1173, August 12 | 223 | 604 | 1207, July 28 | 208 |
| 570 | 1174, August 2 | 213 | 605 | *1208, July 16 | 197 |
| 571 | 1175, July 22 | 202 | 606 | 1209, July 6 | 186 |
| 572 | *1176, July 10 | 191 | 607 | 1210, June 25 | 175 |
| 573 | 1177, June 30 | 180 | 608 | 1211, June 15 | 166 |
| 574 | 1178, June 19 | 169 | 609 | *1212, June 3 | 154 |
| 575 | 1179, June 8 | 158 | 610 | 1213, May 23 | 142 |
| 576 | *1180, May 28 | 147 | 611 | 1214, May 13 | 132 |

| Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed | Year of the Hiriijra | Christian date of first day of the Hijira year | Number of days of the Christian year clapsed |
|---|---|---|---|---|---|
| 577 | 1181, May 17 | 136 | 612 | 1215, May 2 | 121 |
| 578 | 1182, May 7 | 126 | 613 | *1216, April 20 | 110 |
| 579 | 1183, April 26 | 115 | 614 | 1217, April 10 | 99 |
| 580 | *1184, April 14 | 104 | 615 | 1218, March 30 | 88 |
| 581 | 1185, April 4 | 93 | 616 | 1219, March 19 | 77 |
| 582 | 1186, March 24 | 82 | 617 | *1220, March 8 | 67 |
| 583 | 1187,March 13 | 71 | 618 | 1221, February 25 | 55 |
| 584 | 1188, March 2 | 61 | 619 | 1222, February 15 | 45 |
| 585 | 1189, February 19 | 49 | 620 | 1223, February 4 | 34 |
| 586 | 1190, February 8 | 38 | 621 | *1224, January 24 | 23 |
| 587 | 1191, January 29 | 28 | 622 | 1225, January 13 | 12 |
| 588 | *1192, January 18 | 17 | 623 | 1226, January 2 | 1 |
| 589 | 1193, January 7 | 6 | 624 | 1226, December 22 | 355 |
| 590 | 1193, December 27 | 360 | 625 | 1227, December 12 | 345 |
| 591 | 1194, December 16 | 349 | 626 | *1228 November 30 | 334 |

கிறிஸ்தவ சகாப்த மாதத்திற்கு உரிய நாளினை கண்டுபிடிக்கும் வழிமுறை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## TABLE II

| JANUARY | | | FEBRUARY | | | MARCH | | | APRIL | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year |
| 1 | 1 | 1 | 1 | 1 | 32 | 1 | – | 60 | 1 | – | 91 |
| 2 | 2 | 2 | 2 | 2 | 33 | 2 | 1 | 61 | 2 | 1 | 92 |
| 3 | 3 | 3 | 3 | 3 | 34 | 3 | 2 | 62 | 3 | 2 | 93 |
| 4 | 4 | 4 | 4 | 4 | 35 | 4 | 3 | 63 | 4 | 3 | 94 |
| 5 | 5 | 5 | 5 | 5 | 36 | 5 | 4 | 64 | 5 | 4 | 95 |
| 6 | 6 | 6 | 6 | 6 | 37 | 6 | 5 | 65 | 6 | 5 | 96 |
| 7 | 7 | 7 | 7 | 7 | 38 | 7 | 6 | 66 | 7 | 6 | 97 |
| 8 | 8 | 8 | 8 | 8 | 39 | 8 | 7 | 67 | 8 | 7 | 98 |
| 9 | 9 | 9 | 9 | 9 | 40 | 9 | 8 | 68 | 9 | 8 | 99 |
| 10 | 10 | 10 | 10 | 10 | 41 | 10 | 9 | 69 | 10 | 9 | 100 |
| 11 | 11 | 11 | 11 | 11 | 42 | 11 | 10 | 70 | 11 | 10 | 101 |
| 12 | 12 | 12 | 12 | 12 | 43 | 12 | 11 | 71 | 12 | 11 | 102 |
| 13 | 13 | 13 | 13 | 13 | 44 | 13 | 12 | 72 | 13 | 12 | 103 |
| 14 | 14 | 14 | 14 | 14 | 45 | 14 | 13 | 73 | 14 | 13 | 104 |
| 15 | 15 | 15 | 15 | 15 | 46 | 15 | 14 | 74 | 15 | 14 | 105 |
| 16 | 16 | 16 | 16 | 16 | 47 | 16 | 15 | 75 | 16 | 15 | 106 |
| 17 | 17 | 17 | 17 | 17 | 48 | 17 | 16 | 76 | 17 | 16 | 107 |

| JANUARY | | | FEBRUARY | | | MARCH | | | APRIL | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Com mon | Leap | Day of the Year |
| 18 | 18 | 18 | 18 | 18 | 49 | 18 | 17 | 77 | 18 | 17 | 108 |
| 19 | 19 | 19 | 19 | 19 | 50 | 19 | 18 | 78 | 19 | 18 | 109 |
| 20 | 20 | 20 | 20 | 20 | 51 | 20 | 19 | 79 | 20 | 19 | 110 |
| 21 | 21 | 21 | 21 | 21 | 52 | 21 | 20 | 80 | 21 | 20 | 111 |
| 22 | 22 | 22 | 22 | 22 | 53 | 22 | 21 | 81 | 22 | 21 | 112 |
| 23 | 23 | 23 | 23 | 23 | 54 | 23 | 22 | 82 | 23 | 22 | 113 |
| 24 | 24 | 24 | 24 | 24 | 55 | 24 | 23 | 83 | 24 | 23 | 114 |
| 25 | 25 | 25 | 25 | 25 | 56 | 25 | 24 | 84 | 25 | 24 | 115 |
| 26 | 26 | 26 | 26 | 26 | 57 | 26 | 25 | 85 | 26 | 25 | 116 |
| 27 | 27 | 27 | 27 | 27 | 58 | 27 | 26 | 86 | 27 | 26 | 117 |
| 28 | 28 | 28 | 28 | 28 | 59 | 28 | 27 | 87 | 28 | 27 | 118 |
| 29 | 29 | 29 | – | 29 | 60 | 29 | 28 | 88 | 29 | 28 | 119 |
| 30 | 30 | 30 | – | – | – | 30 | 29 | 89 | 30 | 29 | 120 |
| 31 | 31 | 31 | – | – | – | 31 | 30 | 90 | – | 30 | 121 |
| – | – | – | – | – | – | – | 31 | 91 | – | – | – |

# TABLE II

| MAY | | | JUNE | | | JULY | | | AUGUST | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Year | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year |
| 1 | – | 121 | 1 | – | 152 | 1 | – | 182 | 1 | – | 213 |
| 2 | 1 | 122 | 2 | 1 | 153 | 2 | 1 | 183 | 2 | 1 | 214 |
| 3 | 2 | 123 | 3 | 2 | 154 | 3 | 2 | 184 | 3 | 2 | 215 |
| 4 | 3 | 124 | 4 | 3 | 155 | 4 | 3 | 185 | 4 | 3 | 216 |
| 5 | 4 | 125 | 5 | 4 | 156 | 5 | 4 | 186 | 5 | 4 | 217 |
| 6 | 5 | 126 | 6 | 5 | 157 | 6 | 5 | 187 | 6 | 5 | 218 |
| 7 | 6 | 127 | 7 | 6 | 158 | 7 | 6 | 188 | 7 | 6 | 219 |
| 8 | 7 | 128 | 8 | 7 | 159 | 8 | 7 | 189 | 8 | 7 | 220 |
| 9 | 8 | 129 | 9 | 8 | 160 | 9 | 8 | 190 | 9 | 8 | 221 |
| 10 | 9 | 130 | 10 | 9 | 161 | 10 | 9 | 191 | 10 | 9 | 222 |
| 11 | 10 | 131 | 11 | 10 | 162 | 11 | 10 | 192 | 11 | 10 | 223 |
| 12 | 11 | 132 | 12 | 11 | 163 | 12 | 11 | 193 | 12 | 11 | 224 |
| 13 | 12 | 133 | 13 | 12 | 164 | 13 | 12 | 194 | 13 | 12 | 225 |
| 14 | 13 | 134 | 14 | 13 | 165 | 14 | 13 | 195 | 14 | 13 | 226 |
| 15 | 14 | 135 | 15 | 14 | 166 | 15 | 14 | 196 | 15 | 14 | 227 |
| 16 | 15 | 136 | 16 | 15 | 167 | 16 | 15 | 197 | 16 | 15 | 228 |
| 17 | 16 | 137 | 17 | 16 | 168 | 17 | 16 | 198 | 17 | 16 | 229 |
| 18 | 17 | 138 | 18 | 17 | 169 | 18 | 17 | 199 | 18 | 17 | 230 |
| 19 | 18 | 139 | 19 | 18 | 170 | 19 | 18 | 200 | 19 | 18 | 231 |
| | | | | | | | | | 20 | 19 | 232 |

| MAY | | | JUNE | | | JULY | | | AUGUST | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year |
| 20 | 19 | 140 | 20 | 19 | 171 | 20 | 19 | 201 | 21 | 20 | 233 |
| 21 | 20 | 141 | 21 | 20 | 172 | 21 | 20 | 202 | 22 | 21 | 234 |
| 22 | 21 | 142 | 22 | 21 | 173 | 22 | 21 | 203 | 23 | 22 | 235 |
| 23 | 22 | 143 | 23 | 22 | 174 | 23 | 22 | 204 | 24 | 23 | 236 |
| 24 | 23 | 144 | 24 | 23 | 175 | 24 | 23 | 205 | 25 | 24 | 237 |
| 25 | 24 | 145 | 25 | 24 | 176 | 25 | 24 | 206 | 26 | 25 | 238 |
| 26 | 25 | 146 | 26 | 25 | 177 | 26 | 25 | 207 | 27 | 26 | 239 |
| 27 | 26 | 147 | 27 | 26 | 178 | 27 | 26 | 208 | 28 | 27 | 240 |
| 28 | 27 | 148 | 28 | 27 | 179 | 28 | 27 | 209 | 29 | 28 | 241 |
| 29 | 28 | 149 | 29 | 28 | 180 | 29 | 28 | 210 | 30 | 29 | 242 |
| 30 | 29 | 150 | 30 | 29 | 181 | 30 | 29 | 211 | 31 | 30 | 243 |
| 31 | 30 | 151 | – | 30 | 182 | 31 | 30 | 212 | – | 31 | 244 |
| – | 31 | 152 | – | – | – | – | 31 | 213 | | | |

## TABLE II

| SEPTEMBER | | | OCTOBER | | | NOVEMBER | | | DECEMBER | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year |
| 1 | – | 244 | 1 | – | 274 | 1 | – | 305 | 1 | – | 335 |
| 2 | 1 | 245 | 2 | 1 | 275 | 2 | 1 | 306 | 2 | 1 | 336 |
| 3 | 2 | 246 | 3 | 2 | 276 | 3 | 2 | 307 | 3 | 2 | 337 |
| 4 | 3 | 247 | 4 | 3 | 277 | 4 | 3 | 308 | 4 | 3 | 338 |
| 5 | 4 | 248 | 5 | 4 | 278 | 5 | 4 | 309 | 5 | 4 | 339 |
| 6 | 5 | 249 | 6 | 5 | 279 | 6 | 5 | 310 | 6 | 5 | 340 |
| 7 | 6 | 250 | 7 | 6 | 280 | 7 | 6 | 311 | 7 | 6 | 341 |
| 8 | 7 | 251 | 8 | 7 | 281 | 8 | 7 | 312 | 8 | 7 | 342 |
| 9 | 8 | 252 | 9 | 8 | 282 | 9 | 8 | 313 | 9 | 8 | 343 |
| 10 | 9 | 253 | 10 | 9 | 283 | 10 | 9 | 314 | 10 | 9 | 344 |
| 11 | 10 | 254 | 11 | 10 | 284 | 11 | 10 | 315 | 11 | 10 | 345 |
| 12 | 11 | 255 | 12 | 11 | 285 | 12 | 11 | 316 | 12 | 11 | 346 |
| 13 | 12 | 256 | 13 | 12 | 286 | 13 | 12 | 317 | 13 | 12 | 347 |
| 14 | 13 | 257 | 14 | 13 | 287 | 14 | 13 | 318 | 14 | 13 | 348 |
| 15 | 14 | 258 | 15 | 14 | 288 | 15 | 14 | 319 | 15 | 14 | 349 |
| 16 | 15 | 259 | 16 | 15 | 289 | 16 | 15 | 320 | 16 | 15 | 350 |
| 17 | 16 | 260 | 17 | 16 | 290 | 17 | 16 | 321 | 17 | 16 | 351 |
| | | | 18 | 17 | 291 | 18 | 17 | 322 | 18 | 17 | 352 |
| | | | 19 | 18 | 292 | 19 | 18 | 323 | 19 | 18 | 353 |
| | | | 20 | 19 | 293 | 20 | 19 | 324 | 20 | 19 | 354 |

# TABLE II

| SEPTEMBER | | | OCTOBER | | | NOVEMBER | | | DECEMBER | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Year | | | Year | | | Year | | | Year | | |
| Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year | Common | Leap | Day of the Year |
| 18 | 17 | 261 | 21 | 20 | 294 | 21 | 20 | 325 | 21 | 20 | 355 |
| 19 | 18 | 262 | 22 | 21 | 295 | 22 | 21 | 326 | 22 | 21 | 356 |
| 20 | 19 | 263 | 23 | 22 | 296 | 23 | 22 | 327 | 23 | 22 | 357 |
| 21 | 20 | 264 | 24 | 23 | 297 | 24 | 23 | 328 | 24 | 23 | 358 |
| 22 | 21 | 265 | 25 | 24 | 298 | 25 | 24 | 329 | 25 | 24 | 359 |
| 23 | 22 | 266 | 26 | 25 | 299 | 26 | 25 | 330 | 26 | 25 | 360 |
| 24 | 23 | 267 | 27 | 26 | 300 | 27 | 26 | 331 | 27 | 26 | 361 |
| 25 | 24 | 268 | 28 | 27 | 301 | 28 | 27 | 332 | 28 | 27 | 362 |
| 26 | 25 | 269 | 29 | 28 | 302 | 29 | 28 | 333 | 29 | 28 | 363 |
| 27 | 26 | 270 | 30 | 29 | 303 | 30 | 29 | 334 | 30 | 29 | 364 |
| 28 | 27 | 271 | 31 | 30 | 304 | — | 30 | 335 | 31 | 30 | 365 |
| 29 | 28 | 272 | — | 31 | 305 | — | — | — | — | 31 | 366 |
| 30 | 29 | 273 | | | | | | | | | |
| — | 30 | 274 | | | | | | | | | |
| — | — | — | | | | | | | | | |

இஸ்லாமிய மாதத்திற்குரிய நாளினையும், ஆண்டினையும் கண்டுபிடிக்கும் வழிமுறை இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## TABLE III

| MUMARIAM | | SAPAR | | RASI I | | RASI II | | JAMADA I | | JAMADA II | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | |
| Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year |
| 1 | 1 | 1 | 31 | 1 | 60 | 1 | 90 | 1 | 119 | 1 | 149 |
| 2 | 2 | 2 | 32 | 2 | 61 | 2 | 91 | 2 | 120 | 2 | 150 |
| 3 | 3 | 3 | 33 | 3 | 62 | 3 | 92 | 3 | 121 | 3 | 151 |
| 4 | 4 | 4 | 34 | 4 | 63 | 4 | 93 | 4 | 122 | 4 | 152 |
| 5 | 5 | 5 | 35 | 5 | 64 | 5 | 94 | 5 | 123 | 5 | 153 |
| 6 | 6 | 6 | 36 | 6 | 65 | 6 | 95 | 6 | 124 | 6 | 154 |
| 7 | 7 | 7 | 37 | 7 | 66 | 7 | 96 | 7 | 125 | 7 | 155 |
| 8 | 8 | 8 | 38 | 8 | 67 | 8 | 97 | 8 | 126 | 8 | 156 |
| 9 | 9 | 9 | 39 | 9 | 68 | 9 | 98 | 9 | 127 | 9 | 157 |
| 10 | 10 | 10 | 40 | 10 | 69 | 10 | 99 | 10 | 128 | 10 | 158 |
| 11 | 11 | 11 | 41 | 11 | 70 | 11 | 100 | 11 | 129 | 11 | 159 |
| 12 | 12 | 12 | 42 | 12 | 71 | 12 | 101 | 12 | 130 | 12 | 160 |
| 13 | 13 | 13 | 43 | 13 | 72 | 13 | 102 | 13 | 131 | 13 | 161 |
| 14 | 14 | 14 | 44 | 14 | 73 | 14 | 103 | 14 | 132 | 14 | 162 |
| 15 | 15 | | | | | | | | | | |

| MUMARIAM | | SAPAR | | RASI I | | RASI II | | JAMADA I | | JAMADA II | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | |
| Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year |
| 16 | 16 | 15 | 45 | 15 | 74 | 15 | 104 | 15 | 133 | 15 | 163 |
| 17 | 17 | 16 | 46 | 16 | 75 | 16 | 105 | 16 | 134 | 16 | 164 |
| 18 | 18 | 17 | 47 | 17 | 76 | 17 | 106 | 17 | 135 | 17 | 165 |
| 19 | 19 | 18 | 48 | 18 | 77 | 18 | 107 | 18 | 136 | 18 | 166 |
| 20 | 20 | 19 | 49 | 19 | 78 | 19 | 108 | 19 | 137 | 19 | 167 |
| 21 | 21 | 20 | 50 | 20 | 79 | 20 | 109 | 20 | 138 | 20 | 168 |
| 22 | 22 | 21 | 51 | 21 | 80 | 21 | 110 | 21 | 139 | 21 | 169 |
| 23 | 23 | 22 | 52 | 22 | 81 | 22 | 111 | 22 | 140 | 22 | 170 |
| 24 | 24 | 23 | 53 | 23 | 82 | 23 | 112 | 23 | 141 | 23 | 171 |
| 25 | 25 | 24 | 54 | 24 | 83 | 24 | 113 | 24 | 142 | 24 | 172 |
| 26 | 26 | 25 | 55 | 25 | 84 | 25 | 114 | 25 | 143 | 25 | 173 |
| 27 | 27 | 26 | 56 | 26 | 85 | 26 | 115 | 26 | 144 | 26 | 174 |
| 28 | 28 | 27 | 57 | 27 | 86 | 27 | 116 | 27 | 145 | 27 | 175 |
| 29 | 29 | 28 | 58 | 28 | 87 | 28 | 117 | 28 | 146 | 28 | 176 |
| 30 | 30 | 29 | 59 | 29 | 88 | 29 | 118 | 29 | 147 | 29 | 177 |
| | | – | – | 30 | 89 | – | – | 30 | 148 | – | – |

# TABLE III

| SAJAS | | SHARAN | | RAMADAN | | SHAWWAL | | ZUL - QA'DA | | ZUL - HIJIA | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | |
| Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth | Year | Mth | Year | Mth. | Year |
| 1 | 178 | 1 | 208 | 1 | 237 | 1 | 267 | 1 | 296 | 1 | 326 |
| 2 | 179 | 2 | 209 | 2 | 238 | 2 | 268 | 2 | 297 | 2 | 327 |
| 3 | 180 | 3 | 210 | 3 | 239 | 3 | 269 | 3 | 298 | 3 | 328 |
| 4 | 181 | 4 | 211 | 4 | 240 | 4 | 270 | 4 | 299 | 4 | 329 |
| 5 | 182 | 5 | 212 | 5 | 241 | 5 | 271 | 5 | 300 | 5 | 330 |
| 6 | 183 | 6 | 213 | 6 | 242 | 6 | 272 | 6 | 301 | 6 | 331 |
| 7 | 184 | 7 | 214 | 7 | 243 | 7 | 273 | 7 | 302 | 7 | 332 |
| 8 | 185 | 8 | 215 | 8 | 244 | 8 | 274 | 8 | 303 | 8 | 333 |
| 9 | 186 | 9 | 216 | 9 | 245 | 9 | 275 | 9 | 304 | 9 | 334 |
| 10 | 187 | 10 | 217 | 10 | 246 | 10 | 276 | 10 | 305 | 10 | 335 |
| 11 | 188 | 11 | 218 | 11 | 247 | 11 | 277 | 11 | 306 | 11 | 336 |
| 12 | 189 | 12 | 219 | 12 | 248 | 12 | 278 | 12 | 307 | 12 | 337 |
| 13 | 190 | 13 | 220 | 13 | 249 | 13 | 279 | 13 | 308 | 13 | 338 |
| 14 | 191 | 14 | 221 | 14 | 250 | 14 | 280 | 14 | 309 | 14 | 339 |
| 15 | 192 | 15 | 222 | 15 | 251 | 15 | 281 | 15 | 310 | 15 | 340 |
| 16 | 193 | 16 | 223 | 16 | 252 | 16 | 282 | 16 | 311 | 16 | 341 |
| 17 | 194 | 17 | 224 | 17 | 253 | 17 | 283 | 17 | 312 | 17 | 342 |

# TABLE III

| SAJAS | | SHARAN | | RAMADAN | | SHAWWAL | | ZUL - QA'DA | | ZUL - HIJIA | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | | Day of the | |
| Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year | Mth. | Year |
| 18 | 195 | 18 | 225 | 18 | 254 | 18 | 284 | 18 | 313 | 18 | 343 |
| 19 | 196 | 19 | 226 | 19 | 255 | 19 | 285 | 19 | 314 | 19 | 344 |
| 20 | 197 | 20 | 227 | 20 | 256 | 20 | 286 | 20 | 315 | 20 | 345 |
| 21 | 198 | 21 | 228 | 21 | 257 | 21 | 287 | 21 | 316 | 21 | 346 |
| 22 | 199 | 22 | 229 | 22 | 258 | 22 | 288 | 22 | 317 | 22 | 347 |
| 23 | 200 | 23 | 230 | 23 | 259 | 23 | 289 | 23 | 318 | 23 | 348 |
| 24 | 201 | 24 | 231 | 24 | 260 | 24 | 290 | 24 | 319 | 24 | 349 |
| 25 | 202 | 25 | 232 | 25 | 261 | 25 | 291 | 25 | 320 | 25 | 350 |
| 26 | 203 | 26 | 233 | 26 | 262 | 26 | 292 | 26 | 321 | 26 | 351 |
| 27 | 204 | 27 | 234 | 27 | 263 | 27 | 293 | 27 | 322 | 27 | 352 |
| 28 | 205 | 28 | 235 | 28 | 264 | 28 | 294 | 28 | 323 | 28 | 353 |
| 29 | 206 | 29 | 236 | 29 | 265 | 29 | 295 | 29 | 324 | 29 | 354 |
| 30 | 207 | – | – | 30 | 266 | – | – | 30 | 325 | – | – |

## சுல்த்தான் அவர்களது பிறப்பு ஹிஜ்ரி 530 ரமலான் பிறை 3-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டு கணிக்கப் பட்ட முறை:

ஹிஜ்ரி 530-க்குச் சமமான கிறிஸ்தவ ஆண்டுக் காலம் அட்டவனை 1-ன் படி அக்டோபர் 1135.

இந்த ஆண்டு கி.பி. 1135 அக்டோபர் 11-வுடன் 283 நாட்களை அட்டவணை 1-ன் படி சேர்க்கவும்.

பிறகு ரமலான்பிறை 3 - ஆம் தேதிக்கு அட்டவணை 3 - இன்படி மொத்தம் 239 நாட்கள் ஆகின்றன.

மேற்கண்ட 283 உடன் 239 நாட்களைச் சேர்த்தால் 283 + 239 = 522 நாட்கள் ஆகின்றன.

இதில் ஓராண்டிற்கான மொத்த நாட்கள் 365-ஐ கழிந்தால் 522 - 365 - 157 நாட்கள் எஞ்சியுள்ளது.

அட்டவணை 2-ன்படி 157 நாட்களுக்குரிய கிறிஸ்தவ ஆண்டுக்காலம் ஜுன் 6-ம் தேதி ஆகும்.

ஏற்கனவே கழிக்கப்பட்ட 365 நாட்களை முன்னர் கண்டுபிடித்த கி.பி. 1135 உடன் சேர்த்தால் கிறிஸ்தவ ஆண்டு கி.பி. 1136 ஆகிறது.

ஆதலால் ஹிஜ்ரி 530 ரமலான் பிறை 3-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் ஜுன் மாதம், 6-ம் தேதி. 1136 ஆகும்.

2) சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் விக்கிரம பாண்டியனைக் கொன்று பவித்திர மாணிக்கப்பட்டிணத்து ஆட்சியைக் கைப்பற்றியது ஹிஜ்ரி 583 துல்காயிதா பிறை 10-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் கணிக்கப்பட்ட முறை:

ஹிஜ்ரி 583 -க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் அட்டவணை 1-ன்படி மார்ச் 13, 1187 ஆகும். இந்தக் காலத்துடன் 71 நாட்களைக் அட்டவணை 1-இன் படி சேர்க்கவும்.

பிறகு துல்கயிதா பிறை 10-க்கு அட்டவணை 3-இன் படி மொத்தம் 305 நாட்கள் ஆகின்றன.

மேற்கண்ட 71 நாட்களுடன் 305 நாட்களைச் சேர்த்தால் 71 + 305 = 376 நாட்கள், இதில் ஓராண்டிற்கான 365 நாட்களை கழித்தால் 376 - 365 = 11 நாட்கள் எஞ்சியுள்ளன.

அட்டவணை 2-ன்படி 11 நாட்களுக்குரிய கிறிஸ்தவ ஆண்டுக்காலம் ஜனவரி 11-ம் தேதி ஆகும்.

ஏற்கனவே கழிக்கப்பட்ட 365 நாட்களை கி.பி. 1187 உடன் சேர்த்தால் 1187 + 1 = 1188 என்ற கிறிஸ்தவ ஆண்டு ஆகின்றன.

ஆதலால் ஹிஜ்ரி 583, துல்கயிதா பிறை 10-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் ஜனவரி மாதம், 11-ம் தேதி, 1188 ஆகும்.

3) சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் பௌத்திர மாணிக்கப்பட்டிணப் போரில் பாண்டியனுடன் பொருதி வீரமரணம் எய்திய ஹிஜ்ரி 594 துல்கயிதா பிறை 23-க்கு சரியான கிறிஸ்தவ ஆண்டு காலம் கணக்கிடப்பட்ட முறை

ஹிஜ்ரி 594-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் அட்டவணை 1 - இன் படி நவம்பர் 13, 1197 ஆகும். இந்தக் காலத்துடன் 316 நாட்களை அட்டவணை 1 - இன் படி சேர்க்கவும். பிறகு துல்கயிதா பிறை 23-க்கு அட்டவணை 3 - இன் படி மொத்தம் 318 நாட்கள் ஆகின்றன.

மேற்கண்ட 316 நாட்களுடன் 318 நாட்களைச் சேர்த்தால் 316 + 318 = 634 நாட்கள் ஆகின்றன.

இதில் ஒராண்டிற்கான 365 நாட்களைக் கழித்தால் 634 - 365 = 269 நாட்கள் எஞ்சியுள்ளன.

அட்டவணை 2-ன்படி 269 நாட்களுக்குரிய கிறிஸ்தவ ஆண்டுக்காலம் செப்டம்பர் 26-ம் தேதி ஆகும்.

ஏற்கனவே கழிக்கப்பட்ட 365 நாட்களை கி.பி. 1197 உடன் சேர்த்தால் 1197 + 1 = 1198 என்ற கிறிஸ்தவ ஆண்டு ஆகும்.

ஆதலால் ஹிஜ்ரி 594, துல்கயிதா பிறை 23-க்குச் சரியான கிறிஸ்தவ ஆண்டுக்காலம் செப்படம்பர் மாதம் 26 - ஆம் தேதி, 1198 ஆகும்.

இந்த விளக்கங்களின்படி சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கான ஹிஜ்ரி ஆண்டு முறையைக் கணித்துக் கொள்வதில் எவ்வித இடர்பாடும் இருக்காது. காரணம் இந்த முறை இறுதியாக வானியல் வல்லுநர்களால் கி.பி. 1984-ல் வகுக்கப்பட்டது ஆகும்.

இந்த உண்மையான ஹிஜ்ரி ஆண்டிற்கு ஏற்ற கிறிஸ்தவ ஆண்டினை புறக்கணித்து விட்டு, கி.பி. 1984-ல் வெளியிடப்பட்ட தீனெறி விளக்க நூலின் பதிப்பாசிரியர் ஆய்வுரை என்ற தலைப்பில் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் என ஒரு பட்டியலைக் கொடுத்துள்ளார். சம்மந்தப்பட்ட ஹிஜ்ரி ஆண்டுகளுக்கு ஏற்புடையதான ஆங்கில ஆண்டு, திங்கள், நாள் உடன் வெளியிட்டுள்ளார். இந்த தீன் விளக்கக் காப்பியத்தில். அதனை இயற்றிய ஆசிரியர் மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் எந்த நிகழ்ச்சிக்கும் உரியதான ஹிஜ்ரி ஆண்டுகளைத் தமது நூலில் குறிப்பிடவில்லை. இந்நிலையில் இந்நூலின் பதிப்பாசிரியர் அந்த ஹிஜ்ரி ஆண்டுகளுக்குரியதாக ஆங்கில ஆண்டு, திங்கள், நாள் ஆகியவைகளை எந்த அடிப்படையில் கணக்கிட்டுக் கொடுத்துள்ளார் என்பது தெரியவில்லை.

# இயல் - 14

## நிறைவு வரிகள்

சுல்த்தான் செய்யிது இபுராகிம் அவர்களது வாழ்க்கை வரலாற்றினை அறிவிக்கின்ற இஸ்லாமிய நூல்களில் இன்னொரு முக்கியச் செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுல்த்தான் அவர்கள் பௌத்திர மாணிக்கப்பட்டிணப் போரில் பாண்டியருடன் ஏற்பட்ட வாள் சண்டையில் ஷகீதானார்கள் என்பதும் அவர்களை எதிர்த்துக் கொன்ற பாண்டியனும் போரில் ஏற்பட்ட பலத்த காயங்களினால் பின்னர் இறந்து விட்டான் என்பதும் அவனது வழித் தோன்றலான சமர கோலாகல பாண்டியன் ஷகீது அவர்களது குடும்பத்தினரை மிக்க மரியாதையுடன் நடத்தி இன்றைய ஏர்வாடிப் பகுதியை ஆட்சி செய்யவும் அனுமதித்தான் என்பதும் ஆகும். ஷகீது அவர்களது இரண்டாவது குமாரரான முகம்மது இஸ்காக்கும் அவரது வழியினரும் ஹிஜ்ரி 594-லிருந்து ஹிஜ்ரி 673 வரை அந்தப் பகுதியில் இருந்து வந்தனர். அவர்களின் இளவல் செய்யது அகமது காலத்தில் கடல்பெருக்கு ஏற்பட்டு ஏர்வாடிப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்தது. இதன் காரணமாக செய்யது அகமதுவும் அவரது குடும்பத்தினரும் மதுரை மாநகருக்கு மேற்கேயுள்ள கணவாய் என்ற கிராமத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர்.

சுல்த்தான் அவர்களைப் பௌத்திர மாணிக்கப் போரில் கொன்ற சடையவர்மன் குலசேகர பாண்டியனுக்குப் (கி.பி. 1190 - 1218)

பிறகு பட்டத்திற்கு வந்த சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சியின் பொழுது இந்தக் குடும்பத்தினர் மீண்டும் ஏர்வாடிப் பகுதிக்கு வந்து நிலையாகத் தங்கினர். அவர்களில் குறிப்பிடத் தக்கவர் முருசல் இபுராஹிம் என்பவராவார். இவர் சுல்த்தான் செய்யது இபுராகிம் ஷகீது அவர்களது அடக்கவிடத்தை மறு அமைப்புச் செய்தார் என ஷகீது சரிதை நூல் தெரிவிக்கிறது.

மேலேகண்ட இஸ்லாமிய வரலாற்றுச் செய்திகளின் படி ஏர்வாடிப் பகுதியை ஷகீது அவர்களது வழித் தோன்றல்கள் ஹிஜ்ரி 594 முதல் 673 வரை (கி.பி. 1198 முதல் - கி.பி. 1278 வரை) ஆட்சி செய்தனர் என்பதற்குத் தமிழக வரலாற்றில் எவ்வித ஆதாரமும் காணப்படவில்லை. மேலும் இந்தக் குடும்பத்தினர் ஹிஜ்ரி 673-ல் மதுரையை அடுத்த கணவாய் கிராமத்திலும் பின்னர் சேதுநாட்டின் வடபுறத்தில் உள்ள கிளியூரிலும் சென்று தங்குவதற்கு உரிய சிறப்பான காரணங்கள் எவை என்பதும் அறிந்து கொள்ளத் தக்கதாக இல்லை. இதற்கான ஆவணங்களும் தற்பொழுதைய ஏர்வாடி தர்ஹா நிர்வாக அலுவலகத்தில் இல்லை.

மற்றுமொரு குழப்பமான செய்தி ஷகீது சரிதையில் ஏர்வாடி தர்ஹா செரீபை முருசல் இபுராஹிம் அவரது குமாரர் நல்ல இபுராஹிமும் அமைத்தார் என்ற செய்தி காணப்படுகிறது. கி.பி. 1742-ல் இராமநாதபுரம் மன்னர் குமாரமுத்து விஜயரெகுநாத சேதுபதி ஏர்வாடிப் பள்ளிவாசலுக்கு வழங்கிய செப்புப் பட்டையத்தில் நல்ல இபுராகிம் என்று தர்ஹா நிர்வாகியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சடையவர்மன் சுந்தர பாண்டியனது ஆட்சி யில் (கி.பி. 1216 - 1232) முருசல் இபுராஹிம் கணவாய் கிராமத்தி லிருந்து கிளியூர் கிராமத்திற்கும் பின்னர் ஏர்வாடிக்கும் குடிபெயர்ந் துள்ளார் என்றும் அவரது குமாரர் நல்ல இபுராஹிம் என்றும் தெரிய வருகிறது. இந்தச் செய்தியும் வரலாற்றிற்கு பொருத்தமானதாகக் காணப்படவில்லை. அதாவது சடையவர்மன் சுந்தரபாண்டியனது

ஆட்சிக்காலமான கி.பி. 1216-க்கும் செப்புப் பட்டைய காலமான கி.பி. 1742-க்கும் இடையே பெருத்த கால வேறுபாடு உள்ளது.

மொத்தத்தில் சுல்த்தான் அவர்களது வாழ்க்கையை விவரிக்கும் இஸ்லாமிய வரலாற்று நூல்களுக்கும் இடையில் கால வேறுபாடு மிகுதியாக அமைந்து சுல்த்தான் அவர்களது சிறப்பான வாழ்க்கை யினைத் தெளிவாக அறிந்து கொள்ளுவதற்குத் தடையாக உள்ளன. அரபி மொழியில் உள்ள சுல்த்தான் அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை வரலாற்று ஆய்வாளர்கள் வெளிப் படுத்தினால், ஷஹீது அவர்களது வரலாறும் தமிழக வரலாறும் பயன்பெறும்.

❖

# இயல் - 15

## சுல்த்தான் செய்யது இபுராகிம் (ஷகீது) அவர்களைப் பற்றிய இலக்கியங்கள்

### 1) ஷஹாதத் நாமா:

பாரசீக மொழியில் வரையப்பட்டுள்ள நூல், இதன் ஆசிரியர் அப்பாஸ் பின் அப்துல்லா என்பவர். இந்த நூல் வரையப்பெற்ற அல்லது வெளியிடப்பட்ட ஆண்டு எது எனத் தெரியவில்லை. பெரும்பாலும் கி.பி. 15 - ஆம் நூற்றாண்டில் வரையப் பெற்றிருக் கலாம் என ஊகிக்கப்படுகிறது. இந்த நூலின் ஆசிரியர் நமது நாட்டிற்கோ அல்லது நமது நாட்டின் தென்பகுதியான பாண்டிய நாட்டிற்கோ நேரில் வந்ததாகச் செய்திகள் இல்லை. என்றாலும் அப்பொழுது பாண்டிய நாட்டிற்கும் அரபி, பாரசீக நாடுகளுக்கு மிடையே குதிரை வாணிபம் மும்முரமாக நடந்து வந்த பொழுது இங்கிருந்து திரும்பிய குதிரை, வணிகர் ஒருவர் அளித்த விவரங் களைக் கொண்டு இந்த நூல் தொகுக்கப் பெற்றுள்ளது.

ஆதலால் இந்த நூலில் பாண்டிய நாட்டு வரலாற்றுக்கு முரணான செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. குறிப்பாகச் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் பாண்டிய நாடு வந்த பொழுது இங்கு

ஆட்சியிலிருந்த பாண்டியரது பெயர்கள், அவர்களுடன் சுல்த்தான் போரிட்ட விபரம், அவர்களை அழித்துப் பத்தாண்டுகளுக்கு மேலாக பாண்டிய நாட்டின் ஷரிஅத் ஆட்சி நடைபெற்ற விபரங்கள் எல்லாம் பாண்டிய நாட்டு வரலாற்றில் இடம் பெறவில்லை. ஆனால் இந்த நூல் இஸ்லாமியரது ஹிஜ்ரி ஆண்டினை ஒட்டி எழுதப் பெற்றிருப்பதால், அந்த ஆண்டுகளுக்கு நேரான கிறிஸ்தவ ஆண்டினைக் கண்டுபிடித்து நிகழ்ச்சிகளைச் சரிபார்க்க வேண்டிய கட்டாயம் எற்பட்டுள்ளது.

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கையினை விவரிக்கும் பழைய நூலாக இருப்பதால் இந்த நூல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

## 2) ஏர்வாடி அம்மானை:

தமிழில் வரையப் பெற்ற சுல்தான் செய்யது இபுராகிம் பற்றிய பழமையான நூல் இது ஒன்றே ஆகும். இந்த நூலின் அடிப்படை யிலேயே பிற்காலத்தில். கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அம்மானையாக இருந்ததை பாடுவதாக ''புலவர் வண்ணக் களஞ்சியம்'' அவர்கள் தமது நூலாகிய ''தீனெறி விளக்கத்தின்'' தொடக்கத்தில் வரைந்துள்ளார். தமிழ் இலக்கியங்களில் அம்மானை என்ற சிற்றிலக்கியங்கள் கி.பி. 16 - ஆம் நூற்றாண்டு முதல் தொடக்கம் பெற்றிருப்பதால் இந்த நூலும் கி.பி. 16, 17 - ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டு இருத்தல் வேண்டும்.

இந்த நூல் இதுவரை அச்சில் வெளியிடப்படவில்லை. ஏட்டுச் சுவடிகளாக இருந்த இந்த நூலினை கி.பி. 1981- இல் மதுரையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி அச்சிடு வதற்காகத் தமிழ்நாடு தொல் பொருள் துறையினர், ஏர்வாடியி லிருந்து பெற்றுச் சென்றார்கள். இந்த நூலும் இதுவரை அந்தத் துறையினரால் வெளியிடப்படவில்லை. சுவடிகளும் என்ன வாயிற்று என்பதை அவர்களால் தெரிவிக்க முடியவில்லை.

## 3) ஏர்வாடிப் படைப்போர்:

தமிழில் வெளிவந்துள்ள சுல்த்தான் ஷஹீதைப் பற்றிய சிற்றிலக்கியங்களில் இது இரண்டாவது ஆகும். இதன் ஆசிரியர், இயற்றப்பட்ட காலம் ஆகிய விவரங்கள் கிடைக்கவில்லை.

சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்கள் பாண்டியருடன் பொருதிய இரண்டு போர் நிகழ்ச்சிகளை விவரிக்கும் சிறிய நூலாகும். இந்த நூலின் சுவடிகளும் இப்பொழுது கிடைக்கவில்லை.

## 4) தீன்னெறி விளக்கம்:

இந்த நூலின் ஆசிரியர் ஏர்வாடிக்கு அண்மையிலுள்ள மீசல் கிராமத்தைச் சேர்ந்தவராவார். இவரது இயற்பெயர் முஹம்மது இஸ்ஹாக் என்பதாகும். இளமையிலேயே மதுரை சென்று மடாதிபதி ஒருவரிடம் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தவர். பொருட்செறிவும், இன்னிசைச் சந்தமும் நிரம்பிய வண்ணப் பாடல்களை எளிதில் இயற்றிப் பாடும் தகுதி பெற்றிருந்த தால் இவரை மக்கள் வண்ணக் களஞ்சியப் புலவர் என வழங்கி வந்தனர். 1714 விருத்தப் பாக்களைக் கொண்ட இவரது இந்த நூல் சுல்தான் செய்யது இபுராஹிமின் பாரம்பரியம், பிறப்பு, வளர்ப்பு சமயத்தொண்டு பாண்டிய நாட்டிற்கு வந்தது. தமது பிரச்சாரத்திற்கு இடையூறாக இருந்த பாண்டியருடன் பத்து நாட்கள் போரிட்டு அவனைக் கொன்று அவனது ஆட்சியைக் கைப்பற்றியது, பத்தாண்டுகளுக்கு மேலாக பாண்டிய நாட்டில் ஷரிஅத் ஆட்சியை நடத்தியது, இரண்டாவது போரில் வீரமரணம் எய்தியது. அவரது தியாக தலத்தில் எழுந்த தர்ஹாவிற்கு சேதுபதி மன்னர் மாயாகுளம் என்ற கிராமத்தை சர்வமானியமாக வழங்கியது ஆகிய விவரங்களைத் தெரிவிக்கும் வரலாற்று இலக்கியமாகும்.

தமிழில் மூன்று காப்பியங்களைப் பாடிய புலவர்களில் இவர் இரண்டாமவர் ஆகும். கி.பி. 1807 - இல் இராஜநாயகம் என்ற

காப்பியத்தையும், கி.பி 1814-ல் குத்புநாயகம் என்ற காப்பியத்தையும், கி.பி. 1821-ல் இந்த தீனெறி விளக்கத்தையும் இவர் பாடியுள்ளார். இவர் சில காலம் நாகூரிலும் அதனை அடுத்த பொறையாரிலும் வாழ்ந்து வந்தார் என்பதும், நாகூர் தர்ஹாவின் ஆஸ்தான கவிஞராக இருந்து வந்தார் என்பதும் அவரைப் பற்றிய செய்திகள் ஆகும். இவரது கடைசிக் காலத்தில் ஒருநாள் தொண்டி நகர் சென்றுவிட்டு பல்லக்கில் திரும்பி வரும் பொழுது இராஜசிங்க மங்கலத்தை ஒட்டிய தும்படைக்கா கோட்டை என்ற சிற்றூரில் காலமானார். அவரது அடக்கவிடம் அங்கே அமைந்துள்ளது. அந்த இடம் இப்பொழுது இருதயபுரம் என அழைக்கப்படுகிறது.

## 5) தீன் விளக்கச் சந்தமாலை:

இந்தச் சிற்றிலக்கியம் இளையாங்குடி கிராமத்தைச் சேர்ந்த சீனி ஆபில் புலவர் என்பவரால் இயற்றப் பெற்று வெளிவந்துள்ளது. கி.பி. 19 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நூலும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை என்பது வேதனைப்படத்தக்க செய்தியாகும்.

## 6) ஏர்வாடி ஏந்தல்

ஏர்வாடி சுல்த்தான் செய்யிது இபுராகிம் பற்றி இயற்றப்பட்ட கவிதை நூல் இது. தீன் விளக்க சந்தமாலை ஆகிய இலக்கியத்திற்கு நூறாண்டுகற்குப்பிறகு வெளி வந்துள்ள இலக்கிய நூலாகும். அந்தாதி இலக்கிய வகையைச் சேர்ந்தது. இதன் ஆசிரியர் அதிராம் பட்டிணத்தைச் சேர்ந்த அருட்கவி முஹம்மது தாஹா என்பவராவார். கி.பி. 2001ல் அந்தாதித் தொடையாக நூறு கவிதைகளைக் கொண்டது.

## 7) ஷகீது சரிதை:

1952ல் தமிழில் வெளிவந்துள்ள ஷகீது பற்றிய முதலாவது தமிழ் உரைநடை நூலாகும். இதனை வரைந்து வெளியிட்டவர்

ஏர்வாடி தர்ஹாவில் டிரஸ்டியாக இருந்த மு.வா. முஹம்மது இப்ராஹிம் லெப்பை ஆவார். ஏற்கனவே ஏர்வாடி சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள நூல்களில் ஷகாதத் நாமாவின் செய்திகளை உள்ளடக்கியது ஆகும். சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளின் தொகுப்பாக உள்ளது. அன்னாரது பிறப்பு, தமிழகத்திற்கு வந்தது, ஷகீதானது ஆகிய விவரங்களையெல்லாம் இஸ்லாமிய ஹிஜ்ரி ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நூலினையே பின்பற்றி பிற்காலத்தில் பல உரைநடை நூல்கள் வெளிவந்துள்ளன. அவைகளில் புதுமையான செய்தி எதுவும் இல்லை.

## 8) ஏர்வாடி சுல்த்தான் செய்யது இப்ராஹிம் ஷகீது மௌலீது

ஏர்வாடி ஷகீது அவர்களைப் பற்றி அரபு மொழியில் இயற்றப்பட்டுள்ள ஒரே நூலாகும் இது. இதன் ஆசிரியர் கீழக்கரை அரூஸியா மத்ரஸாவைச் சேர்ந்த மௌலவி செய்யது அஹமது ஆலிம் லெப்பை அவர்கள். இதன் காலம் ஹிஜிரி 1252.

ஷகீது அவர்களைப் பற்றிய பரம்பரை, பிறப்பு, கல்வி, சமயப்பணி தமிழக வருகை, ஏர்வாடியில் தியாகியானது வரையுள்ள வாழ்வின் நிகழ்வுகளை இந்த நூல் 13 அத்தியாயங் களில் (ஹிகாயத்) விவரமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர் இந்த நூலினை இயற்றுவதற்குப் பல பாரசீக மொழி நூல்களையும், காயல்பட்டிணம் உரைசு ஆலிம் அவர்களது ரவ்ளிற்றயாஹீன் என்ற நூலையும், ஏர்வாடி அம்மானை, ஏர்வாடி படைப்போர் ஆகிய தமிழ் நூல்களையும் மற்றும் அப்பொழுது வழங்கிய பல செவிவழிச் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு இயற்றியுள்ளார்.

இந்த நூலில் காணப்படும் சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது பிறப்பு மற்றும் அவர்கள் தமிழகம் வந்தது போன்ற செய்திகளில் பல முரண்பாடுகள் இருப்பது தெரிய வருகிறது. எடுத்துக்காட்டாக சுல்த்தான் செய்யது இபுராகிம் அவர்களது பிறப்பு

ஹிஜ்ரி 541 என்றும் தமிழ் நாட்டிற்கு புறப்பட்டது ஹிஜ்ரி 581 என்றும், அவர் வீரமரணம் அடைந்தது ஹிஜ்ரி 596 என்ற விவரங்களைக் குறிப்பிட்டு அன்னாரது வரலாற்றில் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் இந்த அரபி இலக்கியம் சில புதிய செய்திகளையும் அறிவிப்பதாக உள்ளது.

1) சுல்த்தான் செய்யது இபுராகிம், அவர்களது கலீபா அலி அவர்களது தொடக்கம் முதல் வழியினர் யார் யார் என்பதும் அவர்களது பெயர்கள் எவை என்பதும் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

2) பாண்டிய நாட்டிற்குப் புறப்படும் பணிக்கு அப்பொழுது ரோமாபுரியில் ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர் மஹ்முத் என்பவர் படை உதவி செய்த விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

3) சுல்த்தான் அவர்கள் பாண்டிய நாடு புறப்படும் பொழுது அவரைத் தொடர்ந்த அவரது குடும்பத்தினர் பெண்கள் உட்பட 174 பேர்களைப் பற்றிய விபரங்களையும் கொடுக்கப்பட்டுள்ளது.

4) காயல்பட்டிணத்தில் சுல்த்தான் அவர்கள் தங்கிய விவரம் இல்லை. மேலாக மத்ஹர் (மதுரை) சென்று பாண்டியனுடன் போரிட்டதாகவும், பின்னர் அவனை வெற்றி கொண்டு அங்கேயே ஆட்சி செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) மேலும் சுல்த்தான் அவர்களைப் பாண்டியன் பௌத்திர மாணிக்கப்பட்டிணத்தில் வெற்றி கொண்டதாகக் குறிப்புகள் ஏதும் இல்லை.

**9) அரபி மொழியில் சுல்த்தான் அவர்கள்மீது இயற்றப்பட்ட கவிதைகள். (கசீதாக்கள்)**

1. கீழக்கரை டவுன் காஜி மக்தூம் பஹாவுத்தீன்.
2. கீழக்கரை டவுன் காஜி ஷெய்கு அப்துல்லாஹ்

❖

# புகழ்மணக்கவி

ZZ

அல்ஹம்து லிமன் அஸ்ஸவமன்ஜல்ல ஜலாலா
லாயுஸ்லிஹு இல்லா லித்த ஆலீஹி தஆலா

ZZ

1 அல்ஹம்து லிமன் அஸ்ஸமவன் ஜல்ல ஹுவல்லாஹ்
அஃலா சலவாத்தின் வஸலாமின் வி மு அல்லா

B

ஆத்தீ பிஹுதல்லாஹி ஹுவல் ஹாதி இலல்லாஹ்
அஸ்னா ருஸ்லில்லாஹி முஹம்மது

B

நபிய்யுல்லாஹ்

2. ஒப்புவமை இணையுமில்லா இறைவனே அல்லாஹ்
ஓங்கும் புகழத்தனைக்கும் அருகனே அல்லாஹ்
ஓதுவோம் உன் இன்பப்புகழ் நித்தமும் அல்லாஹ்
உனதருளாலுயர்ந்த எங்கள் உயர் குத்புல்லாஹ்

3 அகிலமெல்லாம் ஆண்டருளும் ஆதியே அல்லாஹ்
அகங்களிலே ஒளிபொழியும் ஜோதியே அல்லாஹ்
அணைத்தருள்வாய் அன்புதந்து நித்தமும் அல்லாஹ்
ஆவலுடன் வேண்டுகிறோம் உன்னிடம் அல்லாஹ்

4 பெருமுயற் சலவாத்து ஸலாம் நித்தமும் சொல்வோம்
பேரொளி நபிமீதிலுயர் பெறுமிதம் கொள்வோம்
பெருமைமிகும் கிளைகளுக்கும் பொருந்தியே
சொல்வோம்
பெருந்தகை யுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

5 வளமளிக்கும் நெஞ்சுகளுக் குயர் நபிநேசம்
வாழ்த்து மெங்கள் வாய்களுக்கு வாய்க்குமே வாசம்
வாய்மைமிகும் அவர்களுயர் குலப்பிரகாசம்
வான்புகழுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

6 மாட்சிமை மிகும் நபிகுலத்தில் தோன்றிய செல்வர்
மாதவமுயர் ஸய்யிதஹ்மத் ஒலிதவப் புதல்வர்
மாமதிபோ லுதித்த மகா மகத்துவத் தலைவர்
மாமணியாம் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

7 சாந்தமிகும் இவர்களின் தாய் சற்குணவதியாம்

F

ஸய்யிதத்து பாத்திமா உயர் மாதர்கள் மதியாம்
சந்ததமும் தந்துதவும் சத்திய நிதியாம்
ஸய்யிதுனா ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

8 எங்கள் நபீ நாயகத்தின் பௌத்திர ரானோர்
ஏற்றமுள்ள குணம் பொதிந்து எழிலுருவானோர்
எங்கும் புகழ் பொங்கும் மகாமங்களமானோர்
எங்களுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

9 இழிச்செயல்கள் புரிந்த இனத்தார் களைத்திருத்தி
இன்புயர் இஸ்லாமிய உயர் நல்வழிப்படுத்தி
இதயங்களை இறைநினைவில் ஒளிபெற யுணர்த்தி
இடரொழித்த ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

10 நல்லதொருப் பணிதனிலே நாட்களைக் கழித்து
நாத்திகர் இணை வைத்தவர்கள் கொள்கையை
யொழித்து
நலம் புரிந்த நாயகத்தால் நன்னெறி செழித்து
வளமுற்றதாம் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

11 நேசமுடன் கரம் பிடித்து நேர்வழி காட்டி
நேரமெல்லாம் இறை நினைவின் இன்பமுதூட்டி
நேர்மையுடன் ஆண்ட மகா அரசுயர் நாட்டி
நேயமுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

12 மாமுயர் சன்மார்க்கமதை வளம் பெறச்செய்தோர்
மாந்தர்களை இறை வழியில் மாண்புறச் செய்தோர்
மாநபியின் குணங்களினால் மணம்
பொதிந்துயர்ந்தோர்
மாண்மிய முயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

13 வான் மழைபோல் ஞானமிர்தத் தேன்மழை பொழிந்து
வாசமிகும் பண்புகளால் பூ மணம் பொழிந்து
வாழ்ந்த மகானின் வரவால் வையக மகிழ்ந்து
வாழ்த்து மெங்கள் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

14 சீர்பெருகிய சிறப்பிடமாய்ச் சிறந்த குணாளர்
சித்தமதில் உத்தமராய் தெளிந்த தயாளர்
சிந்தை தனில் நட்புயர்ந்த நற்செயலாளர்
சிறப்புகளுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

15 இறை நினைவில் இவர்கள் நிதம் இன்பமடைந்து
இருள் படர்ந்த இதயங்களில் இறையொளி சொரிந்து
இட்டமுடன் இறைவழியில் இன்னுயிர் துறந்து
இடமுயர்ந்த ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

16 ஏர்வாடி ஒலிநாயக மென்றேற்றி புகழ்வோம்
ஏங்கி வரும் மாந்தர்களின் ஏந்தலைப் புகழ்வோம்
ஏற்றமிகும் நல்வரம் யாம் பெற்று மகிழ்வோம்
மின் ஹள்ரத்திஹி ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

17 அன்பு நிறைந்தோர்களுக்கு அண்ணலின் வாசம்
அரும் மருந்தாம் பிணிகளுக்கு மிகப்பிரமாதம்

அனுதினமும் அண்ண லிடம் அருட்பிரசாதம்
அற்புத முயற் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்
குத்பு ஷஹீத் நாயகத்தின் குணமுயர் மனைவி

F

ஸய்யிதத்து அலி பாத்திமா

Z B

ஸைனபு துணைவி
சகோதரி உயர் ஸய்யிதத்து

B

ராபிஆச் செல்வி

சங்கை மிகும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்
செல்வமிகும் இவர்களினுயர் சிரேஷ்டப் புதல்வர்
ஸய்யிதபு தாஹிர் ஒலியுல்லாஹ ஜெயசீலர்
செவிக்கினிய பேருரைகள் நிகழ்த்தி இச்செல்வர்
செயல் புரிந்த ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்
ஷைகு ஷஹீத் நாயகத்தின் கனிஷ்ட குமாரர்

Z B

ஸய்யிது ஜைனுல் ஆபிதீன நற்குண நாதர்
சத்திய சன்மார்க்க வழி காட்டிய சீலர்
சத்குருவாம் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

21 அண்ணலுக் குயர் மந்திரியாய் யமைந்த அமைச்சர்

B B

அப்பாஸு ஒலி ஸய்யிதுனா அருங்குண நேசர்
அகம் தெளிந்து முகமலர்ந்த அருட்பிரகாசர்
அஷ்ஷைகு ஹுவஸ் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

22 பேரரசர் இவர்களின் துணை மந்திரி ஸய்யித்
முஹ்யித் தீன் ஒலியும் உதவிதுணை மந்திரி ஸைய்யித்

Q

காதிரி சாஹிப் ஒலியாம் சாஹிபு ஸய்யித்
காட்சிகள் மிகும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

23 ஷைகு ஷஹீத் ஸய்யிதுக்கொரு மருத்துவ அதிபர்
ஸய்யிதுனா அப்துல் ஹக்கீம் சாஹிபு மகிபர்
சத்பெரும் சஞ்சீவிகளை வழங்கிய நண்பர்
சாந்தமுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

24 மாவீரர் அப்துல்லாஹி முஜாஹிது வ ஷஹீது
மாண்பு மிகும் சந்தனப்பீர் மகிபர் ஷஹீது
மண்ணுலகில் நற்பணிகள் புரிந்த ரஷீது
மகிமையுள்ள ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

25 அண்ணல் அப்துல் காதிரி ஜீலானி ஷஹீது
அறிஞர் அப்துல் காதிரி சமதானி ஷஹீது

B

அருங்குண பல்கீஹூ அம்மா அருங்கொண்ட ஈந்து
அகமகிழ்ந்தார் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

26 இறை நேசர்களாம் ஸய்யிதிஸ்மாயீ லுயர் ஸய்யித்

Z

இஸ்ஹாக்கு வ ஜைனுல் ஆபிதீன்

B

பாக்கிரு ஸய்யித்

இதயங்களுயர் ஸாதத்துனா ஸய்யிது அஹ்மத்
இவர்களுக்குயிர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

27 நீதமுயர் ஷம்சுத்தீன் மக்கீ வ முஜாஹிர்
நிறைமணிகள் ஸய்யித் ஹுஸைன் ஸய்யிது தாஹிர்
இறைநேசர் முஹ்யித் தீன்மகிபர் நற்கலை மாஹிர்
மறை போதகராம் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

28 சாந்தமிகும் நாயகிகள்

Z B F

ஜைனபு சப்ரா

F

ஸய்யிதத்து பாத்திமா உயர் ஸய்யிதா ஸாரா
சந்ததமும் இவர்களுக்கு

B

சோபனம் புஷ்ரா
சன்மார்க்க ஒளி ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

29 அன்புடையோர் ஸய்யித்ஹுசைன் அருங்குண மருவி
அகம் தெளிந்து பண்புயர்ந்த

B

அமீருல் பத்வி

F

அறிவுமிகும் மேதை பக்கீர் அப்பா நலம் மேவி
அருள் சுரக்கும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

30 சுபசோபன ஷுஹதாக்களுயர் கப்ர்களை தாங்கி
சோபிக்கும் ஏர்வாடி அதன் மகிமையுமோங்கி
சொந்தமுடன் மாந்தர்கள் பால் நல்வரம் பொங்கி
சுபமருளும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

31 காடுமலை கரைகடலை கடந்து வந்தோர்கள்
கண்குளிர மக்களுக்கு காட்சி தந்தோர்கள்
காரிருளை நீக்கி உயர் ஒளி பொழிந்தோர்கள்
காருண்ய முயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

32 ஊணுரக்கம் உடல் சுகத்தை வெறுத் தொழித்தோர்கள்
ஊனுலக ஆசைதனை அறுத் தெறிந்தோர்கள்
உண்மை இறை பக்தியினால் உயர்வடைந்தோர்கள்
உன்னத முயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

33 உயர் மார்கப் பிரச்சாரத்தி லுற்சாகம் கொண்டோர்கள்
உண்மை இறை ஒருவன் என்று உணர்த்தி வந்தோர்கள்
உத்தமத் திரு நபிமணியை தொடர்ந் துயர்ந்தோர்கள்
உள்ளன்புமிகும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

34 ஆற்றல் மிகும் அரும்பணியில் ஆர்வம் கொண்டோர்கள்
ஏற்றமுள்ள பண்புகளால் எழில் மிகுந்தோர்கள்
இறை ஒருவன் ஏகனென்று எடுத்துரைத்தோர்கள்
எட்டிசையும் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

35 போர்களத்தில் வீரர்களாய் சமர் புரிந்தோர்கள்
போற்றதக்க வெற்றிகளை பெற்றுயர்ந்தோர்கள்
பொன்னுடல்களை இறைவழியில் அற்பணித்தோர்கள்
பொற்குண முயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

36 குவலய மாந்தர்க் குதவும்

B

உயர்குத் புல்லாஹ் குணங்களுயர் நல்ஷுஹதாக்கள்

# Z B

ஹிஸ்புல்லாஹ்

கூடி புகழ்பாடி மகிழ்வோம் அஹ்லுல்லாஹ்
கொள்கை யுயர் ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

37 அனைத்துலகம் உயர்ந்திலங்க அருள்மறை கூறும்
அற்புதமாம் அழகிய உயர் நெறிகளே போதும்
அதன் வழியில் மாந்தர்களை அழைத்து எப்போதும்
அகமகிழ்ந்த ஸய்யிதிப்ராஹீம் குத்புல்லாஹ்

38 அருள்மயமாய் வந்த எங்கள் உயர் நபியுல்லாஹ்
அன்புடனெமை அணைத்தருள அருளுவாய் அல்லாஹ்
அண்ணலை யாம் பின் தொடரச் செய்தருள் அல்லாஹ்
அன்னவர்கள் கூட்டங்களுடன் இணைத்தருள் அல்லாஹ்

39 மாமதுரத் தேனமுதாம் உன் நினைவின்பம்
மாண்புயர் உன் தோத்திரத்தால் ஒழிந்திடும் துன்பம்
மாற்றமில்லா மனங்களினுள் நீ ஒளி பிம்பம்
மாநபியின் கூட்டங்க ளெமை காத்தருள் அல்லாஹ்

40 இணைதுணை இல்லா இறைவா இடரொழிப்பாய் நீ
இருளகற்றி இதயங்களில் இடம்பெறுவாய் நீ
இன்பமுயர் உனதருளை ஈந்தருள்வாய் நீ
இட்டமுடன் வேண்டுகிறோம் உன்னிடம் அல்லாஹ்

41 பாசமிகும் பாத்திப னுயர் பரம்பொருளாம் நீ
பயபக்தியுடன் உன் நினைவில் உயர்த்திடுவாய் நீ
பாக்யமுயர் பலன்களை எமக் கீந்தருள்வாய் நீ
பாசமுடன் அணைத்தருளும் பரமனே அல்லாஹ்

42 உண்மை வழிநடத்தி எம்மை உகந்திடுவாய் நீ
உள்ளங்களை ஒளிமயமாய் உயர்த்திடுவாய் நீ

உனைத் தினமும் நினையுணர்வை யூட்டிடுவாய் நீ
உன்னிடத்தின் உதவிகளை தந்தருள் அல்லாஹ்

43 நாட்டமெல்லாம் நிறைவு பெறச் செய்தருள்வாய் நீ
நாட்களெல்லாம் நலம் பொழிந்து துணைபுரிவாய் நீ
நட்புடையோர் வேண்டுவதை ஏற்றருள்வாய் நீ

B

நஹ்னு ஸஅல்னாக்க அஜிப் ஆதியே அல்லாஹ்

44 ஏற்றுக்கொள்வாய் வேண்டுதலை ஏகனே அல்லாஹ்
எங்களுயர் நபி அவர்கள் நேசனே அல்லாஹ்
ஏதுமில்லை உனக்கு நிகர் எங்குமே அல்லாஹ்
என்றும் எமக்கருள் புரியும் ஆண்டவ அல்லாஹ்

45 இப்புகழ்மணக்கவி கோர்த்துரைத்த காஜி முஹம்மத்
இப்ராஹீமு வ நூரீ இப்னுல் காஜி முஹம்மத்
இன்னருளா லணைத்தருள் யாரப்ப முஹம்மத்
பிர்ரஹ்மத்தி ஜா ஜத்திப்பராஹீம் குத்புல்லாஹ்

46 அருள் மறையாம் இறைமறையின் நெறிமுறை வாழ்க!

B

அண்ணல் நபிநாயகத்தின் அருங்குணம் வாழ்க!!
அவனியில் நல்லறம் நிலைத்து ஆட்சியும் வாழ்க!
அனுதினமும் அருள்புரிவாய் ஆதியே அல்லாஹ்

47 அல்ஹம்து ம அஷ்ஷுக்ரி தவாமன் லக்க அல்லாஹ்
ஆமீன் வர்ஹம்னா ஜுத்னா நுஸ்ரத்த கல்லாஹ்
வஸல்லி அலா ஸய்யிதினா ரஹ்மத்தி கல்லாஹ்

B

வல்ஆலி வஸஹ் பின் இப்ராஹீம் குத்புல்லாஹ்

# இறை நினைவுத் தோத்திரப் பா

B BB

ஹஸ்பீ ரப்பீ ஜல் லல்லாஹ்

F Q B

மாபீ கல்பீ கைருல்லாஹ்
நூருமுஹம்மது ஸல்லல்லாஹ்
லாஇலாஹ இல் லல்லாஹ்

1 அருள்மிகும் இறைவா யாஅல்லாஹ்
அன்பாலணைப்பவன் நீ அல்லாஹ்
அனைத்தயுமாள்பவன் நீ அல்லாஹ
அருஞ்சுடர் பரப்பும் யா அல்லாஹ்

2 நீயே அனைத்தையும் படைத்தருளும்
நிகரிணை இல்லா நிஜப்பொருளும்
நீயே கதி எமக் கென்னாளும்
நிதமும் அருள்வாய் யா அல்லாஹ்

3 எங்கும் ஒளியா யுயர்ந்திலங்கும்
எங்கள் அகத்திருவாய்த் துலங்கும்
என்றும் உனதருள் அன்புபொங்கும்
எங்கள் இறைவா யா அல்லாஹ்

4 பார்க்கும் பொருளெல்லாம் பகரும்
பாங்கா யுந்தனை தினமுணறும்
பாக்கியப் பலனாம் பவம் தகரும்
பாத்திபப் பரம்பொருள் நீ அல்லாஹ்

5 உத்தம உளங்களில் திகழ்பவனே
உன்னத ஞானம் தருபவனே
ஊன்விழி காணா மிளிர்பவனே
உள்ளக ஜோதியே யா அல்லாஹ்

6 சார்ந்திடும் பக்தரை அணைத்திடுவாய்
சாயுச்சிய பதவியி லுயர்த்திடுவாய்
சந்ததமும் ஜெயம் தந்திடுவாய்
சத்திய சத்பொருள் நீ அல்லாஹ்

7 பேரொளியாகிய பரம் பொருளே
பேரின் பப் பாக்ய மீந்தருளே
பேதம் நீங்கிய மணத்தினுளே
பேரருள் பொழிவாய் யாஅல்லாஹ்

8 இன்புயர் இன்பத் தேனமுதாம்
இறைவா உந்தன் உயர் நினைவாம்
இதயங்களுக்குத் தெளிவதாம்
இடம் பெற்றுணற் ஊட்டும் அல்லாஹ்

9 உளங்களுக் கொளிதரும் உயர் நாமம்
ஓங்கும் அல்லாஹ் வெனும் நாமம்
ஓதுவோம் உந்தன் திருநாமம்
ஓர்மை மனதுடன் யாஅல்லாஹ்

10 பொல்லா வழியினில் செல்லாமல்
பொய்புறம் வசைமொழி சொல்லாமல்

எல்லாம் சதமெனக் கொள்ளாமல்
எங்களைக் காத்தருள் யாஅல்லாஹ்

11 தாக்கும் பிணிகளை தகர்த்திடுவாய்
தாவும் பகைவனை தாக்கிடுவாய்
தாழ்த்தும் குறைகளை நீக்கிடுவாய்
தகைமிகும் தற்பரன் நீ அல்லாஹ்

12 ஆர்த்திகை யகற்றி அடியருக்கும்
அனுதின முந்தன் அருள் சுரக்கும்
ஆதரித்தருள் புரிவாய் எமக்கும்
ஆதி பராபரன் நீ அல்லாஹ்

13 பெருகும் பிழைகளைப் பொருத்தருள்வாய்
பேரருளா லெம்மை பொதிந்திடுவாய்
பேரின்ப அமுதை புகட்டிடுவாய்
பெரும்புக ளிறைவா யாஅல்லாஹ்

14 உந்தன் நினைவால் உயரடைவோம்
உன்றன் அருளால் பலனடைவோம்
உன்னிடம் யாம் சரண் புகுவோம்
உகப்புடன் அணைத்தருள் யா அல்லாஹ்

15 வாய்மை மிளிரும் சன்மார்க்கம்
வான் புவி எங்கும் சௌபாக்கியம்
வாழ்கவே அகங்களில் அருள்வாக்கியம்
வாழ்வினில் வளம்பெறுவோம் அல்லாஹ்

16 எங்கும் பொங்குக அருளின்பம்
என்றும் நீங்குக பவதுன்பம்
எங்கள் அகங்களில் ஒளிபிம்பம்
என்றும் துலங்குக யா அல்லாஹ்

Z B

17 காஜீ இப்ராஹீம் நூரி
கவிக்கருள் ஆசி நிதம்கூறி
காருண்யனே உனதருள் வாரி
கருணை பொங்குக யா அல்லாஹ்

18 மாமுயர் சன்மார்க்கம் வாழ்க!
மாண்புயர் நபிமணி குணம் வாழ்க!
மக்கள் நல்வழி சார்ப்பாக!
மகிழ்வுடன் வாழ்க யா அல்லாஹ்

19 ஆமீன் ஆமீன் யா அல்லாஹ்
ஆமீன் ஆமீன் யா அல்லாஹ்
ஆமீன் ஆமீன் யா அல்லாஹ
ஆமீன் வர்ஹம் யா அல்லாஹ்

– இயற்றியவர் :– கீழக்கரை ஹமுஹம்மது இப்ராஹிம் நூரிய்யி

# இயல் 16

# கல்வெட்டு ஆதாரங்கள்

## I மதுரை கோரிப்பாளையம் தர்ஹா கல்வெட்டு

### 1) கல்வெட்டினைப் பொறித்தவர் மதுரை மன்னர் வீரப்ப நாயக்கர் - காலம் : கிபி 1573

1. சிவமயம்
2. சொஸ்த்தி
3. ஸ்ரீரிமன்
4. மகாமண்ட
5. லேசுரன் அரி
6. யராயள் தளவிப்
7. ரடன் பாசைக்கு
8. தப்புவராயிற் கண்
9. டன் மூவராயற்க
10. ண்டன் கண்ட
11. நாடு கொண்டு
12. கொண்ட நாடு
13. குடாதான்
14. பூறவதெஷ் (ச) ண
15. பச்சிம உத்தறச
16. த்துற்சமுத்தராத்து
17. ப(தி) பாண்டிமண்
18. டலஸதாரீபனா

19. சாரியன் சோ
20. ழமண்டல பிற
21. திட்டாபனாசாரி
22. யன் தொண்ட
23. மண்டல சண்ட
24. ப்பிறசண்டன் இ
25. ழமும்ங் கொங்கு
26. கம்பழமும் யாபர்
27. ணனாயிகப் பட்டண
28. மும் கேசரிவேட்
29. டை கொண்டரு
30. ளிய ராசா(தி)ராச
31. ன் ராசபறமேசுற
32. ன் ராசமாத்தாண்
33. டான் ராசகெம்பீ
34. றன் ராசாகள் நெரு
35. நீ(தி) ராசபரிபாலன்
36. ராசர்கள் நம்பிற
37. கோட்டத்தில் மன்
38. னிய கண்ட
39. ன் யுட்டருக்கு சம
40. நேர் பயங்கரன்
41. துட்டரில் துட்டன்
42. துட்ட நெட்டூரன்
43. துட்ட ராட்டற் தல
44. ர(ரக்) குத்தன் துட்ட பா
45. லன் ஒருகோல்ச்
46. சுலுத்தான் துல்க
47. லுக்கற் தளவிபா
48. டன் ஒட்டிய மோ
49. கந் தவிள்த்தான்
50. ஒட்டிய தளவிபா
51. டன் ஒட்டிய மோ
52. கந் தவிள்த்தான்
53. சமைங்கண்டன்
54. சமைய நாராயணன்

55. அட்ட ஆத்திரிய கம்ப
56. ன் செட்ட முடுமன்
57. னியற்முடியான் சம
58. மன்னன் நாராய
59. ணன் இரவிநாராய
60. ணன் வங்கிஷ் நா
61. ராயணன் வேதகு (லo
62. பிறதாபன் விரி
63. யப்பிறதாபன் கச்ச
64. ப்பிறதாபன் கனகப்
65. பிறதாபன் கீற்த்தி
66. ப்பிறதாபன் அவ
67. விருது கொண்டே
68. வலிறுதுவா மலை
69. கலங்கிலும் மநங்
70. கலங்காத கண்ட
71. ன் மன்னிய சூரதா
72. ரனாரணமுச் செந்
73. பீரெனாணமுக சுத்த
74. வீரன் வில்லுக்கு வின
75. சயன் சொல்லுக்கு ச
76. த்திய அரிச்சந்திரன்
77. குடைக்கி கற்னன்
78. தனத்துக்கு குபேறன் அ
79. ழகில் மன்மதன் வீரல
80. ட்சுமி விசையலட்சுமி
81. சந்தானலட்சமி சய
82. பாக்கிய லட்சுமி தி
83. யாகலட்சுமி போ
84. கலட்சுமி சவூரியலட்
85. சுமி கிரந்தலட்சுமி
86. அட்டலட்சமியும் பொ
87. ருந்திய மாற்பெ
88. ன் எட்டுத்திக்கு சத்த
89. சாகறமும் ஒருகு
90. டைக்குளாண்டு கொ

91. ண்டருளிய மல்லிகா
92. ச்சிணராயற் தேவ
93. மகாராயற் விருப்பா
94. ச்சிராயற் புசபெலரா
95. யற் வீரநரசிங்கரா
96. யற் ஆனைகுந்தி வெ
97. ங்கிடபதி தேவமகா
98. ராயற்குமரர் நரசி
99. ங்கியராயற் கிருஷ்ண
100. ராயற் ராமராயற் குமர
101. ர் கிஷ்டனராய றவற்
102. க்ள் காரியத்துக்கு காற்
103. த்தரான விசுனாத
104. னாயக்கற் கிருஷ்ண
105. ப்பனாயக்கற் வீரப்ப
106. னாயக்க ரய்யனவ
107. ற்கள் ராட்சிய பரி
108. பாலினம் பண்ணி
109. செய்தருளி நின்ற
110. சாலிவாகன சத
111. ரசத்துவம் சூசுள
112. ஷெயட்ருயருக்கு மேல் (செ)
113. ல்லா நின்ற பல
114. ளூதை மீ சம் யக
115. உ தீ சுபயோக சு
116. பகற்ணமும் கூடி
117. ன சுபதினத்தில்
118. மதுரை வளனா
119. ட்டில் வைகை ந
120. திக்கு வடக்காகிய
121. கோரிப்பாளையம்
122. தில்லி ஒருகோ
123. ல் சுலுத்தாற் பள்
124. ளிவாசல் கோ
125. ரிக்க சொரிகுடி
126. சொக்கிகுளம்
127. பீவிகுளம்

128. கன்னாநேம்
129. பல் சிறுதூற்
130. திருப்பாலே
131. இந்த ஆற்கிரா
132. மமும் முன் கூன்
133. ன்ம் பாண்டிய
134. ராசா யசுசூத
135. ங்கத்துக்கு கோ
136. ரிப்பாளையம் நி
137. லம் அடி ஒரு
138. தங்கத்துக்கு வி
139. லைப் பிரமாண
140. (ம்) நிச்சையம் பண்
141. ணிக்குடுத்து வில்
142. லு எல்கை கல்லு
143. (ம்)ப் போட்டுக் குடுத்து
144. நடந்து வந்தபடி
145. யினாலை யிதன்ம் பி
146. (ற்) கு ராசாக்களுக்கும்
147. மஸ்கருக்கும் தக்கம்
148. வந்து நாம் நாயம் வி
149. சாரிக்கும்போது பா
150. ண்டியற் கோரிக்கு
151. விலைப்பிரமாணம் ப
152. ண்ணிக்குடுத்த அத்
153. தாச்சினை நிலவர
154. மான படியினாலே
155. முன்நடந்தவடிக்கு
156. நாமும் அபிமானி
157. ச்சு கோரிக்கு விட்
158. டுக் குடுத்தோம்
159. எல்கை முன்ம் பா
160. ண்டியர் னாட்டின
161. கல்லு எல்கைப்படி
162. க்கு யிந்த ஆ(று) கிரா
163. மதில் உள்ள ச
164. கல சமுத்ற ஆ

165. தாயமும் சுகமே
166. எண்எண்ணை
167. தாயமும் சுகமே
168. எண்எண்ணை
169. க்கும் சூரியப்பெற
170. வேசம் உள்ள ம
171. ட்டுக்கும் சுகமே ஆ
172. ண்டு அனுபவித்
173. துக்கொள்ளு
174. வராகவும்
175. ........
176. ........
177. யினிமேல் அரா
178. கிலு., தக்க(ம்) பண்
179. ணி தொரொகம்
180. பண்ணினால் கெ
181. ங்கை கரையில்க்
182. காராம் பசுவை கொ
183. ண்ண பாவத்திலே
184. ..............

வரி 110 - 112 சகாப்தம் 1495

வரி. 134 - 135 1400 தங்கம்

# இயல் 17

## ஏர்வாடி தர்ஹா

**ஏ**ர்வாடி என்ற சிற்றூர் இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதியில் கீழக்கரைக்குத் தெற்கே 5 கல் தொலைவில் அமைந்துள்ளது. இராமேஸ்வரம் தூத்துக்குடி செல்லும் நெடுஞ் சாலையில் இந்த ஊர் அமைந்திருந்தாலும் புனித செய்யது இபுறாகீம் சகீது (வலி) அவர்களது நினைவிடத்தைச் சுட்டும் எர்வாடி தர்ஹா இந்த நெடுஞ்சாலையிலிருந்து கிழக்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. ஏர்வாடி என்ற இந்த ஊரின் பெயருக்கேற்ற பொருள் அறியத்தக்கதாக இல்லை. ஏறு பதி என்ற சிறப்பான தலம் என்ற பொருளைத் தரும் சொல்தான் பிற்காலத்தில் ஏர்வாடி என திரிபு பெற்றிருக்க வேண்டும். நெல்லை மாவட்டத்தில் நான்குனேரி வட்டத்தில் ஏர்வாடி என்ற பிறிதொரு ஊர் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது இந்த ஊர் கல்வெட்டில் புலியூர் அஞ்சு வண்ணம் என காணப்படுகிறது என்றாலும் இராமநாதபுரம் மாவட்டத்து ஏர்வாடிக்குள்ள வரலாற்று சிறப்பும் பெருமையும் அந்த ஊருக்கு இல்லை.

புனித சுல்தான் செய்யது இபுறாகிம் சகீது அவர்கள் கி.பி. 1198ல் விக்கிரம பாண்டியனுடன் போர் புரிந்து புகழுடம்பு பெற்ற தலம் இந்த ஏர்வாடி தர்ஹா ஆகும். தர்ஹா என்ற அரபிச் சொல்லுக்கு மகான்களின் அடக்கவிடம் என்பது பொருள். பாண்டிய நாட்டிற்கு

புதிய சமயமான இஸ்லாத்தை பரப்புவதற்கென்றே கி.பி. 1187ல் காயல்பட்டினம் என்ற துறைமுகத்துக்கு வந்த சேர்ந்தவர்கள் இந்த மஹான். இவர் அரபு நாட்டில் இஸ்லாம் என்ற ஏக தெய்வ வழிபாட்டினைப் புகுத்திய முகம்மது நபி அவர்களது மகள் வழியில் 18 ஆவது தலைமுறையில் வந்தவர். இந்தப் பெருமகனது பெருமை மிக்க சமயப் பணியினையும், உயிர்த்தியாகத்தையும் அறிந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் குமார முத்து விஜய இரகுநாத சேதுபதி அவர்கள் இந்தப் புனித இடத்தில் பராமரிப்பிற்கென கி.பி. 1742ல் மாயாகுளம் என்ற மூவாயிரம் குறுக்கம் விளை நிலங்களைக்கொண்ட ஊரினை சர்வ மான்யமாக வழங்கினார். அப்பொழுது இந்த மகானது நினைவிடம் எப்படி இருந்தது என்பது அறியத்தக்கதாக இல்லை. ஆனால் கி.பி. 1772ல் சேது நாட்டின் மீது படையெடுத்து வந்து சேதுபதி மன்னரை சிறைக்கைதியாக பிடித்துச் சென்ற ஆர்க்காட்டு நவாப் முகம்மது அலி சாஹிபின் உத்தரவின் பேரில் அவரது தளபதி இப்திகார்கான் இந்த மஹானது நினைவிடத்தை தற்பொழுது உள்ள அமைப்பில் கட்டுமானம் செய்தார் எனத் தெரிய வருகிறது. இந்தப் பணி கி.பி. 1772க்கும் 1775க்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றப் பட்டிருத்தல் வேண்டும். இதனை ஏர்வாடி தர்ஹாவின் புனித மஹானது நினைவிடத்திற்கு நுழையும் நிலைப்படியிலுள்ள பாரசீக மொழிக் கல்வெட்டு புலப்படுத்துகிறது. அதனைத் தொடர்ந்து இந்தக் கட்டுமானத்தில் பெரிய மாற்றங்கள் எதுவும் இதுவரை செய்யப் படவில்லை.

இந்த தர்ஹா மற்றும் சம்பந்தப்பட்ட ஒளிப் படங்கள் அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

❖

ஏர்வாடியில் அமைந்துள்ள புனித சுல்த்தான் செய்யது இப்ராஹீம் ஷஹீது (வலி) அவர் களது அடக்கவிடத்திற்குச் செல்லும் அலங்கார நுழை வாயில்.


MANAGEMENT COMMITTEE
OFFICE

புனித செய்யது இப்ராஹீம்
ஷஹீது (வலி) அவர்களது
அடக்கவிடத்திற்குச்
செல்லுவதற்கான இரண்டாவது
நுழைவு வாயில்.



புனித சுல்தான் செய்யது இப்ராஹீம் ஷஹீது (வலி) அவர்களது புனித இடத்தையும், சுற்றுப்புறத்தையும் காட்டும் ஒளிப்படம்.



ஏர்வாடி புனித செய்யிது சுல்த்தான் இப்ராஹீம் ஷஹீது (வலி) அவர்களது அடக்க விடம். இங்கு உள்ள பாரசீக மொழி கல்வெட்டின் வாசகத் தின்படி, இந்தக் கட்டுமானத்தை கி.பி. 1772 - கி.பி. 1775 - க்கும் இடைப்பட்ட காலத்தில், ஆற்காடு நவாப் வாலாஜா முஹம்மது அலி சாகிப் அவர் களது தளபதி இப்திகார்கான் என்பவரால் அமைக்கப்பட்ட தாக அறிய முடிகிறது.



ஏர்வாடி தர்ஹாவின் வளாகத்தில் அமைக்கப்பட்ட புதிய தொழுகைப் பள்ளியின் மினாரா.



ஏர்வாடி தர்ஹாவின் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொழுகை பள்ளியின் முன்புறத் தோற்றம்.



சுல்த்தான் செய்யது இப்ராஹீம் அவர்கள் பாண்டியனுடன் நடந்த போரில் கலந்து கொண்டு ஷஹீது ஆன துல்காயிதா மாதம் பிறை 23 இரவு அன்று ஏர்வாடி தர்ஹாவில் கந்தூரி திருவிழா ஒவ்வொரு ஆண்டும் நடை பெறுகிறது. அந்த விழாவின் இறுதி நிகழ்ச்சியாக ஏர்வாடி குடியிருப்பில் இருந்து தர்ஹா விற்கு மேளதாளத்துடன், வான வேடிக்கைகளுடன் எடுத்துச் செல்ல இருக்கும் சந்தன கூட்டின் ஒளிப்படம் இது. சுல்த்தான் அவர்கள் போருக்குத் தேரில் சென்றதைக் குறிப் பிடுவது இந்தச் சந்தனக் கூடு.



ஏர்வாடியில் அடக்கம் பெற்றுள்ள புனித செய்யது இப்ராஹீம் (வலி) அவருடன் தோளோடு தோள் நின்று, விக்கிரம பாண்டியனுடன் போர் புரிந்து கி.பி. 1798 - ல் ஷஹீது (உயிர்த் தியாகி) ஆன தளபதி அப்பாஸ் அவர்களது நினைவிடம்.



# இணைப்புகள்

## 1 சுல்த்தான் செய்யது இபுராஹிம் அவர்களது வாழ்க்கையின் சிறப்பான நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெற்றோர்கள் | -- | தந்தை - செய்யது அஹமது<br>தாயார் - பாத்திமா பீவி |
| 2) | சுல்த்தான் செய்யது | -- | ஹிஜ்ரி 530 ரமலான் பிறை 3 இப்ராஹிம் பிறப்பு (A.D. 6 June 1336) |
| 3) | அன்னாரது திருமணம் | -- | ஹிஜ்ரி 555 (A.D. 12 January 1160) |
| 4) | சமயப்பணிக்கென இந்தியா வந்தது | -- | ஹிஜ்ரி 557 (A.D. 21 December 1161) |
| 5) | சிந்து குஜராத்திலிருந்து மதினா திரும்புதல் | -- | ஹிஜ்ரி 560 |

| | | |
|---|---|---|
| 6) | தந்தையார் இயற்கை எய்தியதும் சுல்த்தான் மதினா மாநகரின் பொறுப்பை ஏற்றதும் | -- ஹிஜ்ரி 564 |
| 7) | பாண்டிய நாட்டில் சமயப்பணி செய்ய ஜித்தாவிலிருந்து புறப்பாடு | -- ஹிஜ்ரி 582, ஜமாதுல் ஆகிர் (A.D. 24, March 1186) |
| 8) | சுல்த்தான் அவர்கள் பாண்டிய நாட்டின் காயல் நகருக்கு வந்து சேர்ந்தது | -- ஹிஜ்ரி 583 (13 March 1187) |
| 9) | விக்ரம பாண்டியனைக் கொன்று ஷரிஅத் ஆட்சியை ஏற்படுத்தியது | -- ஹிஜ்ரி 583, துல்கயிதா பிறை 10 (11 January 1188) |
| 10) | பாண்டியனுடன் நடை பெற்ற இறுதிப் போரில் வீரமரணம் எய்தியது | -- ஹிஜ்ரி 594 துல் காயிதா, பிறை 23 (26 September 1198) |

❖

# 2. சில குறிப்புகள்

1) சுல்தான் செய்யது இபுராஹிம் பாண்டிய நாடு வந்த பொழுது பௌத்திர மாணிக்கப் பட்டினத்தில் ஆட்சி செய்த விக்கிரம பாண்டியனை நினைவூட்டும் இரு ஊர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளன. முதுகளத்தூருக்கு அண்மையில் விக்கிரமபாண்டியபுரம் என்ற ஊரும் இராமநாதபுரத்திற்கு தென் கிழக்கே தெற்குத் தரவை ஊராட்சியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள விக்கிரம பாண்டியன் வலசை என்பதும் அந்த ஊர்களாகும்.

2) இராமநாதபுரம் சீமையின் தன்னரசு மன்னராக விளங்கிய முத்துராமலிங்க சேதுபதியை 3.6.1772 இல் நடைபெற்ற போரில் தோல்வியுறச் செய்து விட்டு சேதுநாட்டை 8 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்தார் ஆற்காட்டு நவாப் முகமதலி. அவரது தளபதியான கான் என்பவர் ஏர்வாடிக்கு வருகை தந்து சுல்தான் செய்யது இபுராஹிமின் அடக்கவிடத்திற்கு ஜியாரத் செய்தார். அப்பொழுது அவர் சுல்தான் செய்யது இபுராஹிமின் அடக்கவிடத்தின் மேற்குப் பகுதிச் சுவற்றில் ஒரு கல்வெட்டினையும் பதித்துள்ளார். அதில்

''இதுதான் சுல்தான் செய்யது இபுராஹிமின் இல்லம்'' எனப் பாரசீக மொழியில் பதிவு செய்துள்ளார்.

3) ஏர்வாடி சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்களது நினைவு நாளான துல்காயிதா பிறை 23 அன்று நடைபெறும் கந்தூரி விழாவில் இராமநாதபுரம் மன்னர்கள் கலந்து கொண்டு சுல்தான் அவர்களுக்கு காணிக்கை செலுத்தும் வழக்கம் அண்மைக் காலம் வரை இருந்து வந்தது.

4) ஏர்வாடிப் பகுதிக்கு முதன் முதலில் சுல்தான் செய்யது இபுராஹிம் அவர்கள் வந்தபொழுது அவர்களுக்கு உகந்தவர்களாக தொண்டு செய்து வந்த இடைக்குடி மக்களின் வழியினர் இன்றும் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி விழாவின் 15 நாட்களும் தர்ஹாவின் நிகழ்ச்சிகளில் உணர்வுப் பூர்வமாகப் பங்கெடுத்துக் கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

❖

இராமநாதபுரம் தமிழ்ச் சங்க நிறுவனர், 35 ஆண்டுகளாக பல இலக்கிய, வரலாற்றுக் கருத்தாய்வு அரங்குகளை நடத்தியவர், மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் மற்றும் 12 இலக்கிய, வரலாற்று அமைப்புக்களின் செயற்குழு, பொதுக்குழு,மாநிலக் குழுக்களின் ஆயுள் உறுப்பினர், திருவருட்பேரவை மாநில செயற்குழு உறுப்பினர்.
உலகத் திருக்குறட்கழக மாநிலக் குழு உறுப்பினர்.

**நூலாசிரியர்**

1. இராமநாதபுரம் மாவட்ட வரலாற்றுக் குறிப்புக்கள் (1984)
2. விடுதலைப் போரில் சேதுபதி மன்னர் (1987)
3. மாவீரர் மருது பாண்டியர் (1989)
4. முஸ்லீம்களும், தமிழகமும் (1990)
5. மன்னர் பாஸ்கர சேதுபதி (1992)
6. சேதுபதி மன்னர் செப்பேடுகள் (1994)
7. சேதுபதியின் காதலி (1996)
8. சீர்மிகு சிவகங்கைச் சீமை (1997)
9. சேதுபதி மன்னரும், ராஜ நர்த்தகியும் (1998)
10. திறமையின் திரு உருவம் ராஜா தினகர் (1999)
11. செந்தமிழ் வள்ளல் சீதக்காதி (2000)
12. மறவர் சீமை மாவீரன் மயிலப்பன் (2001)
13. சேதுபதி மன்னர் கல்வெட்டுக்கள் (2002)
14. சேதுபதி மன்னர் வரலாறு (2003)
15. இராமர் செய்த கோயில் (2004)



**Dr.S.M. கமால்**

**பெற்ற விருதுகள்**

இமாம் சதக்கத்துல்லா அப்பா விருது, தமிழ்ப்பணிச் செம்மல் விருது, சேது நாட்டு வரலாற்றுச் செம்மல் விருது, பாஸ்கர சேதுபதி விருது, சேவாரத்னா விருது, தமிழ்மாமணி விருது, தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க விருது, வள்ளல் சீதக்காதி விருது, பசும்பொன் விருது.